

அமுதசுரபி
டிசம்பர் 1992
விலை ரூ. 5

ACC-NO 10584

அமுதசுரபி

★ டிசம்பர் 1992 ★ மலர் : 45 ★ இதழ் : 8 ★ ஆங்கிரஸ மார்கழி
★ விலை : ரு. 5 ★ ஆண்டுச் சந்தா : ரு 60 ★ பதிப்பாளர் : ஏ.வி.எஸ். ராஜா.
★ கௌரவ இலக்கிய ஆலோசகர் : என்.வி. சுப்பிரமணியன் ஐ.ஆர்.டி.எஸ்.
★ ஆசிரியர் கலைமாமணி விக்கிரமன் ★ இதழ் ஆ:ப்செட் அமைப்பு : சிவகுமார். ● மேலட்டை ஓவியம் : ஜி.கே. மூர்த்தி

எங்கள் தமிழ் மொழி
எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே
—பாரதியார்

இந்த இதழில்

இலக்கியப் பரிசுகள்

வெல்வெட் ஷாம்பு நிறுவனத்துடன் 'அமுதசுரபி' இணைந்து நடத்தும் சிறுகதைப் போட்டி-

ஸ்ரீ.வி. பிலிம்ஸ் லிட். நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் சிறந்த நூல்; சிறந்த நாவல் (கையெழுத்துப்பிரதி); சிறந்த பாரதி ஆராய்ச்சி நூல் - பரிசுப் போட்டிகள்.

எம் ஆர் எல் நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் சிறந்த அறிவியல் நூல்களுக்கான பரிசு -

இவ்வளவு பரிசுகளும் டிசம்பர் மாதம் 20ஆம் தேதி நடைபெறும் இலக்கிய விழாவில் அளிக்கப்பட இருக்கின்றன.

தமிழில் நல்ல படைப்புகள் வெளிவர ஊக்கமளிப்பதே இந்தப் போட்டிகளை நடத்துவதற்கான குறிக்கோள்.

தமிழ் எழுத்தாளர் நலநிதி அறக்கட்டளையும், ஸ்டேட் பாங்கும் இணைந்து சிறந்த இலக்கிய நூல்களுக்கான பரிசு அளிப்பதைப் பற்றிய அறிவிப்பு 'அமுதசுரபி'யில் சில மாதங்களுக்கு முன்பு வெளிவந்தது நினைவிருக்கலாம்.

1991ஆம் ஆண்டிற்கான பரிசு முடிவுகள் இப்போது அறிவிக்கப்படுகின்றன.

மரபுக்கவிதை : முதல் பரிசு - பா. முனியமுத்து
இரண்டாவது பரிசு - செ. பன்னீர்செல்வம்

புதுக்கவிதை : முதல் பரிசு - தமிழ் மணவாளன்
இரண்டாவது பரிசு - பாலா

சிறுகதை : முதல் பரிசு - வையவன்
இரண்டாவது பரிசு - சோலையூர் சுந்தரப் பெருமாள்

நாடகம் : முதல் பரிசு - புலவர் தாமரைக்கண்ணன்
இரண்டாவது பரிசு - நாகர்கோவில் கிருஷ்ணன்

கட்டுரை : முதல் பரிசு - சி. முருகசெல்வம்
இரண்டாவது பரிசு - ஆர்.எஸ். மணி

நாவல் : முதல் பரிசு - ஜெயரதன்
இரண்டாவது பரிசு - சியாமளா ராவ்

முதல் பரிசு இரண்டாயிரமும், இரண்டாவது பரிசு ரூ. ஐநூறு-ம் அளிக்கப்படுகின்றன.

மலரும் மணமும்

தினத்தந்தி

வழக்கம்போல் அமுதசுரபி தீபாவளி மலர் பார்க்கவும், படிக்கவும், ரசிக்கவும் ஏற்ற கலைக்களஞ்சியமாகத் திகழ்கிறது. பக்கத்துக்குப் பக்கம் வண்ணப்படங்கள்.

வைரமுத்து, ஆர். சூடாமணி, ராஜேந்திரகுமார், அனுராதா ரமணன், சு. சமுத்திரம், கோ.வி. மணிசேகரன், லட்சுமி ராஜரத்தினம், எம்.எஸ். உதயமூர்த்தி, புஷ்பா தங்கதுரை, க. பஞ்சாபகேசன் மற்றும் பல எழுத்தாளர்களின் கதை - கட்டுரைகள் மலரை அலங்கரிக்கின்றன. பா.ரதிராஜா ஒரு படத்தை எப்படி உருவாக்குகிறார் என்பதை வண்ணப் படங்களுடன் விளக்கும் கட்டுரை சுவையாக உள்ளது.

தினமணி

கந்தன் வயோதிக வேடம் கொண்டு வள்ளியை மணம் புரிய வந்த கோலம். தம்பிக்கு உதவ அண்ணன் கணபதி யானையாக வந்து, வள்ளியை அச்சுறுத்த, வள்ளி, முருகன் திருமார்பில் அஞ்சித் தலை சாய்க்கும் எழிலார்ந்த திருக்கோலம். கந்தபுராணத்தின் இந்தக் காட்சியை அட்டையில் சித்திரிப்பவர் கோபுலு.

மலரின் சிறப்புக் கட்டுரைகளாகக் குறிப்பிடத்தக்கவை இரண்டு. ஒன்று பாண்டிச்சேரி அன்னை மிர்ராவின் பக்தரான அமுதசுரபி எழுத்தாளர் கர்மயோகி, 'எழுத்து எப்படி உருவாகிறது, எழுத்தாளர் எப்படிப் பரிணமிக்கிறார்' என்ற அலசலோடு எழுதியுள்ள உயரிய கட்டுரை. இன்னொன்று, ரா. கணபதி எழுதியுள்ள கட்டுரை. காஞ்சிப் பெரியவர் பற்றி ஸ்ரீ சத்ய சாயிபாபா என்ன கருதுகிறார் என்பதும், சத்யபாபா கடவுளின் அவதாரம் என்பது பற்றி காஞ்சி மாமுனிவர் என்ன கருதுகிறார் என்பதும் பக்தர்களின் நெஞ்சில் பல்லாண்டுகளாக எழும் வினாக்களாகும். இந்த வினாக்களுக்கு விடை காணும் வகையில் ரா. கணபதியின் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

கட்டுரைகளில், ப. சிவகாமியின் 'உலாவரும் சுற்றுலா', டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியனின் 'பாவேந்தர் கண்ட பாரதி', எம்.எஸ். உதயமூர்த்தியின் சுயமுன்னேற்றக் கட்டுரை, வாலியின் 'காஞ்சனமாலை' குறித்து டி.எஸ். கோதண்டராமன் எழுதியுள்ள கட்டுரை, இரா. கலைக்கோவன், தாமரைக் கண்ணன் ஆகியோரின் கலைக் கட்டுரைகள், திருவாரூர் பற்றி அடியார்க்கு நல்லான் எழுதியுள்ள கட்டுரை, விளையாட்டுத்துறையில் டென்னிஸ் கிருஷ்ணன், ரமேஷ் கிருஷ்ணன் பற்றி குண்டுமணி - விளையாட்டாக அல்ல - சீரியஸாக எழுதியுள்ள கட்டுரை எனப் பற்பல குறிப்பிடத்தக்கவை.

மலரில் சிறுகதைகளும் நிறைய உண்டு. பி.வி.ஆர்., ஆர். சூடாமணி, சு. சமுத்திரம், வாஸந்தி, ஜோதிர்லதா கிரிஜா, ராஜம் கிருஷ்ணன், விக்கிரமன், க. பஞ்சாபகேசன் என்று இன்னும் பற்பலர் சிறுகதை படைத்திருக்கிறார்கள். கோவி. மணிசேகரன் ஒரு சரித்திரச் சிறுகதையைப் படைத்துள்ளார்.

கண்ணதாசனைப் பற்றி நா. காமராசன் எழுதியுள்ள கவிதை உள்பட பற்பல புதுக் கவிதைகள் மலரை அலங்கரிக்கின்றன.

THE HINDU

Amudhasurabhi : The religious significance of the festivals has been emphasised by features on Ramanuja, Madhwacharya, Sathya Sai Baba, Kanchi Jagadgurus, Haridos Giri and other religious leaders. Vikraman and Naa. Ramachandran have contributed two interesting short stories. A piece on Lalgudi Jayaraman and his Padavarnam meant for dance and another on Kalakshetra cover the fine arts section. Colour pictures of Gods and Goddesses find a place. The cinema and drama fans will find satisfaction in the write-ups on K. Balachandar, Bharati Raja, Mani Ratnam and Heron Ramaswami. A poem on Kannadasan and an article on Ramesh Krishnan. the tennis player are other readable items. The wrapper carries an pictorial episode from Valli Thirumanam by Gopulu.

INDIAN EXPRESS

Amudhasurabhi's 45th Deepa - vali malar (384 pages, Rs. 35) is a feast for the eyes and mind.

The cover features *Valli Thiru manam* and the issue opens with a message from Sri Jayendra Saraswathi Swamigal of Kanchi Kamakoti peetam. Life-like portraits by G.K. Murthy that complement articles on Madhvacharya, Sri Sathya Sai Baba, Ramanujacharya, Swami Haridas Giri, Sri Ganapathi Sachidanantha Swamigal and Sri Seetharama Swamigal go to make the issue a collector's item for the religious-minded.

The list of short story writers featured in the Malar reads like a who's who in Tamil writing. Vikraman, Justice Mohan, P V R, Lakshmi Rajaratnam, Rajesh Kumar, Rajendra Kumar, Jayaradhan, Vaasanthi, Jothirlata Girija, Rajam Krishnan, Pushpa Thangadurai, Anuradha Ramanan, Thilagavathi, Ko Vi Manisekaran and K Pancha-pakesan provide an enjoyable fare.

எஸ்.கே.எஸ். மருத்துவமனை



அறுவை சிகிச்சையின்றி பித்தப்பை மற்றும் குடல்வால் (அப்பண்டிக்ஸ்) நோய்களை எளிதாக லேப்ரோஸ்கோப் முறையில் குணப்படுத்தும் உத்தியைச் சேலத்தைச் சேர்ந்த டாக்டர் பி. சண்முகம் தென்னிந்தியாவில் முதல் முறையாக அறிமுகப் படுத்தியிருக்கிறார்.

பித்தப்பையில் கல் சேர்ந்தாலும் குடல்வாலை அகற்றவும் வழக்கமாக பெரிய அறுவை சிகிச்சை செய்துதான் குணப் படுத்த முடியும். ஆபரேஷன் முடிந்தவுடன் குறைவாக 10 நாட்களாவது மருத்துவமனையிலும் பின்னர் 2 மாதங்கள் வரை வீட்டில் ஓய்வும் எடுத்து வர வேண்டும்.

ஆனால் நவீன லேப்ராஸ்கோப் முறையில் சிகிச்சை பெற்றவர்கள் மருத்துவமனையில் 2 நாட்கள் தங்கி இருந்தால் போதும். வீட்டில் ஒரு வார ஓய்விற்குப்பிறகு சகஜ வாழ்க்கைக்குத் திரும்பிவிட லாம். அறுவை சிகிச்சை செய்த இடத்தில் தழும்புகள் இருக்காது. தவிர எவ்வித வலியும் தெரியாது. அன்று மாலையே நோயாளிகள் திட உணவு உட்கொள்ளலாம்.

லேப்ராஸ்கோப் முறை 1989 ஆம் ஆண்டில் அமெரிக்க நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டது. இந்த டெக்னிக்கை டாக்டர் சண்முகம் மலேசியாவில் உள்ள புகழ்பெற்ற சொசைட்டி ஆப் கேஸ்ட்ரோ என்டிரியாலஜி மற்றும் ஹேபடாலஜி என்ற இடத்தில் கற்றுத் தேர்ந்தார். பிறகு சேலத்தில் உள்ள எஸ்.கே.எஸ். மருத்துவமனையில் இத்தகைய டெக்னிக்கை அறிமுகப்படுத்தி வெற்றி கண்டிருக்கிறார். இது வரை 64 அப்பண்டிக்ஸ் நோயாளிகளுக்கு இம்முறையில் சிகிச்சை அளித்து இருக்கிறார்.

"ஆபரேஷன் செலவைப் பார்க்கும்போது லேப்ராஸ்கேப் சிகிச்சைக்கு ஆகும் செலவு மிகவும் குறைவு. மேலும் நேரம், காலம் மிச்சமாகிறது. மருத்துவமனையில் தங்கி இருக்கும் செலவுகளும் மிகக்குறைவு. இதற்காக விலை உயர்ந்த கருவிகள் ஜெர்மனியில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே மூன்றாவதாகவும் தென்னகத்தில் முதலாவதாகவும் சேலம் எஸ்.கே.எஸ். மருத்துவமனையில் இச்சிகிச்சை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது" என்று கூறுகிறார் டாக்டர் சண்முகம்.



மகாகவி பாரதியாரின் 111ஆவது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடி, மாகவிஞனுக்கு நம் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கவிஞன் கனவு காண்கிறான். நியாயமான, நிறைவேற வேண்டிய இலட்சியத்தைப் பாடுகிறான். அது பிற்காலத்தில் நிறைவடையும்போது கவிஞனின் தீர்க்க தரிசனத்தைப் பெரிதும் புகழ்கிறோம்.

மகாகவி பாரதியார் நாட்டு விடுதலையைப் பற்றிப் பாடினார். விடுதலை கிடைத்தது. பெண் விடுதலையைப் பற்றிப் பாடினார். பெண்கள் ஆண்களுக்குச் சமமாக விளங்க வேண்டும் என்று பாடினார்.

இன்று எல்லாத் துறைகளிலும் பெண்கள் முன்னேறிச் சிறந்து விளங்குவதைக் காண்கிறோம்.

21ஆவது நூற்றாண்டிற்குள் பெண்களை ஆண்கள் மிக மதித்துச் சமமாக நடத்தும் செயல் ஓங்கி நிற்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த இதழ் மேலட்டையில் ஓவியர் ஜி.கே. மூர்த்தி மகாகவியை நினைவுப்படுத்துகிறார்.

For the more seriously-inclined are critical pieces like *Pavendar kanda Bharathiyar, Tamizh thendral Thiru Vi Ka and Manakkula Vinayagarum Mahakavi Bharathiyarum.* Plus delightful little verses by Devaki Muthiah,. Vairamuthu, Na Kamarasan, Revathi Sankaran, Mu Mehta, Nirmala Suresh and others.

There is something for the film buffs too - a picture story of the shooting of Bharathiraja's latest venture 'Captain Magal' starring the current craze, Kushboo! Curiously, the Malar has given the go-by to posters of film heroes and heroines and instead fetures the three stalwarts of Tamil filmdom - K Balachander, Bharathiraja and Maniratnam. There is also an interview with theatre personality Heron Ramasami and an analysis of lullabies in Tamil films.

Articles on ancient architecture, ancient musical instruments, temple jewellery, Tanjore painting (by Jaya Chandrasekaran) and on music doyens (by Vanathi Thirunavukkarasu) will gratify art lovers.

The issue is embellished with works in colour and black-and-white of artists Silpi, Gopulu, Suba, vinu, Maya, G.K. Murthy, Maruthi, Ramu, Jayaraj, Maniam Selvan, Aras and others.

ஸ்படிக லிங்கம்

புவனேச்வரிதாசன்

ஸ்படிக லிங்கம் - இது ஆங்கிலத்தில் கிரிஸ்டல் குவார்ட்ஸ் என்று அழைக்கப்படும். இந்தக் கல்லானது இந்தியாவில் கேம்பே என்ற இடத்தில் அதிகமாகக் கிடைக்கிறது. இந்தக் கல் ஸ்படிகம் என்று சம்ஸ்கிருதத்தில் சொல்லப்பட்டு, இதற்குப் புனிதத் தன்மையும் தெய்விகத் தன்மையும் இருப்பதாகப் போற்றப்பட்டு வருகிறது. ஓர் அடி உயரத்தில் இந்த ஸ்படிகத்தில் ஒரு லிங்கமொன்றைப் பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமிகள் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். சென்னை அம்பத்தூர் ரெட் ஹில்ஸ் சாலையில் உள்ள கங்கை நகரில் அமைந்துள்ள ஸ்ரீபரத்வாஜ ஆச்ரமத்தில் பக்தர்கள் தங்கள் கைகளால், தொட்டு நன்னீரால் அபிஷேகம் செய்வதற்கும் பூஜை செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. பிரதோஷ காலம், சிவராத்திரி, பக்தர்களின் பிறந்த தினம் இந்த நாட்களில் இப்பூஜையினைப் பக்தர்கள் நடத்தலாம்.

இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால் இந்த ஸ்படிக லிங்கத்தின் ஆதார பீடம் என்று சொல்லப்படும் ஆவுடையார் மரகதக் கல்லினால் ஆனது. நவரத்தினத்தில் ஒன்றான மரகதம் மிகவும் விலை உயர்ந்ததாகும். இந்த ஸ்படிக லிங்கத்தை உருவாக்கியவர் மேற்கு மாம்பலத்திலுள்ள புகழ் பெற்ற திரு. லக்ஷ்மி நரசிம்மன் ஸ்தபதி ஆவார். இந்த ஸ்படிக லிங்கம் ஆச்ரமத்தில் கைலாஸ மண்டபத்தில் ஸ்ரீஅம்ருத ஜ்யோதி லிங்கேஸ்வரராகக் காட்சி அளிக்கிறார். தும்புரு, நாரதர், பதஞ்சலி வியாக்ர பாதர் - இந் நால்வரும் பரமேஸ்வரனைத் துதி பாடி ஸ்தோத்ரம் செய்ய, ஸ்படிக லிங்கத்தினைச் சுற்றி மரகத சிவலிங்கங்கள் நான்கும், நந்திதேவரும், (இதுவும் மரகதக் கல்லினால் ஆனதே) அமைய, பிரம்மா, விஷ்ணு, மகா கணபதி, குபேரன் ஆகிய தேவர்கள் சலவைக் கல்லினால் செதுக்கப்பெற்று, மண்டபத்தில் எழுந்தருளி காட்சியளிக்கின்றனர்.



இந்த ஸ்படிக லிங்கத்திற்கு மகா சிவராத்திரி தினத்தன்று திரிதள வில்வம், மகாவில்வம், தசதளவில்வம் இவற்றைக் கொண்டு, சிவஸஹஸ்ர நாமங்கள் பத்தினைக் கொண்டு ஸஹஸ்ர நாம அர்ச்சனைகள் நடைபெறும். மிகவும் விசேஷமாக தீபாவளி தினத்தன்று காசியில் ஸ்ரீவிஸ்வநாத ஸ்வாமிக்கு ஸப்தரிஷி பூஜை நடப்பது போலவே இந்த ஆச்ரமத்திலும் ஏழு பண்டிதர்கள் மஞ்சள் சிவப்பு வஸ்திரம் தரித்துக் கொண்டு தலை, கழுத்துப் பாகங்களில் உத்திராக்ஷ மாலைகள் அணிந்துக் கொண்டு, ஆறு மணி நேரம் சிவபூஜையினை , நடத்துவார்கள். ஏழு பண்டிதர்களுக்கு ஸ்வாமிகளின் புதல்வர் ஸ்ரீராம கிருஷ்ண பரத்வாஜ் தலைமையேற்று பூஜை நடத்துவார். ஸ்படிக லிங்கத்தின் மீது அபிஷேகம் செய்த புனித நீர் - இதனைப் பருகுவதால் கொடிய நோய் தீருமென்றும், இந்த நீரை உடம்பில் தேய்த்துக் கொள்வதால் சரும வியாதி மறைகிறது என்றும் விஞ்ஞான ரீதியாய்க் கூட ஏற்றுக் கொள்ளலாம் என்பதை ஸ்ரீஸ்வாமிகள் தெரிவிக்கிறார்கள்.

இந்த ஆச்ரமத்தில் இந்த ஸ்படிக லிங்கப் பிரதிஷ்டையின் காரணம் - காலச் சூழ்நிலை

கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ் (பதிவு)

39, பீமண்ண முதலி கார்டன் தெரு, சென்னை 600 018. தொலைபேசி: 73388

18 ஆம் ஆண்டு கலை விழா-92 தொடக்கநாள் நிகழ்ச்சி

நாள், நேரம்: 1992 டிசம்பர் 11, மாலை 6 மணி இடம்: மியூசிக் அகாடமி ஹால்

விழாத் தலைமை: திரு. எம்.ஏ. சிதம்பரம், தலைவர், ஸ்பிக் லிமிடெட்.

விழாவில் திரு. லால்குடி ஜி.ஜே.ஆர். கிருஷ்ணன் அவர்களுக்கு 'இசைப் பேரொளி' விருது வழங்கப்படும்.

பாராட்டுரை:

திரு. டி.வி. வெங்கடராமன், இ.ஆ.ப., தலைமைச்செயலர், தமிழ்நாடு அரசு.

திரு. கே.என். வெங்கட சுப்பிரமணியன், தலைவர், இந்தியன் ஆயில் கார்ப்பொரேஷன், டில்லி.

லால்குடி ஜி.ஜே.ஆர். கிருஷ்ணன் ஆடியோ காசெட் விழாவில் வெளியிடப்படும்.

விழா இறுதியில் கலாக்ஷேத்ரா குழுவினரின் 'பாதுகா பட்டாபிஷேகம்' நாட்டிய நாடகம் நடைபெறும்.

அனைவரும் வருக!

12.12.92 முதல் 25.12.92 வரை

12.12.92 சனி

காலை 8 மணி	தோப்பில் லக்ஷ்மி நரசிம்மன்-இசைப்பேருரை
காலை 10 மணி	பி. ராஜம் ஐயர் திருப்பாற்கடல் வீரராகவன், கமலாகர் ராவ்
பிற்பகல் 2 மணி	அகிலாண்டேசுவரி, எல்.நீலா, வி.ஆர். ஜெயக்குமார்
பிற்பகல் 3.15 மணி	பூஷணி கல்யாணராமன், கல்யாணி சங்கர், கல்பாத்தி ஸ்ரீதர்
மாலை 5 மணி	பி.எஸ். நாராயணஸ்வாமி வி. தியாகராஜன், சிவராமன், ஹரிசங்கர்
இரவு 7 மணி	அனிதாரத்னம், ப்ரீதா ரத்னம்-பரதநாட்டியம்

13.12.92 ஞாயிறு

காலை 8 மணி	தோப்பில் லக்ஷ்மி நரசிம்மன்-இசைப்பேருரை
காலை 10 மணி	சங்கரன் நம்பூதிரி, மீரா சிவராம கிருஷ்ணன், திருச்சூர் நரேந்திரன்
பிற்பகல் 2 மணி	அபர்ணா நந்தகுமார், வி. சுரேஷ், நாகை நாராயணன்
பிற்பகல் 3.15 மணி	சஞ்சய் சுப்பிரமணியம், விட்டல் ராமமூர்த்தி, நெய்வேலி நாராயணன்
மாலை 5 மணி	லால்குடி ஜி.ஜே.ஆர். கிருஷ்ணன் & விஜயலக்ஷ்மி- வயலின் டூயட், ஜே. வைத்யநாதன், வி. சுரேஷ்
இரவு 7 மணி	சுஜாதா மிஸ்ரா-ஒடிசி நாட்டியம் (சங்கீத நாடக அகாடமி ஏற்பாடு)

14.12.92 திங்கள்

காலை 8 மணி	தோப்பில் லக்ஷ்மி நரசிம்மன்-இசைப்பேருரை
பிற்பகல் 2 மணி	ஆர். அத்துல் குமார் - புல்லாங்குழல் வி. பாலகிருஷ்ணன், ஜே. நந்தகுமார்
பிற்பகல் 3.15 மணி	அசோக் ரமணி, எச். வெங்கடேசன், அனந்த கிருஷ்ண சர்மா
மாலை 5 மணி	பார்த்தசாரதி - சரோத் (சங்கீத நாடக அகாடமி ஏற்பாடு)
இரவு 7 மணி	திருச்சூர் வி. ராமச்சந்திரன், எம். சந்திரசேகரன், பக்தவச்சலம் வி. நாகராஜன்

15.12.92 செவ்வாய்

காலை 8 மணி	சி.வி. சேஷாத்திரி-இசைப்பேருரை
பிற்பகல் 2 மணி	குமாரி தேவி பூர்ண சிவா, காருக்குறிச்சி மோகனரங்கம்
பிற்பகல் 3.15 மணி	ஹைதராபாத் சகோதரிகள் (லலிதா & ஹரிப்பிரியா), எம். பாலகிருஷ்ணன், எஸ். பாலசங்கர், எஸ். கார்த்திக்

19.12.92 சனி

காலை 8 மணி	சுந்தர்குமார்-இசைப்பேருரை
காலை 10 மணி	ஒ.எஸ். தியாகராஜன், மைசூர் மஞ்சுநாத், பம்பாய் பாலாஜி
பிற்பகல் 2 மணி	டி.சி.ஏ. சங்கீதா - வீணை கே. உமா சங்கர், ஆதம்பாக்கம் சங்கர்
பிற்பகல் 3.15 மணி	ஆனையம்பட்டி கணேசன் - ஜலதரங்கம் வி.எல். சுதர்சன், திண்ணியம் கிருஷ்ணன்
மாலை 5 மணி	பம்பாய் சகோதரிகள், சி.என். சந்திரசேகரன், தஞ்சாவூர் சுப்பிரமணியம், கோவிந்தராஜன்
இரவு 7 மணி	டி.வி. கோபாலகிருஷ்ணன், டில்லி சுந்தரராஜன், ஸ்ரீமுஷ்ணம் ராஜாராவ்
இரவு 7 மணி	● பரதநாட்டியம்

20.12.92 ஞாயிறு

காலை 8 மணி	சுந்தர்குமார்-இசைப்பேருரை
காலை 10 மணி	பட்டிமன்றம் ஸ்ரீராம் ட்ரஸ்ட் புத்தக வெளியீடு பரிசளிப்பு விழா
பிற்பகல் 2 மணி	ஆர். விஜயலக்ஷ்மி, பரூர் வெங்கடராமன், ஆலத்தூர் டி. ராஜாகணேஷ்
3.15 மணி	கல்லூரி முரளி கிருஷ்ணா, எம்.ஏ. கிருஷ்ணஸ்வாமி, பாபநாசம் குமார்
இரவு 7 மணி	சித்ரா விஸ்வேஸ்வரன் - பரதநாட்டியம்
மாலை 5 மணி	● டி.என். கிருஷ்ணன், விஜி கிருஷ்ணன், நடராஜன்-வயலின் டூயட் வேலூர் ராமபத்திரன், வைக்கம் கோபாலகிருஷ்ணன்

21.12.92 திங்கள்

காலை 8 மணி	பெருந்தேவி & ராமகிருஷ்ணன்-இசைப்பேருரை
காலை 10 மணி	வாத்யவிருந்தா
பிற்பகல் 2 மணி	பத்மா கிருஷ்ணன், பிரபா கிருஷ்ணன், ஹரி குமார், சுப்பிரமணியம்
பிற்பகல் 3.15 மணி	பவானி கோவிந்தன், காயத்திரி, ஸ்ரீராம் பிரம்மானந்தம்,
மாலை 5 மணி	மணி கிருஷ்ணஸ்வாமி, லலிதா ராகவன், கே.ஆர். கணேஷ்
இரவு 7 மணி	இசைப்பேரொளி என். ரவி கிரண் - சித்ர வீணை நர்மதா, டி.கே. மூர்த்தி, கே.எஸ். ரங்காச்சாரி
இரவு 7 மணி	● உஷா ராகவன் (அடையாறு லக்ஷ்மணன் மாணவி) - பரதநாட்டியம்

மாலை 5 மணி	கே.வி. நாராயணஸ்வாமி, நாகை முரளீதரன், அருண் பிரகாஷ், சுந்தரம்
இரவு 7 மணி	கிருத்திகா மீனாட்சி (சுதாராணி ரகுபதியின் மாணவி) - பரதநாட்டியம்
இரவு 7 மணி	● கே.ஜே. ஜேசுதாஸ், பங்களூர் தியாகராஜன், திருவாரூர் பக்தவத்சலம், திருப்புனித்துறா வெங்கடேசன்

16.12.92 புதன்

காலை 8 மணி	சி.வி. சேஷாத்திரி-இசைப்பேருரை
பிற்பகல் 2 மணி	எம்.வி. கைலாசம், ஐ. வேங்கடேஸ்வர ராவ், கல்யாணராமன்,
பிற்பகல் 3.15 மணி	அனுராதா நாராயணஸ்வாமி, ஆர்.கே. ஸ்ரீராம்குமார், ஆர். வைத்யநாதன், எம். சிவராமகிருஷ்ணன்,
இரவு 7 மணி	ஊர்மிளா சத்தியநாராயணன் (கே.ஜே. சரசாவின் மாணவி) - பரதநாட்டியம்
மாலை 5 மணி	● டி.வி. சங்கர நாராயணன், வி.வி. சுப்பிரமணியன், பாலக்காடு ரகு, டி.எச். விநாயக ராம்
இரவு 7 மணி	● இசைப்பேரொளி யு. ஸ்ரீனிவாஸ்-மாண்டலின் கன்னியாகுமரி கே.வி. பிரசாத், டி.வி. வாசன்

17.12.92 வியாழன்

காலை 8 மணி	சி.வி. சேஷாத்திரி-இசைப்பேருரை
பிற்பகல் 2 மணி	வி. ராஜேஷ்-மாண்டலின், துரை பாலசுப்பிரமணியம், ஏ.எஸ். ரங்கநாதன், ஏ.எஸ். சங்கர்
பிற்பகல் 3.15 மணி	ப்ரியா சகோதரிகள் (ஹரிப்ரியா & சண்முகப்ரியா), சிவராமன், டி. சியாம் சுந்தர், செல்வகணேஷ்
இரவு 7 மணி	கல்பலதிகா (வேம்பட்டி சின்ன சத்தியம் மாணவி) - குச்சிப்புடி
மாலை 5 மணி	● ஈ. காயத்ரி - வீணை ஆர். ரமேஷ், டி.டி. பாலசுப்பிரமணியன்
இரவு 7 மணி	● எம்.எஸ். கோபாலகிருஷ்ணன், நர்மதா கோபாலகிருஷ்ணன் - வயலின் டூயட், குருவாயூர் துரை.

18.12.92 வெள்ளி

காலை 8 மணி	சுந்தர்குமார் இசைப்பேருரை
பிற்பகல் 2 மணி	பி.வி. கணேஷ், சீதாபதி, டி.கே. ராமகிருஷ்ணன்
பிற்பகல் 3.15 மணி	ஸ்வாமிமலை ஜானகிராமன், சி.ஏ. ராஜசேகர், திருவிடைமருதூர் சங்கரன்
மாலை 5 மணி	● என். ரமணி, டி. ருக்மணி, சிவராமன், நாராயணஸ்வாமி
இரவு 7 மணி	● மகாராஜபுரம் ராமச்சந்திரன்

22.12.92 செவ்வாய்

காலை 8 மணி	சிதம்பரம் ஸ்வாமிநாதன்-இசைப்பேருரை
காலை 10 மணி	ஹைதராபாத் சகோதரர்கள் பி. சேஷாச்சாரி & ராகவாச்சாரி, பெரி ஸ்ரீராமமூர்த்தி, மகாதேவலக்ஷ்மி, நாராயணராஜு, கே.வி.ஆர்.எஸ். மணி
பிற்பகல் 2 மணி	ஏ. பூதலிங்கம், டி.எஸ். நாராயணராவ், நெய்வேலி பி. வெங்கடேஷ்
பிற்பகல் 3.15 மணி	லால்குடி விஜயலக்ஷ்மி, பகாலா ராமதாஸ், கணபதிராமன்
இரவு 7 மணி	மைதிலி குமார் (அபினயா டான்ஸ் கம்பெனி, யு.எஸ்.ஏ.) - பரத நாட்டியம்
மாலை 5 மணி	● மதுரை ஜி.எஸ். மணி, மைசூர் நாகராஜ், ஸ்கந்த பிரசாத், சுகன்யா ராம்கோபால்
இரவு 7 மணி	● டி.என். சேஷகோபாலன், வி.வி. ரவி, குருவாயூர் துரை

23.12.92 புதன்

காலை 8 மணி	பி. மாதவன்-இசைப்பேருரை
காலை 10 மணி	என்.சி. சௌந்தரவல்லி, துவாரம் மங்கதாயாரு, மதுரை ராமையா
பிற்பகல் 2 மணி	எஸ். காயத்ரி, மேல் காவேரி பாலாஜி, தியாகராஜன், எஸ். ஸ்ரீதர்
பிற்பகல் 3.15 மணி	பிருந்தா வெங்கட்ராமன், திருவாரூர் பாலம், ஈ.என். பஞ்சாபகேசன்
மாலை 5 மணி	இசைப்பேரொளி சுதா ரகுநாதன், உஷா ராஜகோபால்,
இரவு 7 மணி	சுதாராணி ரகுபதி - நாட்டிய நாடகம். -திருவாரூர் வைத்யநாதன்

24.12.92 வியாழன்

காலை 8 மணி	டி.எஸ். பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள்-இசைப் பேருரை
காலை 10 மணி	நெய்வேலி சந்தானகோபாலன், திருச்சி ராமானுஜாச்சார்லு, தஞ்சாவூர் ராமதாஸ்
பிற்பகல் 2 மணி	பிரேமா ரங்கராஜன், டி. ஹேமமாலினி, பையூர் கோபாலகிருஷ்ணன்
பிற்பகல் 3.15 மணி	அருணா சாயிராம், கல்பனா கிஷோர், காரைக்குடி ஜெயராம்
மாலை 5 மணி	சிக்கில் சகோதரிகள், ராதா நாராயணன், மன்னார்குடி ஈஸ்வரன், ராமாச்சார்
இரவு 7 மணி	பரத கலாஞ்சலி வழங்கும் தனஞ்சயன் பங்கேற்கும் 'தியாகராஜ வைபவம்'-நாட்டிய நாடகம்

25.12.92 வெள்ளி

காலை 8 மணி	'மதி ஒளி' நூல்வெளியீட்டு விழா
காலை 10 மணி	கதிரி கோபாலநாத் - சாக்ஸபோன், எம்.என். கோவிந்தசாமி, அர்ஜுன் குமார்

'●' குறியிட்ட நிகழ்ச்சிகள் ஆர்.ஆர். சபா, சுந்தரேஸ்வரர் தெரு, மயிலாப்பூரில் நடைபெறும்.

இதர நிகழ்ச்சிகள், பாரதீய வித்யா பவன் (ஏ.சி. ஹால்), கிழக்கு மாட வீதி, மயிலாப்பூரில் நடைபெறும்.

சீசன் டிக்கட்டுகள் கிடையாது. அன்றாட டிக்கட்டுகள் மட்டுமே விற்கப்படும். அன்றாட டிக்கட்டுகள் குறிப்பிட்ட நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும். காலை 8 மணி முதல் பிற்பகல் 3.15 மணி வரையிலான நிகழ்ச்சிகளில் அனைவருக்கும் அனுமதி. அன்றாடக் கட்டணங்கள்: ரூ.100, 50, 25, 15. அன்றாட டிக்கட்டுகள் நிகழ்ச்சிக்குரிய நாளுக்கு இரண்டு தினங்கள் முன்பு மட்டுமே விற்கப்படும். டிக்கட்டுகள் விற்பனை: பாரதீய வித்யா பவன் மற்றும் ஆர்.ஆர். சபா.

ஏ.வி.எஸ். ராஜா	எச். கிருஷ்ணமூர்த்தி (C.M.D./M.R.L.)	ஆர். ராஜகோபால், எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி
தலைவர்	விழாக்குழு தலைவர்	செயலாளர்கள்

Efficient

யில், விஞ்ஞானப் போக்கிலும் மறைந்த பெற்றோர்களுக்கும் மற்றும் மூதாதையர்களுக்கும் சிரார்த்தம் (திவசம்) செய்ய இயலவில்லை, அதனால் பித்ரு ஸ்வரூபமாய் இருக்கிற சிவ பெருமானுக்கு மறைந்தவர் களின் நினைவைப் போற்றும் வகையில் அந்தக் குறிப்பிட்ட நினைவு நாளில் ரூபாய் ஆயி ரத்தை ஒருமுறை செலுத்தி அதிலிருந்து வரும் வட்டியில் பதினோரு பேருக்குச் சிவபெரு மானுக்கு நிவேதனம் செய்த பிரசாதமான அன்னத்தை அன்னதானமாகச் செய்ய "ஸ்ரீபுவனேஸ்வரி மந்த்ரம் டிரஸ்ட்" அமைப்பு ஏற்பாடு செய்திருக்கிறது. வருடத்திற் கொரு முறை இவ்வாறு செய்யப்படும். இந்த அன்ன தானக் கட்டளையின் சிறப்பை ஸ்ரீ ஸ்வாமிகள் கூறும்போது மெய்சிலிர்க்கிறது.

ஸ்படிக லிங்க ஸ்வரூபமாய் இருக்கிற ஸ்ரீபரமேஸ்வரனை யோகமாயா ஸ்ரீ புவனேஸ்வரி கொலு வீற்றிருக்கும் ஸ்ரீபரத் வாஜ ஆச்ரமத்தில் தரிசித்துப் பேரானந்தம் கொள்வதில் நாமெல்லோரும் புண்ணியம் செய்திருக்க வேண்டும். ○○○

சந்தன அலங்காரம்

ஜெயரதன்

உரசினாற்போல் கார் ஒன்று ஊர்ந்து நின்றதும், பாம்பைக் கண்டவன் போல் துள்ளி விலகினேன்.

கோபம் விர்ரென்று தலைக் கேறிற்று.

"எந்த மடை..."

வாக்கியம் முற்றுப் பெறும் முன்னர் காரின் பின்பக்கத்துக் கருப்புக் கண்ணாடி பாதி இறங்கி முகம் தெரிந்ததும், வார்த்தைகள் நெஞ்சிலேயே புதைந்தன.

மாணிக்கபூபதி இல்லையோ?

"என்ன கதாசிரியரே... கதைக்கு யோசனை பண்ணிக் கிட்டே நடந்து போறீங்களா?.. எதிர்க் கடையிலே உங்களைப் பாத்துக் கூப்பிட்டுக் கூப்பிட்டுத் தொண்டையே கெட்டுப் போயிருச்சு...."

திறந்த பின்கதவுக்குள் என்னை இழுத்துக் கொண்டதும், கார் வழுக்கிக் கொண்டு தார் சாலையில் மிதந்தது- ஏர் கண்டிஷன்ட் டோயோட்டா. பணக்காரப் பெண்மணி மாதிரி மெத்தென்றிருந்தது.

"எங்கே வந்தீங்க?... எங்கே போறீங்க? ... எங்க ஊருக்கு வந்துட்டு என்னைப் பாக்காமெப் போனா விட்டுருவம்னு பாத்தீங்களா?..."

மதுரை ஜில்லாவுக்கே பிரத்யேகமான இதமான ராகத்தில் கேட்டார் மாணிக்கபூபதி. முகத்தில் சிரிப்பு படர்ந்தது.

பணம் வந்துவிட்டால் கருப்பு நிறமும் அழகாகிவிடும் என்பதை நிரூபிக்கிற தோற்றம். உருண்டையான வட்டக் கரிய முகத்தில் பளிச்சென்ற சிரிப்பு. எளிமையிலும் செல்வத்தைக் காட்டவல்ல கதர்சட்டை. கீழ் இமைக்குக் கீழே சதை சன்னமாய்ச் சுரந்து, நீரிழிவு நோய் உறவு கொண்டாடுவதை உணர்த்திற்று.

"... என்ன பதிலையே காணோம்?... என்னை வச்சுக் கதை எழுதப் போறீங்களா? ராயல்டி எனக்குத்தான், சொல்லிப் புட்டேன்..."

என் தொடையில் ஓர் அறை அறைந்து பெரிதாய்ச் சிரித்தார் மாணிக்கபூபதி. சுரீலென்று வலித்தது.

"... இங்கே ஒரு ஷாப்புலே எங்க கம்பெனிக்குப் பணம் கொஞ்சம் பாக்கி. கடுதாசி போட்டுப் போட்டு ஒன்னும் வசூலாகல்லே. மானேஜர் தான் என்னை நேரிலே போய்க் கேட்டு வாங்கிண்டு வான்னு அனுப்பிச்சார்...அதான்..."

தயங்கித் தயங்கி நான் கூறும்முன், பளிச்சென்று இடைமறித்தார் மாணிக்கபூபதி.

"வசூலாச்சா இல்லியா?"

"... நாளை நாளன்னிக்கு வரச் சொல்லியிருக்கார். முடிஞ்சதைத் தரேன்னு சொன்னார்..."

"யாரு கடை?"

"நல்லசிங்க நாயுடு அண்டு கோ..."

"அவனா?... பெரிய இளுவையாச்சே?... எத்தனை பாக்கி?..."

"அறுபதாயிரத்து முப்பத்தேழு ரூபா, அறுபத்தி அஞ்சு பைசா..."

"..அடச்சே!... பிசாத்துப் பணத்துக்காக இம்புட்டுப் படுத்துறான்?..." என்றவர் டிரைவரை நோக்கினார்.

"... டேய் ... சன்னாசி... எங்களை கெஸ்ட் ஹவுஸிலே விட்டுட்டு, நல்லசிங்க நாயக்கனை நான் கூப்பிட்டேன்னு வரச்சொல்லு ...ஒடனே வரணும்னு சொல்லு..."

மீண்டும் என்பக்கம் திரும்பினார்.

"... அப்ப ரெண்டு நாளு திண்டுக்கல்லுலே தங்கத்தானே போறீங்க?..."

"ஆமாம்... சாரதா லாட்ஜுலே ரூம் போட்ருக்கேன்... அப்படியே பழனிக்குப் போய் முருகனைத் தரிசனம் பண்ணலாம்னு உத்தேசம்..."

"பழனிக்கா, இப்பவா?"

பெரிதாய்ச் சிரித்தார்.

"ஏன்?" என்றேன் திகைப்புடன்.

"... ஆடிக் கிருத்திகை நெருங் கறது மறந்து போச்சாக்கும்... ஒம்மால போய் சாமியைத் தரிசனம் பண்ணிர முடியுமா?..."

மீண்டும் சிரித்தார்.

"... டேய் சன்னாசி..."

கழுத்தைத் திருப்பாமலேயே "எசமான்" என்றான் சன்னாசி.

"... சாரதா லாட்ஜுக்குப் போய் சாரோட சாமானை எடுத்துக்கிட்டு, நம்ம கெஸ்ட் ஹவுஸுக்குக் கொணாந் துடு... பெறகு பழனிக்கு போன் போட்டு நாளைக் காலை யிலே நான் சாமி தரிசனம் பண்ண வர்றதா எக்ஸிக்யூடிவ் ஆபீசருக்குச் சொல்லிரு... சாமிக்கு ராஜ அலங் காரம் பண்ணச் சொன்னேன்னு சொல்லு. காலையிலே பெட்ரோல் போட்டு காரை நல்லா செக்கப் பண்ணி ரெடியா வச்சிரு... என்ன?..."

மௌனமாய்ப் பார்த்துக் கொண் டிருந்தேன்.

"... ஊருக்குப் போறதுக்கு முன் னாலே நல்லசிங்க நாயக்கன் முழுப் பணத்தையும் செக்காக் குடுத்துரு வான். நான் காரண்டி..."

மீண்டும் என் தொடையில் அறைந்து சிரித்தார் மாணிக்க பூபதி.

'மாணிக்கம் டெக்ஸ்டைல் மில் லிமிட்டட்' என்ற பெரிய மில்லின் முன் கார் நின்றது.

மாணிக்கபூபதி இறங்கிக் கொண்டார்.

"... நரேந்திரன் சார்!... நீங்க ளும் கூடப்போய் ரூமை காலி பண் ணிட்டு கெஸ்ட் ஹவுஸ்லே இருங்க... சாப்பாட்டுக்கு நான் வந்துர்ரேன். சேர்ந்து சாப்பிடு வோம்..." என்றவர் கண்ணைச் சிமிட்டினார். "சைவம்தான் சார்!... பயப்படாதீங்க... சைவ முட்டை சாப்பிடுவமா? இன்னிக்கு நானும் அய்யிருதான்..." என்று மீண்டும் சிரித்தார்.

'என்னால் முடியாதது எதுவு மில்லை' என்ற தொனி தெரிகிற கம்பீர நடையுடன் மில்லுக்குள், எதிரில் வருகிறவர்களின் வணக் கங்களை அலட்சியமாய் வாங்கிக் கொண்டே உள்ளே சென்றவரைச் சிறிது நேரம் பார்த்தேன்.

கார் சிணுங்கலுடன் சொகுசாய் மிதந்தது.

☆

மாணிக்கபூபதியின் அறிமுகம் கிடைத்ததே ஒரு பேட்டியின் மூலம்தான்.

'முத்துமாலை' என்னும் பத்திரிகையில் 'மடுவிலிருந்து மலையுச்சிக்குச் சென்றவர்கள்' என்ற தலைப்பில் பிரபலமான வர்களைப் பேட்டி கண்டு கட்டுரை கள் எழுதிவந்தேன்.

என்னைப் பற்றி ஒருசில வார்த்தை. நடுத்தரத்திற்கும் கீழ் மட்டம். விண்ணெட்டிய கனவுகள். கனவுகள் கனவுகளாகவேயிருக்க, வாழ்க்கையின் நிஜம் பாறைப்பளு வாய் அழுத்திற்று. கனவுகள் கதாசிரியனாக்கின. பெயர் பெற்ற, ஆனால் பணம் பெறத் தெரியாத எழுத்தாளனானேன். நிஜங்கள், வாழ்க்கையின் அன்றாடத் தேவை கள் என்னும் யதார்த்தங்கள், ஒரு கம்பெனியில் பில் கலக்டர் உத்தி யோகத்தில் அமர்த்தின. வயிற் றுக்கு வேலையும், மனதுக்கு எழுத்தும் சாந்தியளித்தன. சிறு வயது முதலே, எனக்கு விவேகா னந்தர் மீது ஒரு பக்தி. தனி யொருவனின் உய்வுக்காகவே அதுவரை இருந்து வந்த மதம் என்னும் மன ஒழுக்கத்தை, சமுதாய மேம்பாட்டிற்காகப் பயன்படும் இயந்திரமாய் மாற்றிக் காட்டிய ரசவாதி. காவித் துணிக்குள் எரிமலையாய்க் குமுறிய ஆன்மிகப் போர்வீரன். செம்மறியாடுகளைச் சிங்கங்களாய் மாற்ற முயன்ற மத ஞானி. சிங்கங்களுக்குச் சைவ உணவைப் பழக்கிய சீர்திருத்தத் துறவி. அவரது பெயரான 'நரேந்திரன்' என்பதையே புனை பெயராக்கிக் கொண்டேன்.

திண்டுக்கல்லுக்கு அலுவலக வேலையாய் வந்தவன், அவ்வூர் பிரபலங்களில் மிகப் பெரியவராய் மாணிக்கபூபதி விளங்கக் கேட்டு அவரைப்பற்றி விசாரித்தேன். கையில் எட்டணாக் காசுடன் தந்தையின் மீது கோபம் கொண்டு சில வருடங்களுக்கு முன் வந்தவர், இன்று எட்டு மில்களுக்குச் சொந்தக்காரராய், எண்ணாயிரம் குடும்பங்களுக்கு அன்ன தாதா வாய், மலைச்சரிவுகளில் எல்லாம் எஸ்டேட்டுகளை வளைத்துப் போட் டிருக்கும் குறுநில மன்னராய் உயர்ந்திருப்பது கண்டு வியந்து போனேன்.

"மலையுச்சிகளை மடுவாக்கிய மாணிக்கபூபதி' என்ற தலைப்பில் அவரைப் பேட்டி கண்டு கட்டுரை வெளியிட்டேன்.

பேட்டி கண்ட வேளை ஸ்திர வேளை போலிருக்கிறது.

என்னை அவருக்கு ஏனோ பிடித்துப் போயிற்று.

'எழுத்தாளரே... எழுத்தாளரே" என்று என்னிடம் பழகினார். ஏதா வது விவகாரம் வந்துவிடுமோ என்று நான் அஞ்சுமளவுக்கு என்னிடம் இழைந்தார்.

என்னை அழைத்துக் கொண்டு கடைத் தெருவில் காரில் போவார். மற்றவர்கள் காலில் விழாத தோஷ மாய் இவருக்கு வணக்கம் தெரி விப்பதைக் கண்டும் காணாதவராய் மிடுக்கு நடை பயில்வார். பின் னாலேயே நடப்பேன்.

நான் எந்த விதத்தில் இவருக்கு இணையென்று நான் சிந்திப்ப துண்டு. சில அழகிய பெண்கள் அழகற்ற பெண்களுடன் நட்புப் பாராட்டி, எங்கு போனாலும் சேர்ந்தே போவார்கள். அழகற்ற பெண்ணின்

சமீபத்தில் அழகிய பெண்ணின் அழகு மேலும் பிரகாசிக்கிறதைப் பிறருக்கு உணர்த்தவே அழகிய பெண் அவ்வாறு இணைந்து காணப்படுகிறாளோ என்றுகூட நான் எண்ணுவதுண்டு.

அதைப்போலவே, தனது செல்வச் செழுமையை, செல்வாக்குச் சிறப்பை எனக்கு உணர்த்தி, அதில் ஓர் அற்பப் பெருமித உணர்வை உள்ளூர ரசிப்பதற்காக இப்படி இழைகிறாரோ?

எப்படியோ இந்த முறையும் இவரிடம் மாட்டிக் கொண்டாகி விட்டது. ஊர் திரும்பும்வரை இவர் ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும். ஆர்ப்பாட்டங்களைப் பொறுத்தாக வேண்டும். செல்வத்தின் சீறும் செல்வாக்கைச் சந்தித்தேயாகவேண்டும்.

கெஸ்ட் ஹவுஸில் சுகபோகமான சூழலில் படுத்துக் கொண்டேன். உறக்கம் மட்டும் வரவில்லை.

☆

இருபுறமும் வாழைக் கொல்லைகளும், திராட்சைப் பந்தல்களுமாய்ப் பசுமை விரித்திருக்க, நடுவில் கருப்பு நிறச்சாலையில் முத்து வண்ண டயோடா மிதந்து சென்றது.

"இதெல்லாம் நம்ம தோட்டந்தான்".

கையைச் சுழற்றினார் மாணிக்க பூபதி.

"எல்லாம் கதலி... தேன் கதலி... ஏண்டா சன்னாசி தார் போட்டிச்சா?..."

"இல்லீங்க... ஒரு மாசம் பிடிக்குமுங்க..."

"எளுத்தாளரே... இந்தவாட்டி ஒரு தாரை வெட்டி அனுப்பி வக்கிறேன்... சாப்பிட்டுப்போட்டுத் 'தேன்பழச் சோலையிலே வான் புகழ் மாணிக்கபூபதி'ன்னு எளுதுறீரா?..."

தொடையில் ஓங்கி அறையும் முன் லாகவமாய் நகர்த்திக் கொண்டேன்.

தொலைவிலிருந்தே பழநிமலை தெரியலாயிற்று.

கன்னத்தில் போட்டுக் கொண்டேன்.



"எழுத்தாளரே... மலைக்கு ஏன் கன்னத்துலே போட்டுக்கிர்ரீங்க?... ராஜ அலங்காரத்துலே முருகன் முன்னாலே இன்னும் கொஞ்ச நேரத்துலே நிறுத்தறேன்... நமக்காக அலங்காரம் பண்ணிக்கிட்டு நிக்கிறான்யா, முருகன்!... அவன் முன்னாலே கன்னத்துலே போட்டுக்கும்..."

கார் வளைந்து நெளிந்து ஒரு பெரிய வீட்டின் முன் நின்றது.

யாரோ ஓட்டமாய் ஓடிவந்து கதவைத் திறந்தார்கள்.

"... என்னடா தவசி!... குளிக்க வெந்நி போட்டு வச்சிருக்கியா?..."

"ரெடியா இருக்கு எசமான்..."

சிவப்புக் கம்பளம் விரிக்காத குறையாய் வரவேற்பு அமர்க்களமாய் விளங்க, சக்கரவர்த்தி மாதிரிக் காரிலிருந்து இறங்கினார் பூபதி.

"இன்னும் அரை மணிலே தயாராயிடலாமா?..." என்று என்னிடம் கூறிய பூபதியைப் பார்த்து "...கோயில் ஆபிஸிலேர்ந்து ஆள் வந்து அய்யாவுக்காகக் காத்துக்கிட்டு இருக்காங்க..." என்றான் தவசி.

கோயில் ஆசாமி இவர் குரல் கேட்டதும் ஓட்டமாய் ஓடிவந்தார்.

"... என்னய்யா முத்துச்சாமி... எல்லாம் ரெடியா?"

"... எல்லாம் ரெடி சார்!... ஒரு கிளார்க்கை ரெடியா இருக்கச் சொல்லியிருக்கேன்... சார் வந்ததும் நானும் கூடவே வர்ரேன்... இன்னும் அரைமணிலே கௌம்பிரலாமா சார்..."

"ஏன்?... லேட்டான வரமாட்டியா?"

"ஐயய்யோ!... அதுக்கில்ல சார்!... விஞ்ச் ஒன்னை நிறுத்தி வச்சிரதுக்காகக் கேட்டேன்..."

"நிறுத்தி வச்சிரு...நான் வர்ரேன்..."

"சரி. சார்..."

ஓட்டமாய் ஓடினார்.

"எலேய் தவசி... இவனுக்கு ஐந்நூறு ரூபா குடுத்திட்டியில்லே?..."

"நீங்க ஃபோன் பண்ணின வொடனேயே குடுத்திட்டேன்."

என்னைப் பார்த்துப் பெருமிதமாய்ப் புன்னகைத்தார் பூபதி. "ஐந்நூறு தந்ததும் வீட்டுக்கே வந்திட்டான். ஆயிரம்னா திண்டுக்கல்லுக்கே ஓடியாந்துருவான் போல... பணம்இருந்தால் எல்லாரையும் வெலைக்கு வாங்கிறலாம் எழுத்தாளரே...சாமிஉள்பட..."

பெரிதாய்ச் சிரித்துக் கொண்டு குளிக்கப் போனார் பூபதி.

'நச்'சென்று எங்கேயோ அடிபட்டாற்போல் மெலிதாய் மனம் வலித்தது எனக்கு.

உள்மனத்தில் ஊமைக் காயத்துடன் குளித்துவிட்டுக் கிளம்பினேன்.

மாணிக்கபூபதியைக் கண்டு பிரமித்தேன்.

நெற்றி நிறையத் திருநீறு. நடுவில் மாணிக்கப் பொட்டாய்க் குங்குமம். பட்டுவேட்டியும் பட்டுச் சட்டையுமாய்க் கிளம்பினார். பக்தியும் கவர்ச்சிதான் போலும்!

எதுவும் பேசத் தோன்றாமல் காரில் ஏறிக் கொண்டேன்.

மலையடிவாரத்தில் வீட்டில் கண்ட ஆசாமியும் இன்னும் சில ஊழியர்களும் நின்று கொண்டிருந்தார்கள்.

'ஐயா... வாங்க... எஜமான் வாங்க..." என்று பலவித உபசரிப்புகளைப் பிளந்துகொண்டு ராஜ கம்பீரமாய் நடந்தார் பூபதி.

சுற்றியிருந்த கூட்டத்தை விரட்டிக் கொண்டிருந்தார் ஓர் ஊழியர்.

தெய்வத்தின் சந்நிதானத்தில் இப்படி ஆர்ப்பாட்டமாய் நுழையக் கூசிய மனத்தை அடக்கிக் கொண்டு உடன் நடந்தேன். கூட்டத்தில் இருந்தவர்கள் பார்வை துளைப்பதை உணர முடிந்தது. குற்ற உணர்வு குன்றுபோல் உள்ளூர எழுந்தது.

விஞ்ச் காத்துக் கொண்டிருந்தது. விஞ்ச் நிறைய மக்கள். காரணம் புரியாமல் காத்துக் கிடந்தார்கள்.

விஞ்ச்சில் இரண்டு மூன்று பெஞ்சுகள் காலியாய் இருந்தன. அதிகாரி காலியாய் வைத்திருக்க வேண்டும்.

கம்பீரமாய் அமர்ந்து கொண்டார் பூபதி.

அசௌகர்யமாய் நானும் அமர்ந்துகொண்டேன்.

உடன்வந்த ஊழியர்கள் பூபதியைப் பார்த்தார்கள்.

பூபதி தவசியைப் பார்த்துக் கண்களால் பேசினார்.

நின்று கொண்டிருந்த ஒவ்வோர் ஊழியரின் கையிலும் ஐம்பது ரூபாய் நோட்டைத் திணித்தான் தவசி.

அவர்கள் குழைந்து நெளிந்து வளைந்து வாங்கிக் கொண்டதும் விஞ்ச் கூவிக் கொண்டே மேலெழுந்தது.

சிறிது நேரத்தில் மலையுச்சிக்குப் போயிற்று.

உடனேயே அங்கிருந்த சில ஊழியர்கள் ஓட்டமாய் ஓடிவர ராஜ வரவேற்புடன் கோயிலுக்குள் பிரவேசித்தார் பூபதி.

"அப்ப.. நான் வரட்டுங்களா?"

விஞ்ச் டிரைவர் தலைசொறிந்து நின்றான்.

தவசி இன்னுமோர் ஐம்பது ரூபாய் நோட்டை வீசியெறிய, வணக்கம் சொல்லிவிட்டு விஞ்ச் கீழே இறங்கிற்று.

பொங்கி வழிந்த கூட்டத்திலை விலக்கிக்கொண்டே ஓர் ஊழியர்

பாதை அமைக்க, கம்பீரமாய் உள்ளே சென்றார் மாணிக்க பூபதி.

ஒவ்வொரு கோயில் ஊழியரும் இவரைக் கண்டதும் உடலைக் குழைந்து கொண்டு வணக்கம் தெரிவித்தார்கள். பூபதியின் கண்கள் தவசியைப் பார்க்க, தவசி பர்ஸைக் கையில் எடுத்துக் கொண்டதைப்பார்த்தேன்.

குற்ற உணர்வு என்னை வதைக்க, பலி ஆடு மாதிரி நானும் உடன் சென்றேன்.

முருகனின் சந்நிதி.

இரட்டை வரிசையாய் கம்பிகளுக்குள் குஞ்சுகளும் குழந்தைகளுமாய் ஜனங்கள் முண்டியடித்து நின்று கொண்டிருந்தனர்.

நடுவில் முருகன் சந்நிதிக்கு நேராய்ச் சர்வ மரியாதையுடன் நாங்கள் அமர்த்தப்பட்டோம். வேறு சிலரும் அமர்ந்திருந்தார்கள்.

குருக்கள் ஓட்டமாய் ஓடி வந்தார்.

"ராஜாலங்காரம் பண்ணிருக்கு.. நீங்க வரேள்னு சொன்னா.. அதான்..."

முருகனுக்கு முதுகு காட்டி மாணிக்க பூபதியிடம் குனிந்தார்.

புன்முறுவலுடன் என்னைப் பார்த்தார் பூபதி.

ஆயிரக்கணக்கில் ஜனங்கள் முண்டியடித்துக் கொண்டு நின்றார்கள்.

விசேஷமாய்த் தீபாராதனை நடந்தது.

பரிவட்டம் சுற்றி, மாலை மரியாதைகளுடன் கம்பீரமாய் நின்ற மாணிக்க பூபதி என்னைப் பார்த்தார்.

"ராஜ அலங்காரம் எப்படிய்யா?... தனியா வந்திருந்தீர்னா, கோயிலுக்குள்ளேயே நொளைஞ்சிருக்க முடியாது..."

பதில் பேசாமல் சந்நிதியைப் பார்த்தேன்.

மனிதக் காட்சி சாலை...!

ஆண்டாள் பிரியதர்சினி

ஒன்றுக்கும் உதவாத
உருப்படியற்ற எலிகளும்
சிங்கமாய்த் தன்னை உருவகித்து
அசிங்கமாய் கர்ஜிக்கும்
மனிதக் காட்சிச் சாலை இது!

மயில்களின்
மன்மத அழகில் மயங்கிக்
கோட்டான்கள் –
தானும்
அதுபோல் ஆடத் தத்தளிக்கும்
மிருக அரண் இது!

மனிதன் –
எந்த நூற்றாண்டிலேயோ
மண்ணுள் புதைந்து
மக்கி விட்டதால்
மனித உடலின்
மனசுக்குள்ளிருக்கும்
மிருகங்களின்
சுதந்திர சாம்ராஜ்யம்
தலைவிரித்தாடுகிறது!

நட்போடு
காலைச் சுற்றி வந்து –
நினைக்காத நேரத்தில்
நம் கழுத்தில்
விஷத்தைக் கக்கும்
அவநம்பிக்கை நாகங்களின்
பண்ணை இது!
சிவபெருமானே
பாம்பாக நர்த்தனம் புரியும்
ஆடலரங்கம் இது!

ஈஸ்ட்மென் கலரில் உலா வரும்
பெண் நாகங்களிடம்
பல்லிளிக்கும்
பாம்பாட்டிகளின் புற்று இது!

தன் குஞ்சைக்
காக்கைக் கூட்டில் ஈனும்
குயில்களாய்ப் –
பிறர் கூட்டினைக்
கலைத்துக் களிக்கும்
பெண் குயில்களின்
கூடாரமே இது!

பிறன்மனைக் குயில்களின்
கூட்டில் களிக்கும்
ஆண் மயில்களின்
மோகவலை இது!

இங்கே –
மனிதர்கள் எல்லோரும்
கூண்டுக்குள்ளே!
விலங்குகளை
ஆபத்திலிருந்து
காப்பாற்றத்தான்...!

இந்தக் காட்சிச் சாலை
புலிவேஷம் போட்டு ஆடும்
மன்றம் இல்லை!
மனிதர்களின்

மனித வேஷத்தில்
மதிகெடுக்கும்
மிருகங்களின்
மயக்கக் காட்சி சாலை இது!

கனவும் நினைவும்

☆ முதல் உலகப் போரின் போது போர்க்களத்தில் பாது காப்புப் பள்ளத்தில் பதுங்கியிருந்த வீரர் ஒருவர் சற்று கண்ணயர்ந்தார். அப்போது அவர் ஒரு கனவு கண்டார். அந்தக் கனவில், தான் ஒரு பாது காப்புப் பள்ளத்தில் பதுங்கியிருப்பது போலவும், அதன் அருகில் எதிரியின் குண்டு ஒன்று வெடித்து கல்லும் மண்ணும் சரிந்து அந்தப் பள்ளத்தை மூடி விடுவதாகவும் கனவு கண்டார்.

திடுக்கிட்டு எழுந்த அவர், தான் கண்ட கனவு நிறைவேறி விடுமோ என்று அஞ்சி, அந்தப் பள்ளத்தை விட்டு எழுந்து ஓடினார். ஆச்சரியம்! அப்போது அவர் அருகே எதிரியின் குண்டு விழுந்து அந்தப் பள்ளத்தை மூடி விட்டது. அதில் ஒளிந்திருந்த மற்ற வீரர்கள் எல்லோரும் புதைந்து போயினர். இந்தப் போர் வீரர் மட்டுமே உயிர் தப்பினார். இப்படிக் கனவு கண்டு, நடக்கப் போவதை முன்னறிந்து தன்னைக்காத்துக் கொண்ட அந்த வீரர் யாரும் இல்லை. பிற்காலத்தில் ஜெர்மனிக்கு அதிபராக வந்த "அடால்ஃப் ஹிட்லர்"தான்.

— க.சு. மணியன்

ராஜ அலங்காரத்தில் கோவணாண்டி முருகன். எதுவும் வேண்டாம் என்று உதறிவிட்டு ஓடி வந்தவனுக்குப் பட்டுப் பீதாம்பரம் சூட்டியிருந்தார்கள். தலையில் கிரீடம் வெளிச்சத்தில் மின்னிற்று. வைர நகைகள் டாலடித்தன. வலது கையில் தாங்கிய செங்கோலில் வைரமும் பச்சையும் வர்ண ஜாலங்கள் புரிந்தன.

இத்தனையிருந்தும் மனம் நிறையவில்லை. ஏனோ தெரியவில்லை, மனம் உள்ளூரப் புழுங்கிற்று.

பிராகாரத்திற்கு வந்தோம்.

அங்கே பாத்திரம் நிறையச் சந்தனத்துடன் ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

எங்களிடம் வந்து, மேனியெல்லாம் பூசினார்.

மேனி கூசிற்று. யார் யாரோ பார்த்துக் கொண்டே போனார்கள்.

"சாமி சந்தனம்.. நல்லாப் பூசு.. சாருக்கும் பூசுய்யா..."

அவஸ்தையுடன் ஆட்பட்டேன்.

தவசி ஒவ்வொரு குருக்கள் கையிலும் ரூபாய் நோட்டுகளைத் திணித்துக்கொண்டிருந்தான்.

வெளியே வந்தோம். விஞ்ச் காத்திருந்தது.

வேறொரு டிரைவர். பூபதியைக் கண்டதும் முதுகெலும்பு உருகிப் போனவன் மாதிரிக் குழைந்தான்.

தவசி தலையசைத்தான். ரூபாய் நோட்டு கைமாறிற்று.

விர்ரென்று விஞ்ச் இறங்கிற்று.

வழக்கமாய்ப் பழநிக்கு வந்தால், வெளியே வரும்போது மனம் நிறைந்து ஆனந்தம் வழியும். எதுவுமே இல்லாமல் மனம் கனத்து, இனம்புரியாத அவஸ்தையுடன் கீழே வந்தேன்.

"...எனனய்யா எகுத்தாளரே? தரிசனம் எப்படி? எல்லாப் பயகளும் வாசல்வரை வந்து வளியனுப்பிச்சானுக, பாத்தீரா?..."

ஆர்ப்பாட்டமாய்ச் சிரித்தார்.

என்ன பதில் சொல்வது என்று நான் நினைத்துக் கொண்டிருந்த போது, "சார்... சார்... சாமி... சாமி... லாட்டிரி டிக்கட் வாங்குங்க சாமி... பத்து லட்சம் சாமி... காலையிலேர்ந்து போணியே ஆகலே சாமி... பட்டினி சாமி..." என்ற கெஞ்சும் குரல் கேட்டுத் திரும்பினேன்.

ஒரு சிறுவன். ஏழெட்டு வயது இருக்கலாம். கந்தல் சட்டை. கால் சட்டையில் மானம் மறைக்க மட்டும் துணி. மற்ற இடங்கள், கந்தலாய்க் கிழிந்து தொங்கின. மொட்டைத் தலையுடன் பெரிய விழிகளை விரித்து மன்றாடிக் கொண்டிருந்தான்.

அலட்சியமாய்ப் பார்த்தார் மாணிக்கபூபதி. "லாட்டரிச் சீட்டெல்லாம் வாங்கறதில்லேடா பையா... இந்தா பத்து ரூபா. வச்சுக்க. சாப்பிடு..."

பத்து ரூபாய் நோட்டு ஒன்றை அச்சிறுவன் கையில் வீசியெறிந்தார்.

அவரையும் நோட்டையும் மாறி மாறிப் பார்த்தான் சிறுவன். அவர் கைகளிலேயே மீண்டும் வைத்தான்.

"... டிக்கட் வாங்காட்டி பணம் வேணாம் சாமி... உன் பணம் யாருக்கு வேணும்?... சும்மால்லாம் துட்டுவாங்கமாட்டேன்..."

கன்னத்தில் அறை விழுந்தது மாதிரி ஆடிப் போனார் மாணிக்க பூபதி.

நான் அதிர்ந்தேன்.

திரும்பிப் பார்க்காமல் சென்ற சிறுவன், மற்ற யாரிடமோ, பரிசுச் சீட்டு விற்க முயன்று கெஞ்சிக் கொண்டிருந்தான்.

பளீரென்று சிக்கல் அவிழ்ந்தாற் போல் மனம் லேசாயிற்று. புத்துணர்ச்சியொன்று மின்னலாய்ப் பாய்ந்தது.

பணப் புழக்கத்தின் வெம்மை வீசிய ராஜ அலங்காரத்தை வெறுத்து ஒதுக்கிக் கோயிலுக்குள்ளேயே விட்டுவிட்டு, காற்றாடக் கந்தல் அலங்காரத்தில் சாலையில் நிற்கிறானோ?

பரவசமாய் ஒரு சந்தோஷம் என்னைப் பற்றிக் கொள்ள, மேனி சிலிர்த்துப் போயிற்று.

"... தரிசனம் பிரமாதம் சார்..." என்றேன்.



முடநீக்கியல் துறையில் விருதுபெற்ற திறமையாளர்

இங்கிலாந்து நாட்டில் உள்ள மருத்துவத்துறை அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் அங்கம் வகிக்கின்ற ராயல் கல்லூரி (The Royal College of Surgeons of England) என்கிற அமைப்பானது, நூறாண்டுக் காலத்திற்குமேல் பழம்பெருமை பெற்றதாகும்.

இந்த அமைப்பு - அறுவைச் சிகிச்சையைப் பொறுத்த மட்டில், உலகெங்கிலுமுள்ள நாடுகளில் உள்ள திறமையாளர்களைத் தேடிப் பிடித்து, ஆண்டுதோறும் கௌரவ எஃப்.ஆர்.சி. எஸ். (Fellow Royal College of Surgeon of England) வழங்கிச் சிறப்பித்து வருகிறது.

அந்த வகையில், இத்தனையாண்டுக் காலத்தில் பம்பாய், டில்லி ஆகிய வடஇந்திய நகரங்களைச் சேர்ந்த அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் இருவர் மட்டுமே அவ்விருதினைப் பெற்றிருந்தார்கள். ஆனால் இந்த ஆண்டிலோ (1991-92) அந்த விருதானது நம் தமிழ் நாட்டைச் சேர்ந்த அறுவைச் சிகிச்சை நிபுணர் ஒருவருக்குக் கிடைத்திருக்கிறது!

பிரபல முடநீக்கியல் நிபுணர், டாக்டர் எம். நடராஜனே உலக அளவிலான சிறந்த அறுவைச் சிகிச்சை நிபுணர் என்று தேர்ந்தெடுக்கப்பட்டு, கௌரவ எஃப்.ஆர்.சி.எஸ். விருது வழங்கப் பெற்றிருக்கிறார்!

இதுபற்றி அவரிடம் விசாரித்தபோது, "இந்த ஆண்டில் என்னையும் சேர்த்து, இரண்டே பேருக்குத்தான் அவ் விருது அளிக்கப்பட்டது. நான் தமிழன்; என்னோடு விருதுபெற்ற மற்றொருவர், டாக்டர் ஆலய்ன் கார்பென்டியர் என்பவர். அவர் பிரெஞ்ச் நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற இதய நோய் அறுவைச் சிகிச்சை நிபுணராவர்..." என்று மனம் திறந்து மகிழ்வோடு தெரிவித்தார்.

இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தில் மிகச் சிறப்பாகப் பணிபுரிந்தமைக்காக டில்லியில் இவர் விருது பெற்றதுண்டு, ஊனமுற்றோருக்கு ஆற்றிய அறுவைச் சிகிச்சைப் பணிகளுக்காகத் தமிழ்நாடு அரசு விருது வழங்கிப் பாராட்டியதுண்டு; இவை மட்டுமல்ல; லிவர்பூல் பல்கலைக்கழகம் உட்படப் பல்வேறு பல்கலைக் கழகங்கள் 50க்கும் மேலான அமைப்புகளில் ஆற்றிய மருத்துவ ஆய்வுகள் குறித்த அரிய சொற்பொழிவுகளுக்காகவும் ஏராளமான விருதுகளைப் பெற்றிருக்கும் டாக்டர் எம். நடராஜன், 1970இல் தனது 50ஆவது வயதிலேயே முறைப்படி படித்து, அதே லண்டனில் எஃப்.ஆர்.சி.எஸ். விருது பெற்றவராவார்.

ஓய்வுபெற்றதற்குப் பிறகும் துவளாமல் ஆற்றிய தொண்டிற்காகவே இப்போது 72 வயதில் அவருக்கு இந்த கௌரவ எஃப்.ஆர்.சி.எஸ். விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

முடநீக்கியல் குறித்து இவரெழுதிய அரிய ஆங்கில நூலொன்று, இப்போதும் மருத்துவக் கல்லூரியில் பாடமாக வைக்கப்பட்டிருக்கிறது.

"இலண்டன் மாநகரில் உள்ள ராயல் காலேஜ் எட்வர்டு லம்லி ஹாலில் அந்த விருது வழங்கப்பட்டபோது அங்கு எனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பும், உற்சாகத்தோடு அந்நாட்டு மக்கள் செய்த மகிழ்ச்சி ஆரவாரமும் என்னை உணர்ச்சி வசப்படச் செய்துவிட்டன. அந்த விருதும் பாராட்டும் எனக்கு மட்டுமல்ல மேல்நாடுகளுக்கு இணையாக வளர்ந்துள்ள தமிழக மருத்துவத் துறைக்கே அளிக்கப்பட்டது என்றே கருதுகிறேன்" எனப் பெருமிதத்தோடு கூறினார் டாக்டர் எம். நடராஜன்.

முன்னாள் தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஒருமுறை (1962) நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்தபோது ஒரு சண்டைக் காட்சி, எதிர்பாராமல், ஸ்டண்ட் நடிகர் ஒருவரைத் தூக்கிப் போட்டபோது, அவர் தன் துடையில் விழுந்துவைக்க, அதனால் எம்.ஜி.ஆருக்குக் காலில் எலும்பு முறிவு ஏற்பட்ட சம்பவம் உங்களுக்கு நினைவிருக்கிறதா?

அப்போது தக்க சிகிச்சையளித்து அவரது கால் எலும்பைச் சரிசெய்த பெருமையாளர் தான் கௌரவ எஃப்.ஆர்.சி.எஸ். விருது பெற்றுள்ள இந்த டாக்டர் எம். நடராஜன்!

—முடிகொண்டான்

நால் மனிதர்கள்

20

"ராஜப்பா, நா சொல்றதை நீங்க கொஞ்சம் இப்போ கேக்கணும். தயவு செஞ்சி பெரியவங்க நீங்க. உங்களுக்குத் தெரியாத விஷயமில்லே".

ராஜப்பாவின் முதலாளி அடித்தொண்டையில், கிறீச்சிட்டபடி பேசினார். அவருடைய முகம் சிவப்பாகியது. கண்களில் வெறுப்பு தெரிந்தது. நெற்றிப் பொட்டில் நரம்புகள் துடித்துக் கொண்டிருந்தன.

'விசைத்தறியை' எப்படியாவது ஊருக்குள் கொண்டு வந்தே ஆகவேண்டும் என்ற ராஜப்பாவின் பிடிவாதத்தின் உச்சகட்டமாக,

ராஜப்பாவின் சிநேகிதர்கள் சந்திரசேகர் உள்பட நான்குபேர் 'பங்கு' போட்டுத் தறியை மதுரையிலிருந்து கோவை செல்லும் ராமேஸ்வரம் பாஸஞ்சர் வண்டியுடன் இணைக்கப்பட்டுள்ள கட்டிலில் கொண்டு வந்து 'அம்பாத்துரை' ரயில்வே ஸ்டேஷனில் இறக்கி,

வண்டிவைத்து ஊருக்குள் கொண்டுவர ஏற்பாடு செய்ததின் விளைவாகத்தான் ராஜப்பாவிடம் இப்படிக் கோபத்துடன் பேசிக் கொண்டிருந்தார்.

"ராஜப்பா, உங்க முடிவை நீங்க மாத்திக்கலேன்னா..., வீணா உங்க குடும்ப கௌரவத்தையே இழக்க வேண்டிவரும் நாலு பேரு பேசற மாதிரி. மத்தவங்க எல்லாம் 'பணமா' முதலீடு செய்ய, நீங்க உங்க வீட்டுத் தாழ்வாரத்திலேயே 'மிஷின்' போட்டுக்க இடம் கொடுத்துட்டுத் தொழிலைக் கவனிச்சிக்கற 'பார்ட்னரா' இருக்கப் போறதா சொல்றாங்க, உண்மையா?"

சுஜாதா ஃபிலிம்ஸ் லிட். நிறுவனமும், அமுதசுரபி வெளியீட்டாளர்கள் ஸ்ரீராம் டிரஸ்டும் இணைந்து நடத்திய போட்டியில் ரூ. 5,000 பரிசு பெற்ற நாவல்

பாப்ரியா

"ஆமாங்க, நூத்துக்கு நூறு உண்மை. என்கிட்டே சிநேகிதர்கள் போடற அளவுக்கு 'பங்கு' தர பணமில்லே. அவங்கதான் 'இடம்' வேறே பாத்துக்கலாம். உன்னோட பங்கா இதைத் தர்றது என்னமோ சரியில்லைன்னு தான் சொன்னாங்க. தொழிலைச் சரியா பார்த்து 'லாபம் சம்பாதித்துக் கொடுத்தா போதும்னுதான் சொன்னாங்க. அந்த விசைத் தறியைப் பத்திய விஷயம் எனக்கு ஏற்கனவே நல்லா தெரியும்ங்கற நம்பிக்கையிலே இருக்கணுமோ அந்த அளவுக்கு இருக்கணுமே முதலாளி. அதனாலேதான் மிஷின் போடறதுக்கு இடம் கொடுத்தேன். பணத்துக்காக இல்லே; கடமைக்காக."

"அப்போ நீங்க மிஷின் போட்டுத் தறி ஓட்டறதா முடிவே செஞ்சிட்டீங்க இல்லே; சந்தோஷம். வீட்டு மேலே வாங்கியிருக்கிற பணத்தையும் வட்டியையும் கொடுத்துட்டு நீங்க விசைத் தறியைப் போட்டு ஜாம் ஜாம்னு ஓட்டுங்க. இந்த ஊர்லே பசியாலே பஞ்சத்தாலே செத்துகிட்டிருக்கறவங்களுக்கெல்லாம் சோறு போடுங்க நான் வேண்டான்னு சொல்லலே"

முதலாளியின் குரலில் கோபம் தெறித்து விழுந்தது. அதேசமயம் கண்டிப்பும் கறாராக இருந்தது.

ராஜப்பா, "முதலாளி கொஞ்சம் பொறுத்துக்கணும். உடனடியா இப்ப பணமும் வட்டியும் சேர்ந்து கொடுக்க வசதியில்லே. மூணு நாலு மாசத்துக்குள்ளாற நிச்சயமா தந்திருவேன்னு எனக்கு நம்பிக்கையிருக்கு..., அதுமட்டும் பொறுத்துக்கணும்" முடிவாகவே சொன்னார்.

"முடியாது..., முடியாது. ராஜப்பா, எனக்குத் தரவேண்டிய அசலும் வட்டியும் தராமே நீங்க உங்க வீட்டுக்குள்ளே மிஷினைப் போடக் கூடாது. அப்படி போட்டாலும், விடமாட்டேன்...

"முதலாளி, நான் சொல்றதைச் சொல்லிட்டேன், நீங்க சொல்றதைச் சொல்லிட்டீங்க, எது எப்படி நடக்கும்னு இனிமேலே பார்த்துக்கலாம். ஒண்ண நீங்க புரிஞ்சக்கணும்; என்னோட தனி வீடு இல்லே, உங்ககிட்டே நான் அடமானம் வச்சிருக்கறது. அண்ணன் தம்பி மூணு பேருக்கும் பாத்தியப்பட்ட வீடு அது...,

ஒருத்தன் செத்துப் போயிட்டான்..., பரவாயில்லே, இன்னொருத்தன் இருக்கான், அவனும் ஜெயில்லேர்ந்து கூடிய சீக்கிரம் வந்திருவான், வந்தவுடன் என்ன செய்யணுமோ அதை நான் செஞ்சி உங்களுக்குச் சேரவேண்டியதைச் சேர்த்திடறேன்.

→


பேச்சை மட்டும் மாத்தமாட்டேன்…, மாறவும் மாட்டேன், கடைசியா சொல்லிட்டுப் போறேன்.

தெறந்து பாக்கட்டுமேன்னுதான் அதைச் செய்றோம் புரிஞ்சுக்கங்க…, படிக்க ஆரம்பிச்சிட்டா உலகத்தை விஞ்ஞானக் கண்ணோட்டத்துலே பார்க்க ஆரம்பிச்சிட்டா இந்த ஊர்லே யாரும் எனக்குப் பின்னாலே நிச்சயமா வருவாங்க.

விசைத்தறி போடறதனாலே லாபம் இரண்டு பக்கமும்தான். நெசவாளிங்களுக்கு மட்டுமில்லே, நீங்க போட்டிருக்கறது தப்புக் கணக்கு. ஆனா - ஒண்ணு எந்தக் காரணம் கொண்டும் விசைத்தறியை இறக்கி, மிஷின் ஓட்டாமே இருக்கப் போறதில்லே. இதுலே என்னோட உயிருக்கே ஆபத்து வந்தாலும் பின் வாங்கப் போறதில்லே…, வர்றேங்க முதலாளி…,"

தன் பக்க நியாயத்தைக் கொஞ்சம் சத்தம் போட்ட குரலில் பேசிவிட்டு, தோளில் இருந்த துண்டை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டு முன்வாசலைத் தாண்டி வெளியே வந்தார் ராஜப்பா.

உச்சிவெயில் வீதிமணலை நெருப்பாக்கிக் கொண்டிருந்தது. அவர் முகத்திலும் கோபத்தின் வெளிப்பாடு உஷ்ணமாய் வெளியேறிக் கொண்டிருந்தது.



21

பஞ்சாயத்தில் எப்போதும் ஊர்ஜனங்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்காகத் தலையிலிருக்கும் 'உறுமாலை' கழற்றி உதறித் தோளில் துண்டாகப் போட்டுக் கொள்ளும் - ராஜப்பாவிற்கு, இந்தப் பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் வித்தியாசமாய்த்தான் அமைந்து போனது.

ஊரில் என்று அவரைப் பஞ்சாயத்துத் தலைவராக ஆக்கினார்களோ தொடர்ந்து அன்றையிலிருந்து ஊர்ஜனப் பிரச்னைகளுக்காகத் தன்னைத் தயார்படுத்தி தீர்ப்புச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு இருந்து வந்தார்.

இந்தப் பஞ்சாயத்தில் 'மாஸ்டர் வீவர்கள்' சார்பில் அவரவர்களுக்குரிய கணக்குப்பிள்ளைகள் ஒன்று சேர்ந்து 'பிராது' கொடுக்க வந்தது தான், சுவாரஸ்யமான விஷயமாகப் போய் விட்டது.

ஒட்டுமொத்தமாய் மாஸ்டர் வீவர்களின் கணக்குப்பிள்ளைகள் வந்திருந்தாலும், ராஜப்பாவிற்கு ரொம்பவும் பரிச்சயப்பட்ட சிநேகிதமான சில மாஸ்டர் வீவர்களும் இந்தப் பஞ்சாயத்திற்கு வந்திருந்தனர்.

தங்களுடைய பால்யகாலத்து சிநேகிதனைப் பழிவங்கும் உணர்ச்சியோ, எதிர்த்துப் பேசி பணபலத்தால் அவமானப்படுத்தவோ அவர்கள் வந்தமாதிரி இல்லை. மற்ற மாஸ்டர் வீவர்கள் சுமத்தும் குற்றச்சாட்டுகளை எப்படி ராஜப்பா சமாளிக்கப்போகிறார் என்று பார்க்கும் ஆசையும் உந்தலும் காரணம் என்றாலும், பஞ்சாயத்துத் தீர்ப்பில் 'ராஜப்பா' தன் பக்கம் தோல்வியைச் சந்திக்கும் நேரத்தில் முடிந்த அளவு மாஸ்டர் வீவர்களின் போக்கை எதிர்க்காமல் அப்படியே ஒதுங்கி நின்று கொள்ளும்படி ராஜப்பாவிற்கு உபதேசம் செய்யவும்தான் வந்திருந்தார்கள். எந்தக் காரணம் கொண்டும் வந்த மாஸ்டர் வீவர்களில் யாரும், ராஜப்பாவின் விசைத்தறி விவகாரத்திற்கு ஆதரவு தருவதற்காக வரவில்லை, அப்படி ஆதரவு தருவது என்பது, மாஸ்டர் வீவர்களின் 'கட்டுப்பாட்டை' மீறுவதாகும் என்று ஏகமனதாக எழுதப்படாமல் தீர்மானம் செய்யப்பட்ட முடிவு ஆகும். இந்தத் தீர்மானம் பெரிய மாஸ்டர் வீவர் ஒருவர் வீட்டில் 'அமாவாசை' அன்று மாஸ்டர் வீவர்களையெல்லாம் அழைத்து போடப்பட்ட கூட்டத்தில் பேசி முடிவு செய்யப்பட்ட விஷயம்.

வயது அதிகம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ராஜப்பாவிடம் எல்லோருக்கும் பயமும் மரியாதையும் இருந்து வந்தது என்பதை, பஞ்சாயத்து ஆரம்பித்து அரை மணி நேரத்திற்குப் பின்னாலும் 'கசமுசா' என்ற பேச்சுடன் பஞ்சாயத்து மடம் அப்படியே இருந்ததே தவிர, ஆட்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர! வேறெதுவும் நடக்கவில்லை. எதற்காக இப்படி வந்தவர்களில் பலபேர் அமைதியாய் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டதுபோல அமைதியைக் கலைத்து, தானே பேச ஆரம்பித்தார் ராஜப்பா.

"இந்தப் பஞ்சாயத்துலே என்ன பேசணும்ங்கற விஷயம் எனக்கு சிநேகிதர் பலர் மூலமா, தெரிஞ்சிட்டிருக்கேன்.

என்மேலே தனிப்பட்ட பாசமும் மரியாதையும் வச்சிருக்கற யாராக இருந்தாலும் எனக்கு ரொம்பவுமே சந்தோஷம். அவங்க காட்ற பாசத்துக்காக, ரொம்பவும் நான் கடமைப்பட்டிருக்கேன். வயசுலே சின்னவங்களா இருந்தாலும் சரி, பெரியவங்களா இருந்தாலும் சரி கும்பிடறேன்.

என்னோட செல்வாக்கான வாழ்க்கையை நினைச்சு, இப்போ இருக்கற நெலைமையை நெனச்சி பரிதாபப்படறவங்களும் இங்கே இருக்கத்தான் செய்றாங்க.

அவங்களாலே பேச முடியாது, என்ன... பாசம் அவங்க வாயைத் திறக்க முடியாமே செஞ்சிருக்கும்... ரொம்பவும் எனக்குச் சந்தோஷம் இதுலே. இப்படியிருக்கறவங்கதான் இப்போ என்கிட்டே முதலாளிங்க சார்பா 'பிராது' கொடுக்க வந்திருக்காங்க.

என்னமோ எதுக்கோ இன்னமும் தயக்கமா இருக்காங்க என்கிட்டே கொடுக்கறதுக்கு.

தயவு செஞ்சி பிராதைக் கொடுங்க. எதுக்கு நீங்க தயங்கறிங்கன்னு எனக்குத் தெரியாமே இல்லே. நீங்க என்ன செய்வீங்க பாவம், முதலாளிங்க சொன்னா தொழிலாளிங்க கேட்டுத் தானே ஆகணும். அந்த நிர்ப்பந்தத்திலே இருக்கற உங்கமேலே யார் பேரிலேயும் எனக்குச் சங்கடம் இல்லே, கோபமுமில்லே...,

தயவு செஞ்சி பிராதைக் கொடுங்க..., பிராது எதுவா இருந்தாலும் தீர்த்து வைக்கறது நான்தானே. பிராது என் மேலேயே இருக்கும்ங்கறது தெரிஞ்சிப்போன விஷயம். பின்னே எதுக்குத் தயங்கறீங்க?"

அந்தக் கூட்டத்தில் இருந்த அத்தனை பேரின் பக்கமும் தன் பார்வையைச் செலுத்தினார் ராஜப்பா, பேசிவிட்டு.

மடத்தின் படிகளில் ஒருக்களித்து உட்கார்ந்திருந்தவர்களும், வெளிவாசலில் சம்மணமிட்டு உட்கார்ந்திருந்தவர்களும், மடத்தின் தூண்பகுதிகளின் மேடைகளில் உட்கார்ந்திருந்தவர்களும் ராஜப்பா பேசியதைக் கேட்டு அப்படியே இருந்தார்களே தவிர யாரும் வாய் திறந்து பேசவில்லை.

கர்ப்பக்கிரகத்தின் பக்கமாய் நின்றுகொண்டிருந்த கணக்குப் பிள்ளைகளில் ஒருவர்தான், வயது கொஞ்சம் அதிகமாயிருந்தவர் போல இருந்தவர்தான் கக்கத்தில் வைத்திருந்த துணிப்பையில் கையை விட்டு, கடை முகவரியுடன் இருந்த காகித உறையை எடுத்துக் கொடுத்தார்.

அதைப்பிரித்துப் படித்தவரின் முகசலனங்களை மற்ற கணக்குப்பிள்ளைகள் பார்த்தார்களோ இல்லையோ தைரியமாக ஒவ்வொருத்தரும் கொண்டு வந்திருந்த காகித உறைகளை ராஜப்பாவிடம் கொடுத்தனர்.

ராஜப்பா எல்லாவற்றையும் வாங்கி சந்திரசேகரிடம் கொடுத்து தனித்தனியாகப் பிரித்துக் கொடுக்கச் சொன்னார். ஒவ்வொன்றையும் கவனமாகப் படித்துக் கொண்டிருந்தபோது, கடைசியாகக் கொடுத்த 'பிராதை'ப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தவரின் முகத்தில் கோபத்திற்கான அடையாளங்கள் தெரிந்த போதும், தன்னைச் சுதாரித்துக்கொண்டு ஒரு தடவைக்கு இரண்டு தடவையாகப் படித்தார். அவரது முக பாவனைகளைப் பார்த்துவிட்டவர்கள், என்ன சொல்லப் போகிறாரோ ஏது சொல்லப் போகி



றாரோ 'தலைவர்' என்று ராஜப்பாவின் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சிலரின் முகத்தை ராஜப்பா கூர்மையாகக் கவனித்தபோது அந்தப் பார்வையின் அர்த்தத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டனர்.

"எது எப்படி இருந்தாலும் சரிதான் எக்காரணம் கொண்டும் விசைத்தறியை ஊருக்குள் கொண்டு வர முயற்சி செய்ய வேண்டாம். மீறினால் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம்"னு ஒரு பிராது சொல்லுது.

எல்லாமே உறையிலே இருந்து விலாசம் பார்த்துப்படிச்சாலும் கடைசியா இந்தப்'பிராது' இருந்த உறையிலே விலாசமில்லே. இதை யாரு எந்தக் கணக்குப்பிள்ளைங்க கூட்டத்திலே இருந்து குடுத்தாங்கன்னு நான் கேக்கப் போறதில்லே. அவுங்கவுங்க 'மனசாட்சி'ன்னு ஒன்னு இருக்கு. அவங்கதான் என்ன செய்வாங்க பாவம். முதலாளிங்ககிட்டே முதுகு வளைஞ்சி நின்னே அடிமையாயிட்டவங்க.

என்னைப்பத்தி யார் வேணும்னாலும் எப்படி வேணும்னாலும் பேசலாம். ஏன்னா நீங்களா பார்த்துக் கொடுத்த தலைவரு பதவிதான் உங்களுக்கு அந்த தைரியத்தைக் கொடுத்திருக்கு. இது தப்புன்னு நா சொல்லலே.

உழைக்கற ஜனங்க நீங்களாப் பார்த்து என் மேலே குத்தம் சொன்னா எனக்கு இன்னமும் சந்தோஷமா இருந்திருக்கும். உங்களுக்கு என்னைப் பத்தி குத்தம் சொல்லத் தகுதி இருக்கு. அதனாலேதான் சொல்றேன். நீங்களா பார்த்து என்மேலே பிராது கொடுத்தா நல்லா இருக்கும்.

இதெல்லாம் இல்லாமே என்கிட்டே முதலாளிங்க பலபேரு சேர்ந்து பிராது கொடுத்து அனுப்பிச்சி வச்சிருக்காங்க, கணக்குப்பிள்ளைங்ககிட்டே,

இப்ப படிச்சுப் பாத்த அத்தனை கடுதாசிங்கள்ளே இருந்த விஷயம் ஒட்டுமொத்தமா சொல்லப்போனா,

'விசைத்தறிகளே' ஊருக்குள்ளே கொண்டு வரக்கூடாதுங்கறதுதான். இதைத்தான் முக்கியமான விஷயமா எழுதியிருக்காங்க.

எதுக்காக இவங்க இப்படி ஒட்டுமொத்தமா கூட்டு சேந்து எனக்கு எச்சரிக்கை விடுக்கறாங்கன்னு யோசித்துப் பார்த்தா....,

இந்த ஊர்லே இருக்கற நெசவாளிங்க எல்லாமே இப்படியே தா இருக்கணும்னு அவுங்க ரொம்பவுமே விரும்பறாங்கன்னு தெரியுது.

நீங்க எல்லாம் உங்க தலைமுறையிலே இப்படியே இருந்து உங்க குழந்தைங்க குட்டிங்களுக்கெல்லாம் தறிக்குழிகளை மட்டுமே பரம்பரைச் சொத்தா வச்சிட்டுப் போகணும்ங்கறதா அவங்க ஆசை..."

சொல்லி முடிப்பதற்குள்ளாகவே ஒரு கணக்குப்பிள்ளை தன் முதலாளிக்காக ஆதரவாகப் பேசியது மற்ற கணக்குப் பிள்ளைகளுக்கெல்லாம் கொஞ்சம் தெம்பு வந்தது போல ஆயாசப் பெருமூச்சு விட்டுக் கொண்டார்கள். இருந்தபோதிலும் ராஜப்பாவைப் பற்றித் தெரிந்து கொண்ட ஒருசில கணக்குப்பிள்ளைகள் தலைவரையே உற்றுப் பார்த்தார்கள். முகத்தில் எந்தவிதச் சலனமில்லாமல்.

"நீங்க என்ன இருந்தாலும் இப்படி ஒருதலைபட்சமா பேசக்கூடாதுங்க தலைவரே. எல்லா முதலாளிங்களும் உங்களுக்கு என்ன கெடுதல் பண்ணிருக்காங்க...? எதுக்காக நீங்க ஊர ஜனங்களையெல்லாம் இப்படி அது இதுன்னு சொல்லி ஆசையைக் காட்டி ஏதோ அரைவயிறு கஞ்சி குடிச்சிட்டிருக்கறதைத் திசை திருப்ப

ணும். இந்த ஊருக்குள்ளே யாருக் குமே இல்லாத அக்கறை உங்களுக்கு மட்டுந்தானா...?"

ராஜப்பா அப்படிப் பேசிய கணக்குப் பிள்ளையைக் கூர்ந்து பார்த்தார். அந்தக் கணக்குப் பிள்ளைமீது அவருக்குப் பரிதாபம் தான், மனசுக்குள் பட்டது. சுயயோசனை இல்லாமல் இந்த ஊரின் நிலையைச் சரியாகத் தெரிந்துக் கொண்டும், இப்படிப் பேசுவதற்கு ஐம்பது வயதையும் தாண்டி நிற்கும் இந்தக் கணக்குப் பிள்ளைமீது இரக்கம்தான் ஏற்பட்டது. ஏதோ பந்த பாசத்தினாலே சாப்பிட்ட வயிற்றை வளர்த்த கடனாலேதான் இப்படிப் பேச வைக்கிறது இவரை என்று நன்றாகப் புரிந்துக் கொண்டார். நிச்சயமாக எதற்கு இந்த வம்பு. தானுண்டு பெண்டாட்டி உண்டு பிள்ளை களுண்டு, ஊரே காலியான காலத்துலேகூட, சோறு தண்ணி கொடுத்த முதலாளிக்குப் போய் துரோகம் செய்யலாமா என்று நினைத்ததின் நன்றிக்கடன்தான் இவரை இப்படிப் பேச வைக்கிறது என்று தெரிந்து கொண்டது போல,

"சரிங்க உங்க இஷ்டம் போல பேசிட் டீங்க. இப்படி உங்களைப் பேசச் செய்யறது எதுங்கறது நல்லாவே தெரி யுது, நன்றிக்கடன் தானே உங்களுக்கு 'மனசாட்சியா' இப்போ இருக்கு. ரொம்பவுமே சந்தோஷம். மன சாட்சியை மறக்காமே இப்படி இங்கே இருக்கற ஜனங்கள் எல்லாமே பழசை நெனைச்சிட்டு இருந்தா போதும், என்னோட ஆசை நியாயமானதுன்னு உங்களுக்குத் தெரியும் கண்டிப்பா... இல்லே?"

கேள்விக்குறியைப் போட்டு நிறுத்தினார் ராஜப்பா. எதற்காக இப்படிச் சொல்கிறார் என்று புரியாமல் விழித்தனர் கூட்டத்திலிருந்த வர்கள்.

"நான் எதைசொல்ல வர்றேன் என்று சொல்ற விஷயம் பலருக்குப் புரியாமே இருக்க லாம், தெளிவாச் சொல்லிடறேன்.

நம்ப கணக்குபிள்ளை தன்னோட முதலாளி தன்மேலே காட்டியிருக்கற அன்புக்காக, இப் படி முதலாளிக்குச் சாதகமா பேசியிருக்காரே, அதை நான் மனசாரப் பாராட்ட வேண்டிய திருக்கு.

ஒரு மனுஷனுக்கு இன்னொரு மனுஷன் செஞ்ச உதவிக்கே - இப்படி வரிஞ்சி கட் டிட்டு..., வர்ற மனசு..., கோள் சொல்றதா தப்பா நெனைச்சிட்டுப் பேச வர்ற மனசு...,

நீங்க நல்லா புரிஞ்சுக்கணும்..., நாம பொறந்து வளர்ந்த மண்ணு எவ்வளவு பெருமை யோட இருந்து வந்திருக்கு, செத்துப் போனா நம்ப மூதாதைங்க அவங்கவுங்க காலத்துக்குத் தகுந்தாப்பலே பொழச்சி முடிஞ்சு போனாங்க. அதே நேரத்திலே, இந்த ஊருக் குன்னு தொழில் ரீதியா, ஜனங்களோ பழக்க வழக்கங்க ரீதியா பண்பாட்டையெல்லாம் குடுத் துட்டும் போயிருக்காங்க.

மொத்தத்துலே மனுஷனா பொழைக்கறதுக் கான நீதியையும் தொழிலையும் நமக்குச் சொத்தா விட்டுட்டுப் போயிருக்காங்க. இல்லே?

இதை நாம புரிஞ்சுக்கணும். அவுங்க விட் டுட்டுப்போன 'சொத்து' இதுதானே. அவுங்க காலத்துக்கு அதெல்லாம் சரியா இருந்திருச்சி, சரின்னு இருந்துட்டுப் போயிட்டாங்க.

நம்ப காலம் வேறே இல்லியா..., அவங்க காலத்துலே 'வாழ்க்கைங்கற அர்த்தத்துக்கும் நம்ப காலத்துலே வாழ்க்கைங்கற அர்த்தத் துக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கு தில்லே.



காலம் மாறிவர்ற சூழ்நிலையிலே, தனிப்பட்ட மனுஷர் மேலே வச்சிருக்கிற பழைய பிடிப்பை மனசுக்குள்ளே வெறியா வச்சிட்டிருக்கறதிலே அர்த்தமில்லே.

நிகழ்காலத்திலே வாழறதுக்குத் துடிச்சி கிட்டு இருக்கற ஜனங்களுக்காக அவங்களுக்கு ஆதரவா நியாயமான கருத்தோட ஒத்துப் போறதுதான் எனக்கு விவேகம்னு படுது.


நான் சொல்றது சரின்னா உங்க முத லாளிங்ககிட்டே போய் சொல்லுங்க. தப்புன்னா இங்கேயே சொல்லுங்க."

"அப்போ விசைத்தறி வந்திருச்சின்னா...., எல்லாமே சரியா போயிடுமா?"

"விசைத்தறிங்கறது நான் நம்ப தொழிலை இயந்திரமயமா கொண்டு வந்தா நெசவாளிங் களுக்கும் நல்லது, முதலாளிங்களுக்கும் நல்ல துன்னு சொல்றதுக்காகத்தான் சொல்றது. விசைத்தறியை மட்டுமில்லாமே திருப்பூர் - ஈரோடு - சேலம் - மாதிரி இருக்கற ஊருக் குள்ளே பனியன், பெட்ஷீட், லுங்கி, காடா மல் லுன்னு இதையெல்லாம் உற்பத்தி செய்ய அது அதுக்குத் தகுந்தாப்லே 'விசைத்தறி' இருக்கே அதையெல்லாம் கொண்டு வந்து அறிமுகப் படுத்தலாமில்லையா... நம்ப முதலாளிங்க?"

"அதைப்பத்தியெல்லாம் அனுபவமில்லாமே எப்படி...?"

"அனுபவமில்லேன்னா கேட்டுத் தெரிஞ்சுக் கறது தப்பில்லே...., தொழில் நடக்கற இடத் துக்குப் போய் தெரிஞ்சக்கறதும் தப்பில்லே....,



இதை எல்லாத்தையும்விட தப்பு...., எதைப் பத்தியுமே ஆனா ஆவன்னா தெரியாமே ஒட்டு மொத்தமா மறுக்கறதுதான்...., நம்ப முத லாளிங்க இப்போ இந்தத் தப்பைதான் செய்ய றாங்க, செஞ்சிட்டு வர்றாங்க. அவங்க அந்தஸ்துதான் அவங்களை அப்படிப் பேச வைக்குதுன்னா...., தொழிலை நம்பி வயித்தைக் கழுவிட்டிருக்கிற நம்ப ஜனங்களுக்குத் தெரிய வேணாமா...., நீங்க எல்லாம் நல்லா யோசிச் சிப்பாருங்க. நான் சொல்றது நல்லா புரியும். நியாயம் இருக்கிறது தெரியும். இதை நீங்க உங்க முதலாளிங்ககிட்டே விபரமா எடுத்துச் சொல்லுவீங்கன்னு நம்புறேன். இங்கே சில முதலாளிங்க வந்திருக்காங்க. அவுங்க 'யாரு பக்கம்ன்னு' நான் சொல்ல முடியாட்டாக் கூட,

ஒன்னு மட்டும் புரியுது. அவுங்களுக்குகூட இந்தப் பஞ்சாயத்து மேலே நம்பிக்கையிருக்கிற மாதிரி தெரியுது. இல்லேன்னா இங்கே இப்போ வர்றதுக்குக் காரணமில்லே, வேடிக்கைப் பாக்கறதுக்கு அவங்க வந்த மாதிரி எனக்குத் தெரியலே" சொல்லிவிட்டு முதலாளிகள் நின் றிருந்த பக்கம் பார்த்தார் ராஜப்பா, நின்றுக் கொண்டிருந்த முதலாளிங்களும் ராஜப்பாவைப் பார்த்தார்கள். அவர்களது பார்வையில் எந்த விதக் குரோதமோ பரிகாசமோ தெரிவதாகத் தெரியவில்லை...., பரஸ்பர சிநேகிதத்தில் உண்டான உணர்ச்சிகளின் வெளிப்பாடுதான் தெரிந்தன...,

"எக்காரணம் கொண்டும் இந்த ஊருக்குள்ளே 'மிஷின்ங்கன்னு' எது வுமே வரக்கூடாதுன்னு எங்க முத லாளி சொல்லிகிட்டிருக்காரு...., அவரு சார்பா நான் சொல்றதா தலை வர் எடுத்துக்கவேணாம். என்னோட மனசுக்குப் பட்டதைச் சொல்லிட்டேன்.

ஊரு பத்தியும் ஜனங்களைப் பத்தியும் நீங்க படற அக்கறை எனக்குத் தெரி யாம இல்லே; இருந்தாலும் உங்க மாதிரி இருக்கறவங்க, எதுக்கு வீணா கெட்டப் பேரு சம்பாதிச்சிகிட்டுன்னு தான் சொல்ல வர்றேன்..."

கணக்குப்பிள்ளை இன்னொருவர் பேசியதும் ராஜப்பாவின் முகத்தில் சிரிப்பு ரேகைகள் படர்ந்தன. வார்த்தைகள் வந்த பக்கம் பார்த் தார். சொன்னவர் உடனே தன்னைச் சுதாரித் துக் கொண்டிருக்கவேண்டும், சொன்னவர் யார் என்று அடையாளம் கண்டுபிடிக்க முடியாதபடி சாதாரணமாய் முகத்தை வைத்துக் கொண்டிருக்க வேண்டும். எல்லோருடைய முகங்களும் ஒரே மாதிரியாய் சலனமில்லாமல் எல்லாமே பொங்கி எழுந்தன அமைதியான உணர்ச்சிகள். ஒளிவதற்கு இடம் கொடுத்தவை போலிருந்ததெனப் பேசியதும் பேசிவிட்டு அவ்வளவு என்ன பயம்..., அதற்குள் சலனமில்லாத உருவங்களாய் ஆகிப்போன மனித உருவங்களுக்கும் இங்கு 'சிலையாய்' இருக்கும் பிள்ளையார் உருவ அமைப்பிற்கும் என்ன வித்தியாசம்..., என்று தனக்குள்ளே கேட்டுக் கொண்டது போல நின்றிருந்தவர்,

"பாருங்க, இதைப் பேசினவங்க யாராக இருந்தாலும் எனக்குக் கவலையில்லே, ஒரு சில முதலாளிங்க சொல்றாங்கன்னுட்டு நான் என் னோட கொள்கையே மாத்திக்கற மாதிரி இல்லே.

இந்த ஊரு, ஜனங்க உருப்பட வேணும்னா நிச்சயமா நானே இல்லாட்டி இந்த யாரோ ஒருத்தர்...., இன்னமும் சொல்லப் போனா இங்கே இப்போ இருக்கிறவங்களிலே யாராக

சும்கூட வெளிஉலக நாட்டு நடப்புகளைத் தெரிஞ்சிட்டு அதுக்குத் தகுந்தாப்பலே ஏதாச்சும் மாத்தா செஞ்சாதான் நல்லது. இல்லேன்னா நிச்சயமா எதிர்காலத்துலே நம்ப பிள்ளைங்க ஊரைவிட்டு வெளியேறியே ஆகணும், தொழிலுக்கும் சரி, சாப்பாட்டுப் பிரச்னைக்கும் சரி, இது நிச்சயமா நடக்கப் போற ஒண்ணு.

பழசை நெனைச்சிட்டே நாம இருந்தா, மாறி வர்ற உலகத்துக்கு முன்னாலே நம்ப வாரிசுங்க தலை குனிஞ்சுதா ஆவணும், வேறே வழியே இல்லே....,"

'நீங்க பாட்டுக்குச் சொல்லிக்கிட்டிருக்க வேண்டியதுதா தலைவரே, முதலாளிங்க யாரும் விசைத்தறி வர்றதை ஒத்துக்கிட மாட்டாங்க..."

"ஆமா அதுதான் உண்மை.

முதலாளிங்க பக்கம்தான் இந்த ஊரே அடங்கிக் கிடக்குது. அப்புறம் எப்படி விசைத் தறி ஊருக்குள்ளே வரவிடுவாங்க?

இப்பவாச்சும் விசைத்தறியை ஊருக்குள்ளே கொண்டு வந்து போட்டுட்டுத் தொழில் செய்யக் கூடிய வாய்ப்பை இந்த ஊரு பயன்படுத்தி கிட்டா நல்லது. இதையும் விட்டுட்டா அப்புறம் அந்த ஊருக்காரன் நல்லா இருக்கான், இந்த ஊருக்காரன் நல்லா பொழைக்கறான்னு பொறாமை பொல்லாப்பு பொச்சரிப்புன்னு பேசிகிட்டுத்தான் திரியணும் வெறுமனே.

முதலாளிங்களுக்கு இதைப்பத்தியெல்லாம் அக்கறையில்லே.

இதையெல்லாம் யோசனை செஞ்சிதான் நானும் சிநேகிதர் சந்திரசேகர் உட்பட சிலர் சேர்ந்து 'விசைத்தறியை' முதன்முதலா ஊருக்கு அறிமுகம் செய்யலாம்னு முயற்சி எடுத்து செஞ்சிட்டு இருக்கோம். எப்படியும் இந்த வாரத்துக்குள்ளே, நிச்சயமா இது நடக்கும் சந்தேகமில்லாமே. யார் தடுத்தாலும் நடக்கத்தான் போகுது" என்று பேசி முடித்து விட்டு, நேரம் ஆகிவிட்டதால் அடுத்த கூட்டத்தில் மற்ற விஷயங்கள் பற்றிப்பேசிக் கொள்ளலாம் என்று சொல்லிவிட்டு எழுந்தார். கடைசியாக அவர் சொன்ன வார்த்தை கூட்டத்தில் குறிப் பாகக் கணக்குப்பிள்ளைகள் பக்கம் 'கசமுசா' என்று பேசிக் கொள்ள வைத்துவிட்டது. நெசவாளிங்களுக்கு விசைத்தறியைப் பற்றிய அனுபவங்கள் எதுவும் இல்லாததாலும் அதைப் பார்க்காத விஷயம் என்பதாலும் அதைப்பற்றிய பேச்சுகளும் பிள்ளையார் மடத்தின் சுவர்களில் முட்டிமோதி எதிரொலித்தன.

தள்ளுவண்டியில் டூரிங் கொட்டகையிலும் ராயல் தியேட்டரிலும்நடைபெறும் சினிமாப் பட சுவரொட்டிகளை ஒட்டிய தள்ளுவண்டிகளின் கிணிங் கிணிங் மணியின் ஓசையும் குழந்தை களின் விளையாட்டுச் சத்தமும் மீறி, "பாத்து விடலாமே எப்படி ஊருக்குள் விசைத்தறி வர்றதை..." என்ற குரல் இருட்டில் ஓடிமறைந்த மனிதனிடமிருந்து தெறித்து விழுந்து மறைந்தது. ராஜப்பாவின் நினைவில் உறுத்தியது.

22

ராஜப்பாவும் சந்திரசேகரும், பட்டசாலை யில் 'பாணம்' பறிக்கச் சொல்லிவிட்டு கொத்த னாரிடம் விசைத்தறிகளின் இரும்புக்கால்கள் எந்த அளவிற்கு மண்ணில் பதியவேண்டும் என்ற அளவை விவரமாகச் சொல்லிவிட்டு, கூடவே நெருங்கிய சிநேகிதர்கள் நாலைந்து பேருடன் 'அம்பாத்துரை ரயில்வே ஸ்டேஷனுக்கு' கால்நடையாகவே விசைத்தறி விஷயங்களையும், இதற்கு மேலே ஊருக்குள் ஜனங்களுக்கு ஏற்படப் போகும் தொழில் பிடிப்பைப் பற்றியும் பேசிக் கொண்டே ஸ்டேஷனுக்கு வெளியே இருந்த காட்டுமரங்கள் நிழலில் உட்காரும்போது வெயில் உக்கிரமாக இருந்தது.

ஏற்கனவே சொல்லிவைத்தாற்போலப் பதி னைந்து இருபது இளந்தாரிகள் பிளாட் பாரத்தை ஒட்டியபடி இருந்த நடைபாதைப் பக்கமாய் பெட்டிக்கடைகளில் கும்பல் கும்ப லாய் நின்று டீ குடிப்பதும், பீடி சிகரெட் குடிப் பதுமாக நின்று கொண்டிருந்தனர். ஒவ்வொரு வரின் பேச்சிலும் ஏதோ சாதனை செய்வதற் கான மும்முரமான கருத்துகள் இடம் பெற்றி ருந்தன.

எப்படியும் நெசவாளர்களின் பிரச்னைகள் இதுமாதிரியான விஷயத்தில் இல்லையென்றால் படிப்பு விஷயத்தில் மட்டும்தான் எதிர்காலத்தில் உதவும் என்ற திடமான நம்பிக்கைதான் பிரதானமான விஷயமாயும்,

அதே சமயத்தில், தங்களைப் படிக்க வைக்காமல் தறிக்குழியிலேயே தொழில் பழக்கி விட்ட பெற்றவர்களின் மீதான வெறுப்பும்தான் கலந்து வெளிப்பட்டிருந்தன.

தறிக்குழியில் நெய்யும் நேரம் போக மீதி நேரங்களில் எல்லாம் சினிமா விஷயங்களைப் பற்றியும், கோவில் குளம் என்றும் சுற்றி வரும்போதும் வயதுப் பெண்களைப் பற்றி பேசிப் பேசி சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்த அவர்களின் மனத்தில் எல்லாம் ஏதோ ஒரு புதிய மாற்றம் தென்படத் தொடங்கியதுபோல, பேச்சுகளில் பிடிப்பும் உருப்படியான சிந்த னைகளும் சேர்ந்திருந்ததை,

பெட்டிக்கடைக்குப் போய் வெற்றிலை பாக்கு வாங்கிக் கொண்டு 'டீ' சொல்லிவிட்டு வந்த ராஜப்பாவுடன் சேர்ந்து வந்த சிநேகி தர்கள் இரண்டுபேர் கவனித்து வந்து, ராஜப்பா விடம் சொன்னபோது;

அவருக்கும் சரி, சந்திரசேகருக்கும் சரி மிகவும் உற்சாகமாய்ப் போய்விட்டது, ஊரே தங்கள் பக்கம் இருப்பதைப் போல பலம் வந்து விட்டதாக உள்ளூர உற்சாகம். இளந்தாரி களைப் பார்த்தபடி பேசிய பேச்சுகளும் சிரிப்பும், இதுவரை கவனிக்காமல் இருந்த இளந்தாரிகளைத் திரும்பிப் பார்க்கச் செய்தது, தலைவரும் மற்றவர்களும் உட்கார்ந்திருந்ததைப் பார்த்தவுடன் கையிலும், வாயிலும் வைத்திருந்த பீடி, சிகரெட்டு துண்டுகளை எல்லாம் கீழே போட்டுவிட்டு 'மரியாதை' தரும் விதத்தில் ஒதுங்கிப் பதுங்கி நின்று அங்கிருந்து பார்த்தார்கள். அவர்களின் பார்வையில் சங்கோஜமும் அதேசமயம் தங்களைத் தலைவரும் கூட இருப்பவர்களும் கவனித்துவிட்டார்களோ என்ற பயம்கலந்த உணர்வுகளும் நன்றாகவே தெரிந்தன.


ராஜப்பா அவர்களையெல்லாம் கையசைத்து தானிருக்கும் இடத்திற்கு வரும்படி ஜாடை செய்தார்.

இரண்டு பேராய் மூன்று பேராய் அவர்கள் சன்னமாய் அடித் தொண்டையில் பேசியது வெளியே கேட்காதபடி ஒவ்வொருவர் நெருங்கி வந்து, தலைவர் ராஜப்பா இருந்த இடத்திற்கு முன் பத்து பதினைந்து அடி தூரத்தில் மரி யாதையுடன் கைகட்டிக் கொண்டு நின்றனர்.

தன்முன் கைகட்டியபடி நின்றிருந்த ஒவ் வொருவனையும் கூர்ந்து பார்த்தார். அவரது பார்வையைத் தாங்க முடியாமல் எல்லோருமே தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டனர்.

இன்னும் சிறிது நேரத்தில், மதுரையிலிருந்து வரும் ரயிலிலிருந்து இறக்கப்படும் மிஷின் களால் இந்த ஊரின் பழைய தலையெழுத்து மாற்றப்படப் போகிறது என்ற கனவு குமிழ் பூவாக மலர்ந்து விடும் என்ற எண்ணத்தில்....

மதுரை மார்க்கத்திலிருந்து வரும் ரயிலை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதும், தன்னுடைய சிநேகிதர்கள் சந்திரசேகர் உட்பட எல்லோரை யும் தண்டவாளங்களின் பக்கமாகப் போய் நிற்க லாம், வண்டி வரும் நேரமாகிவிட்டது என்று சொல்லிக் கூப்பிட்டபடி முன்னதாக எட்டி வைத்தார். கையிலிருந்து குடையைப் பிரித்துக் கொண்டார் கூடவே நடந்து கொண்டிருந்த



வர்களில் சிலர் தோளிலிருந்து தங்கள் துண்டை எடுத்துத் தலையின் மேல் போட்டுக் கொண்ட னர். இன்னமும் சிலர் தண்டவாளங்களுக்குத் தள்ளி பத்துபதினைந்து அடிகளுக்கு பின்னால் இருந்த சம்பங்கி, மாமரம், பூவரசு, முருங்கை மரங்கள் நிழல்கள் பக்கமாக வெயிலுக்கு ஒதுங்கி நடந்து கொண்டிருந்தார்கள்.

கைகாட்டி இறங்குவதற்கும் ராஜப்பாவும் அவருடன் வந்தவர்களும் ஸ்டேஷனுக்குப் பின் புறமாய் சரியாக வண்டியில் இணைக்கப்படும் கூட்ஸ்பெட்டிகள் வந்து நிற்கும் இடத்திற்குப் போய் நிற்பதற்கும் சரியாக இருந்தது

ரயில் மெதுமெதுவாகத் தேங்கித் தேங்கித்தன் ஓடுபாதையில் நிற்கவும் கடைசிப் பெட்டியி லிருந்து மதுரைக்கு அனுப்பிய சிநேகிதன் வெளியே கைக்காட்டியபடி அசைத்ததும்.

ராஜப்பாவின் முகமும்கூட வந்திருந்தவர் களின் முகங்களும் சந்தோஷத்தால் நிறைந்தன. பதிலுக்காய் தங்கள் கைகளை ஆட்டிக் கொண்டே முன்நடந்தார்கள் கூட்ஸ் பெட்டி இருந்த இடத்தைப் பார்த்தபடி. நடையில் வேகம் இருந்தது. எல்லோருடைய மனத்திலும் அவசரம் இருந்தது; விசைத்தறி என்றால்

என்ன என்று பார்க்கும் வேகம் இருந்தது. இவர்களின் அவசரத்திற்குத் தகுந்தாற்போல,

கடைசிப் பெட்டியில் இருந்த சிநேகிதன் ஸ்டேஷன் மாஸ்டரிடம் ஏதோ ஒரு வெள்ளைத் தாளைக்காட்டிக் கையெழுத்து வாங்கிவிட்டு, உள்ளே இருந்த ஒவ்வொரு தறிபாகத்தையும் அவசர அவசரமாக வெளியே எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தார். வண்டி நிற்கும் நேரம் மிகவும் குறைந்தபடியானதால் பம்பர மாய் முடிந்த அளவு தன்னால் தூக்கிப் போட முடிந்ததை எல்லாம் தூக்கிப் போட்டுவிட்டு,

சீக்கிரம் கூட்ஸின் உள்ளே நான்கு ஐந்து பேர்களை வரச் சொல்லிவிட்டு முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டார் புறங்கையால். ஏதோ, தன்னிடம் ஒப்படைக்கப் பட்ட காரியத்தைக் கனகச்சிதமாக முடித்து விட்ட திருப்தியைப் போல பெருமூச்சுவிட்டு விட்டு ஓரமாய் ஒதுங்கி நின்று தன்னை ஆசு வாசப் படுத்திக் கொண்டு,

கூட்ஸில் ஏறிய இளந்தாரிகளை 'அப்படிப் பிடியுங்கள் இந்தப் பக்கம் பிடியுங்கள் பார்த்து.... பார்த்து காலில் தப்பித்தவறி விரல் கத்தரித்துவிடப் போகிறது. விழுந்திச்சோ காலே கந்திப் போய்விடும்' என்று எச்சரிக்கை செய்து கொண்டிருந்தார்.

குறுக்குத் தண்டவாளமாக இருப்பது போன்ற இரும்புக் கிராதிகளும், சக்கரங்களும் சுழலும் இரும்புத் தண்டுகளும், பட்டு நூல்களைத் தனித் தனியாக மாட்டுவதற்காக மேல்பக்கமாக இருக்கும் நீளமான பீடங்களில் பொருத்தப்பட்ட உருண்டையான கம்பிகளில் கொக்கி போன்ற வளைய ஊக்குகளும் என்று ஒவ்வொன்றும் தனித்தனியாகக்கீழே இறக்கிவைக்கப்பட்டபின்,

கடைசியாக இதையெல்லாவற்றையும் தாங் கிக் கொள்ளக்கூடிய பெரிய இரும்பு பீடங்கள் இரண்டை கூட்ஸில் இருந்தவர்கள் லேசாக நகர்த்திக் கொடுக்க, பத்திரமாய், நூதனமாக இறக்கி வைக்க வேண்டிய நிலையில் தண்ட வாளத்தின் பக்கம் நின்றிருந்த மற்றவர்கள் எல்லாம் ஆளுக்கொரு கை பிடித்து இறக்கி வைக்கும்போது,

ராஜப்பாவும் தன் பங்காகத் தோளில் இருந்த துண்டைத் தலையில் சுற்றிக் கொண்டு குடையை ஓரமாக வைத்துவிட்டு, இரும்பு பீடத்தின் கடைசி முனையில் தன் கைகளைத் தாங்க லாகக் கொடுத்து - மூச்சுப் பிடித்து 'மெதுவா மெதுவா' என்று சொல்லியபடி இறக்கி வைக்கும்போது,

இதுவரைக்கும் ஸ்டேஷனின் எந்தப்பக்க முமே ஆள் ஆரவாரம் இல்லாத நிலையில் எங்கிருந்து வந்தார்களோ பத்து பதினைந்து பேர் கையில் கம்புகளுடன், எல்லோரும் கைக் கொடுத்த இரும்பு பீடங்களை இறக்கிவைக்க முயற்சி செய்து கொண்டிருந்தபோது, முதுகுப் பக்கம் வந்து நின்றவர்கள் ஒவ்வொரு வரும் தங்கள் கையில் இருந்த கம்புகளால் சரமாரியாக ஓங்கித் தலையில், முதுகில் என்று சராமாரியாக அடித்து விட்டுச் சிதறி ஓடிப் போகும்போது, அடிபட்டவர்களும் அவர் களைப் பிடிக்க ஓடும்போது, மறைந்திருந்த ஒருவன் கடைசியாக ஒருவன் தன் சக்தியை முழுவதும் திரட்டி, 'என்ன ஏது திடீரென்று' என்று ராஜப்பா அதிர்ச்சி அடைந்து திரும்பிப் பார்க்கவும் ஓங்கி அடிக்கவும் தலையில் ரத்தம் பீறிட்டு இறக்கி வைக்கப்பட்ட உதிரி இரும்புச் சாமான்களின் மீது 'பலி' ரத்தமாய் தெறிக்கவும் சரியாய் இருந்தது.

கண்களில் ரத்தம் வழிந்து, கண்கள் திறப்ப தற்கு வழியே இல்லாதபடி, கைகள் இரண்டும் சேர்ந்து பிசினைப்போல ஒட்டிக்கொள்ள இரும் புப் பீடத்தை, கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டே,'சந்திரசேகர்... நீதானப்பா செய்ய ணும்' என்று சரிந்து மயங்கி விழுந்தார் ராஜப்பா.

சந்திரசேகரும் இன்னும் ஒரு சிலரும் அடிபட்டிருந்தபோதும், சுதாரித்துக் கொண்டு விழுந்து எழுந்து பார்க்கும்போது, தங்க ளைச் சேர்ந்தவர்கள் அடித்தவர்களைத் துரத்திக் கொண்டு ஓடியதை மட்டும் பார்க்க முடிந்தது.

ராஜப்பாவின் தலையில் அடிபட்டுவழிந்து கொண்டிருந்த ரத்தத்தை அவர் தலையில் கட்டிக் கொண்டிருந்த துண்டாலே நெற்றியைச் சுற்றி அழுத்திக் கட்டிவிட்டு, ஏதாவது குதிரை வண்டி வருகிறதா என்று பார்க்கவும், அம்பாத் துரை ஸ்டேஷனின் முன்புறமாகக்குடையோடு பாதை வழியாக ஒரு குதிரை வண்டி வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

சந்திரசேகரும் கூட இருந்தவர்களும் ராஜப் பாவைத் தலைப்பக்கமும் கால்பக்கமும் ஆளுக் கொருவராய் சேர்ந்து பிடித்து வண்டியின் பின்புறமாக இருந்த கம்பியைக் கழற்றி விட்டு உள்ளே படுக்க வைக்க வைத்தனர்.

வண்டிக்காரன் உட்காரும் பக்கமாய் சந்திரசேகரும், பின்புறமாய் இரண்டு பேரும் ஆளுக்கொரு மூலையில் உட்கார, கஸ்தூரிபாய் ஆஸ்பத்திரிக்கு அவசர அவசரத்தில் குதிரை வண்டி ஓடத் தொடங்கியது.

ஊருக்குள் போய் இந்த விஷயத்தை முதலில் ராஜப்பாவின் சம்சாரத்திடமும் பிறகு ஊர்

முக்கியஸ்தர்களிடமும் சொல்லிவரும்படி ஓர் ஆளிடம் விவரமாக சந்திரசேகர் வண்டி புறப்படுவதற்கு முன் சொல்ல,

அந்த இளந்தாரியும் முழங்காலில் அடி பட்டு ரத்தம் கசிவதைக்கூடப் பொருட்படுத்தா மல் அவசர அவசரமாய் நடந்தான் ஆரம்பத் தில்,

குதிரை வண்டிக்குப் பின்புறமாய் அதன் வேகத்திற்கு ஈடுகொடுப்பது போல மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க ஓடிக் கொண்டிருந்தபடி, தொடர்ந்து ஓடமுடியாமல் போகவே, நடக்க ஆரம்பிக்க, ரயில்வே ஸ்டேஷனுக்கும் மதுரை வழி தார்ச்சாலைக்கும் நடுவே திரும்பி மறைந் தது வண்டி.

ஒரு மணிநேரத்திற்குள் ஊர் முழுவதும் ராஜப்பா அடி பட்டு ஆஸ்பத்திரியில் சேர்ந் திருக்கும் விஷயம் பரவி விட்டது. அவரைப் பார்க்க வேண்டியவர்களில் பலர் அவசர அவசரமாய்ப் போனார்கள்.

ராஜம்மா இந்தச் செய்தியைக் கேட்டவுடன் 'பாவா பாவா'... என்று அழுது கொண்டே - மயங்கி விழவும்,

சந்திரசேகரின் சம்சாரமும் இன்னமும் சில அக்கம்பக்கத்துப் பெண்களும் ராஜத்திற்குத் தண்ணீர் முகத்தில் தெளித்து சுயஉணர்வு வந்தபோது ஆறுதல் சொல்லுவதுமாக இருந் தார்கள்.

அதற்குள்,

பெரியவர் ஒருவர் குதிரைவண்டியை பஸ் நிலையத்திலிருந்து கூப்பிட்டு வந்து அதில் ராஜம், சந்திரசேகரின் சம்சாரம் இன்னும் இரண்டு பெண்களையும் உள்ளே உட்காரச் சொல்லிவிட்டு, வண்டிக்காரனை ஆஸ்பத்திரிக் குக் கொண்டுபோய் விட்டிரும்படி சொல்லி விட்டு, வீட்டிற்கு வெளியே இருந்தவர்களுடன் தானும் ஒருவராகக் கலந்து கொண்டார்.

'முதலாளிகள் பக்கமாத்தான்' யாராச்சும் இப்படி தூண்டிவிட்டுட்டு வேடிக்கை பாக்க றாங்க போல இருக்கு' என்று அவர் சொன்ன தும் அங்கிருந்தவர்களின் முகங்கள் பயத்தால் இருட்டானது போலாகிவிட்டது. ஏதோ கேட்கக் கூடாத விஷயத்தைக் கேட்டுவிட்டதுபோலச்சிலர் அப்போதே வீதியில் போகிறவர்களையும் வருப வர்களையும் 'பராக்கு' பார்க்கின்ற சாக்கில் திரும்பிக் கொண்டார்கள்.

'ஊருக்குள்ளே தனிப்பட்ட ஆளா நின்னு செஞ்சா - ரொம்பவுமே லேசா சிரிச்சி பேசிரு வாங்க. ஏதோ, ஊருக்கு நல்லது செய்யணும்னு நெனைக்கிற ஜீவனுங்க நாலஞ்சு பேரு. இவங்களோட முடிவான அபிப்பிராயத்தைத்

தெரிஞ்சிகிட்ட ஏதோ நாளைக்கு வர்ற இளந்தாரிங்க எல்லாம் நல்லா குடும்பத்தைக் கொண்டு போகமுடியும்.

இதிலே இப்போ ராஜப்பாவுக்கும் சரி சந்திர சேகரன் மாதிரி ஆளுங்களுக்கும் சரி போதாத காலம்.

இந்த அளவுக்காவது பாவிபசங்க விட்டிட்டுப் போயிட்டானுங்களே...., ஆஸ்பத்திரியிலே இருந்து என்ன சேதி வருதோன்னுதா பக்கு பக்குன்னு மனசு அடிக்குது.'

'இந்த ஊரு, இனிமே எப்படி இருந்தா நல்லா இருக்கும், ஜனங்க நல்லா இருக்க முடியும்னு ராஜப்பா தீர்மானமா இந்த விசைத்தறி விஷயத்தை நல்லாவே சொல்லிக் காட்டியிருக்காரு பல இடத்திலே, பஞ்சாயத்து மடத்திலே எல்லாமே தன்னோட இந்த ஆசைங்களை நிறைவேத்தறதுக்காக எத்தனையோ கஷ்ட நஷ்டங்களைக்கூட அனுபவிச்சிட்டாரு.

விசைத்தறியைக் கொண்டுவரக்கூடாதுங்கற முடிவுல எல்லா முதலாளிங்களும் ஒண்ணா ஒத்துமையா இருக்கிறத பார்த்தாச்சும், நமக்கு இனிமே புத்தி வரணும். நாமளும் ஒண்ணு சேர்ந்து ஏதாச்சும் செஞ்சாகணும்.

முதலாளிங்க மாதிரி இல்லேண்ணா கூட, பத்துபேரு பதினைஞ்சி பேருன்னு ஓரளவு பணம் வச்சிருக்கவங்க எல்லாம் 'கூட்டா' சேந்து மிஷின் தறிகளை இந்த ஊருக்குள்ளே கொண்டுவர முயற்சி பண்ணுங்க.

இதோட சௌகரியத்தை நீங்க தெரிஞ்சிட்டு எல்லாமே விசைத்தறிங்க பக்கம் வந்துட்டா நம்பளோட உழைப்பை ரத்தமா குடிக்கிற முதலாளிங்க பணத்தை வச்சிட்டுத் தறிக் குழிகளை வச்சிட்டு என்ன செய்ய முடியும்? கடைசியா அவுங்களும் நம்பப் பக்கம் வந்தாகணும்.

இதை ஏதோ சத்யவாக்கா நீங்க நினைக்க வேண்டாம். எதிர்காலத்தில் அரசியல் சூழ்நிலைங்க - ஜனங்களோட மனப்பக்குவம் எல்லாமே சேந்து இந்த ஊருக்குள்ளே நாம்ப இப்போ ஆரம்பமா பேசி வைக்கிற விஷயமெல்லாம் நடைமுறையிலே வரத்தான் போகுது. இந்த ஊருக்குள் மிஷின் தறிகள் மூலைக்கு மூலை ஓடக் கூடிய காலம் நிச்சயமா வரத்தான் போகுது.

ஆரம்பத்திலிருந்தே நாம ஏதோ அடிமைங்க மாதிரியே இருந்துட்டோம். இப்போ ஏதோ யோசனை வந்திருக்கு. நம்பளாலே முடிஞ்சதை ஆரம்பிச்சு வச்சிட்டுப் போவோம். வர்ற தலைமுறைங்கவாவது இந்த வசதிங்களைப் பயன்படுத்தி வாழ்க்கையிலே கல்வியிலிருந்து மத்த எல்லா விஷயங்களிலேயும் முன்னேறட்டும்".

ராஜப்பாவின் பழைய வாசகங்களைப் பெரியவர் ஒருவர் நிதானமாகப் பேசி, ராஜப்பாவையே நேரில் நிறுத்திப் பேச வைப்பது போலப் பேசினார். கும்பலாய் நின்று கேட்டுக் கொண்டிருந்தவர்கள் ஏதோ மந்திரசக்தியால் கட்டுப்பட்டவர்கள் போல நின்று கொண்டிருந்தார்கள்.

நெய்யத் தெரியாதவன் முதன்முதலாய் தறிக் குழியில் இறங்கி தறிக்குஞ்சத்தை - இழுத்து மிதிக்கட்டையை மிதித்தும், கொஞ்ச நேரத்திற்கு எது எப்படி என்று நிதானமில்லாமல் பின் யோசிக்க ஆரம்பிக்கிற மாதிரி இருந்தது. சிலர் தலையை ஆட்டினார்கள். வீதிப்பக்கம் சைக்கிளில் வந்து இறங்கி அவசர அவசரமாக ஓர் இளந்தாரி வந்து சொன்ன விஷயம் அங்கிருந்த எல்லோருக்கும் 'அதிர்ச்சி' அடைய வைத்து விட்டது. சிலருக்கு உதடுகள் பிரியவே இல்லை. சிலருக்குப் பேச முயற்சி செய்தும் பேச்சே தொண்டையிலிருந்து வரவில்லை. சிலர் அழுதார்கள்...., பெண்கள் ஒவ்வொருவர் தோளிலும் முகம் வைத்து அழுதார்கள்...

23

"என்னப்பா வெள்ளைச்சாமி, பிரயாணமெல்லாம் எப்படி இருந்தது, காரைக்குடியிலே இருந்து பஸ்ஸைப் பிடிச்சு வந்திருக்கலாமில்லே நேரா இங்கேயே, அதை விட்டுட்டு ராமேஸ்வர ரயிலிலே வர்ற. ஏதாச்சும் மதுரையிலே ஜோலியா என்ன? ஏதாச்சும் காரியம் பாத்துட்டா வர்றே, வீட்லே எல்லாம் சௌக்கியமா?"

கோயமுத்தூர் மார்க்கம் வழியாகப் போகும் ராமேஸ்வரம் ரயில் அம்பாத்துரையில் ஐந்து நிமிஷம் நின்று புறப்பட்டது.

வண்டியிலிருந்து இறங்கிய சிநேகிதனைக் கூப்பிட்டுக் கொண்டுவர நின்று கொண்டிருந்த சந்திரசேகர், பேச்சை ஆரம்பித்தார். ஆனால், குரலில் உணர்ச்சிகள் ஒய்ந்து போயிருந்து . வெறுமனே கேட்க வேண்டிய சம்பிரதாயத்திற்காகக் கேட்டது போலத்தான் இருந்தது.

'ஆமா.... ஆமா... நீ எப்படி கண்டுபிடிச்சே சரியா சொல்றே. சொல்லி வச்சமாதிரி இந்த தேதியிலே வர்றேன்னு கடுதாசி போட்டது ஞாபகத்துக்கு வருது. ஆனா, ராமேஸ்வர வண்டியிலே வர்றதா எழுதலியே... எப்போ வந்தே...., ஆச்சரியமா இருக்கு என்னையும் சரியா அடையாளம் கண்டுபிடிச்சுட்டே'.

சந்திரசேகரின் பால்ய காலத்து சிநேகிதன் வெள்ளைச்சாமிக்கு வியப்பு. விடலைப் பருவத்தில் ஊரைவிட்டு ஓடிப்போய் அங்கே இங்கே என்று கடைசியில் பொன்னமராவதியில் குடியேறிய ஆள் வெள்ளைச்சாமி கிட்டத்தட்ட இருபது வருஷங்களுக்குப்பின் பிறந்த ஊரைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்ற ஆசையில் வந்திருக்கும் வெள்ளைச்சாமிக்குச் சிறிய வயதில் சந்திரசேகர், ராஜப்பா, கேசவன் போன்றவர்களெல்லாம் உயிர்சிநேகிதர்கள். பஞ்சகாலத்துக்குப் பின்னால் சுதந்திரம் வாங்கிய பின்னாலாவது பிறந்த கிராமம் தேறி இருக்கிறதா என்று பார்த்துவிட்டுப் போகலாம் என்ற நினைப்புடன் வந்திருக்கும் வெள்ளைச்சாமிக்கு, அம்பாத்துரை ரயில்வே ஸ்டேஷனின் ஆரம்பம் முதல் கடைசிவரை நோட்டம் பார்த்து அதிசயமாய் இரண்டு வியாபார போர்டுகள் மட்டும் வித்தியாசமான வாசகங்களைப் படித்துப் பார்த்ததும் ஆச்சரியமாகி விட்டது.

'பாரதி விசைத்தறி சேலை உற்பத்தி நிலையம்
உத்திரவாத கெட்டிச் சாயத்தில் தயாரிக்கப் படுகிறது.

தேவைக்கு அணுகுங்கள்,
எண் 7, மேட்டுப்பட்டி - அம்பாத்துரை அஞ்சல்,
சின்னாளப்பட்டி, (மதுரை வழி)

சக்தி விசைத்தறி வேட்டிகள் துண்டுகள்
தரமான சரக்கு உற்பத்தியாளர்கள்

தயாரிப்பு நிலையம் :-
4, பூஞ்சோலை தெரு,
அம்பாத்துரை அஞ்சல்,
சின்னாளப்பட்டி (மதுரை வழி)

என்றிருந்தது.

'என்ன சந்திரசேகர், விசைத்தறியிலே வேட்டிங்க துண்டுங்க எல்லாம் தயாராவுதா? ஆச்சரியமாய் இருக்கே. சேலைங்களே விசைத்தறியிலே உற்பத்திப் பண்ற விஷயமாகத்தான் ராஜப்பா நீ. இன்னும் யார் யாரோ சரியா... பேர் வேறே ஞாபகத்துக்கு வர்லே, முசுவா இருக்கற மாதிரி காரைக்குடியிலே வச்சி பேசிட்டாங்க, ஜண்டி ஜரிகை மதுரையிலே கிடைக்கலேன்னு காரைக்குடியிலே வந்து வாங்க வந்தவங்க... வேஷ்டி துண்டையும் இதுலே தயாரிக்கிறதிலே லாபம் அதிகம் வருதா என்ன?

சந்திரசேகரு, நான் கடைசியா கேள்விப்பட்ட தெல்லாம் உண்மையா?.."

வெள்ளைச்சாமியின் இந்த திடீர் கேள்வியைக் கேட்டவுடன் சந்திரசேகரின் முகம் மிகவும் மாறிப் போய்விட்டது. அப்படியே நின்று விட்டார். பெருமூச்சு விட்டார். அவருடைய கண்களின் தீர்க்கமான பார்வையைத் தன் சிநேகிதனிடம் படரவிட்டார்.

காளிதாசன் பாடினான்

ஞா. மாணிக்கவாசகன்

ஈற்றடி தந்து பாடச் சொல்லும்
இலக்கிய மரபு தமிழிலும் உண்டு.
ஈற்றடி முதலடி எதுவா னாலும்
செய்யுள் எழுதச் சொற்கள் முக்கியம்!

சொற்கள் இல்லாமல் பாட முடியுமா?
அரங்கம் இல்லாமல் ஆட இயலுமா?
காளி தாசன் பாடிக் காட்டினான்
நாக்கு நடனம் நடத்திக் காட்டினான்.

காளி தாசனிடம் வந்தொரு புலவன்
'டண்டண் டண்டட டண்டண்" என்னும்
ஓசைக் குறிப்பையே ஈற்றடி யாகக்
கொண்டொரு பாடல் இயற்றுக என்றான்.

காளி தாசனும் பாடத் தொடங்கினான்
போர் முடிக்கச் சென்ற மன்னன்
வெற்றி வீரனாய் நாடு திரும்புகிறான்
வேடிக்கை பார்க்கக் கூடினர் மக்கள்.

ஊர்க் குளத்தில் தண்ணீர் மொள்ளப்
போன பெண்ணைப் பார்த்தவள் தோழி
'பாரடி பாரடி அதோஉன் கணவர்
யானை மீதிரேறி வருகிறார்' என்றாள்.

ஆசைக் கணவனைப் பார்த்த மகிழ்ச்சியில்
தோழியை இழுத்துத் தழுவினாள் தோகை
அப்போ தவள் இடுப்பில் இருந்த
குடம் நழுவிக் கீழே விழுந்தது.

விழுந்த குடம் குளக் கரைப்
படியில் உருண்ட போது எழுந்த
ஓசையே 'டண்டண் டண்டட டண்டண்"
பாடி முடித்தான் காளி தாசன்.

தொண்டையைச் செருமிவிட்டுச் சலனமற்ற குரலில் "ராஜப்பாவை இனிமே நீயும் சரி நானும் சரி. பார்க்கவே முடியாதுப்பா..." பேசிய சந்திர சேகரின் கண்களில் அதற்குள் நீர் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. வார்த்தைகளில் தன் உணர்ச்சிகளை வெளிக்காட்டக் கூடாது என்று அவருக்குள்ளே தீர்மானம் போட்டிருந் தாலும்.

அவர் சொன்னதைக் கேட்டதும் தன் கையிலிருந்த சுமையான பை நழுவியதையும் கூட உணர்ந்து கொள்ளாத நிலையில் அதிர்ச்சி அடைந்து போய் வெள்ளைச்சாமி விசனமுடன், "என்ன.. என்ன ராஜப்பாவை இனிமே பார்க்க முடியாதா... அப்படின்னா... என்ன சேகரு விபரமா சொல்லு... பாக்க முடியாதுன்னா... புரியலையே அவரு இப்போ எங்கே... எப்படி?" திக்கித் திணறிப் போனார். காரைக்குடியி லிருந்து புறப்படுவதற்குமுன் தான் சந்தித்துப் பேசிய இடமும் சூழ்நிலையும் மட்டுமில்லாது, அதற்கு முன்பும் நெசவாளிகளின் பிரச்னை களைப் பற்றிப் பேசியதற்காகவும் ஊரின் நிலையைத் தெரிந்து கொள்தவற்காகவும் அவரைச் சந்தித்துப் பேசியவைகளும் ஒன்றன் பின் ஒன்றாக நிழலாடியது. வெள்ளைச் சாமிக்குச் சந்திரசேகர் மேலோட்டமாய்ச் சொன்னாலும் வெள்ளைச்சாமி திடுக்கிட்டு திணறிப்போய்விட்டதற்கு இதுவும் காரணம்.

"நீ வர்ற ரயிலுக்கு முன்னாலே, பதினைந்து நிமிஷத்துக்கு முதல்லே பாசஞ்சர் வண்டி ஒன்னு மதுரை பக்கமா போச்சி. புத்தி சுவா தீனமில்லாத ராஜப்பா, தினந்தோறும் மேக்கே யும் தெக்கேயும் ஒடற வண்டிங்க இங்கே ஸ்டேஷன்லே நின்னா பிளாட்பாரத்துக்குப் பக் கமா அந்தக் கோடியிலிருந்து இந்தக் கோடி வரை ஓட்டோட்டமாக ஒவ்வொரு ஜன்னல் பக்கமா எட்டி எட்டிப் பார்த்துட்டுத் தன்னோட 'பையனைக் காணமேனு'கோன்னு அழுவாரு. பிதற்றுவாறு. பாக்கறதுக்கே ரொம்பவுமே கஷ்டமாயிருக்கும்ப்பா...

எப்பவும்மாதிரி ஓடி ஓடி அங்கேயும் இங்கே யும் தேடியிருக்காரு. பையனைக் காணோம்.

தேம்பித் தேம்பி அழுறதைப் பார்த்து வண்டி யிலேருந்து சில்லரைக் காசையும் சிலர் தான் திங்கறதையும் வெளியே போட்டிருக்காங்க.... அதுலே ஒரு வாழைப்பழத்தோலு வழுக்கிவிட தலைக்குப்புறமா இன்ஜின் பக்கமா விழுறதுக் கும் ரயிலு நகரதுக்கும் சரியா இருந்திருக்கு.

ஆளு விழுந்ததைப் பலபேரு பாத்து சத்தம் போட்டாலும்கூட என்னமோ ஏதோன்னு நெனச்சி வண்டியை நிப்பாட்ட.றதுக்குள்ளே, சக்கரங்க ஒடம்புலே ஏறிருச்சாம்.

நான் உன்னைக் கூப்பிட்டுப் பேசறதுக்கு வர்ற பத்து நிமிஷத்துக்கு முன்னாலேதான் இதெல்லாம் நடந்து முடிஞ்சிருக்கு.

என்னமோ ஏதோ கூட்டமா இருக் கேன்னுதான் முதல்லே சர்தாரணமா நெனைச் சேன், கொஞ்ச நேரத்துக்குப் பின்னாலே மனசு கேக்காமே பக்கத்துலே போய் என்ன விஷயம்னு கேட்டப்போகூட, ஆள்மேலே வண்டி ஏறிரிச் சுன்னு சொன்னாங்க.

அப்பகூட எனக்கு ஞாபகத்துக்கு வரலே ஒருவிஷயம். சில நிமிஷம் இருக்கும்னு நெனைக் கிறேன்.

திடீர்னு நெஞ்சு நின்னு போற மாதிரி அதிர்ச்சி. கூட்டத்தை வெலக்கிட்டு வேட்டி யாலே மூடப்பட்டிருந்த ஆளை அடையாளம் பார்த்தா..., வெள்ளைச்சாமி என்னான்னு சொல்றதுப்பா..., நம்ப ராஜப்பா.., தலை நொறுங்கி கைகாலுங்க நசுங்கி ரத்தம் ஊறிப் போய்....,

எப்பவுமே ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தா புத்தி சுவாதீனமில்லாமே தன்னோட பையனை தேடிட்டிருக்க ராஜப்பாவைப் பார்த்து, அவருக்கு என்னை அடையாளம் தெரியாமே பென்னாத்துனாலும்கூடக்கொஞ்ச நேரமிருந்துட்டு தான், போவேன்.

ஊருக்குள்ளே அவரைக் கூட்டிட்டுப்போனா லும்.., இருக்கப் புடிக்காமே ஓடிவந்தாகக் கூடிய மனுஷன்.., இன்னைக்குன்னுபாரு.., என்னத்தைச் சொல்றது, இங்கே இப்படி இருக்குதுன்னு.., என்னோட வாயாலே எப்ப டிப்பா போய் என்னோட தங்கச்சிகிட்டே சொல்றது...., வேறு ஆளுங்க யாருமில்லே ஸ்டேஷன் பக்கமா தெரிஞ்சவங்க, நீயும் சரியா வந்துட்டே... குதிரை வண்டிங்களும் இல்லே. அங்கே இருந்தவங்களே ரெண்டு போலீசுக் காரங்கதான். மத்தவங்க எல்லாம் திண்டுக் கல்லுலே 'பேகும்பூர்'லே என்னமோ சந்தையிலே கலவரம்னு போயிட்டாங்களாம், இப்போ..., நான் போய்..." வார்த்தைகளை முடிக்காமல் வழிந்த கண்ணீரைத் தோள் துண்டால் துடைத் துக் கொண்டு ராஜப்பாவின் வீட்டைப் பார்த் தார். வீட்டு வாசலுக்கு வெளியே ராஜப்பாவின் சின்னப் பொண்ணு. போட்ட கோலம் சரி யில்லை என்பதினாலோ என்னவோ; கையில் கொட்டாங்கச்சியில் கோலப் பொடி மாவை வைத்தபடி, கால் பெருவிரலால் தேய்த்துத் தேய்த்து அழித்தபடி இருந்தாள்.

இன்னும் பதினைந்து இருபது அடிகள் தான் இருக்கும் ராஜப்பாவின் வீட்டிற்கு. ஃ

முற்றும்



விநாயக விஜயம்

(ஆசிரியர் : வித்துவான் ந. சுப்ர மண்யன். வெளியீடு : தி லிட்டில் ஃப்ளவர் கம்பெனி 43, ரங்கநாதன் தெரு, தியாகராயநகர், சென்னை - 600 017. பக்கங்கள் : 319. விலை ரூ. 25.00)

விநாயகரின் திருவிளையாடல்கள் ஒவ்வொன்றும் அற்புதங்களும் அதிசயங்களும் கொண்டு அறியும் வேட்கையைத் தூண்டுவன. சொல்லும், எந்த ஒரு தொடக்கத்தின்போதும் விநாயகர் சுழியைப் பயன்படுத்துவதென்பது தொன்று தொட்டு வழக்கத்திலும் பழக்கத்திலும் இருந்து வருகின்ற ஒன்று. அத்தகைய முக்கியத்துவம் நிறைந்தவருடைய மகாத்மியம் நூலாசிரியரின் கைவண்ணத்தில், எளிய நடையில் எல்லாரையும் படிக்கத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது.

பன்னீர் மழை

(ஆசிரியர் : முனைவர் இரா. திருமுருகன். வெளியீடு : பாவலர் பண்ணை 'ஏழிசைச் சூழல்' 62, மறைமலை அடிகள் சாலை, புதுச்சேரி - 605 001. பக்கங்கள் : 119. விலை : ரூ. 17.00)

கவியரங்கக் கவிதைகளடங்கிய இத் தொகுப்பில் -

ஒட்டிக் கொண்டு வந்திடலாம்
மாட்டை - நீரை

உண்ணுமாறு செய்திடுமோ
சாட்டை? - அன்பால்

உள்ளமெனும் வெள்ளமதில்
மெல்ல மெல்ல மலர்ந்திடும்
ஒருமை - அது பெருமை...

போன்ற பெருமையாய்ப் பாராட்டத்தக்க கவிதைகள் நிறைய உள்ளன. பன்னீர் மழை கவிதை நன்னீர் மழை!

சகல செளபாக்யமளிக்கும் ஸ்ரீசிவ வழிபாடு

(ஆசிரியர் : அம்மன் சத்திய நாதன். வெளியீடு : அருள்மிகு அம்மன் பதிப்பகம். 212, இராயப் பேட்டை நெடுஞ்சாலை (அஜந்தா ஹோட்டல் எதிரில்) இராயப் பேட்டை, சென்னை - 600 014. பக்கங்கள் : 97. விலை : ரூ. 12.00)

பிரபஞ்சப் பிதாவான சிவ பெருமானை, அவரை வழிபடும் முறைகளை, ஐந்தெழுத்தின் மகிமைகளை, திருநீற்றின் பெருமைகளை, ருத்ராக்ஷத்தை, சிவலிங்க மகத்துவத்தை, பஞ்சபூத ஸ்தலங்களைத் தெய்விக மணங் கமழ பக்தி ரசம் சொட்டச் சொட்ட எடுத்துக் கூறுகிறது இந்நூல்.

புகார் முத்தம்

(ஆசிரியர் : முனைவர் இரா. திருமுருகன். வெளியீடு : பாவலர் பண்ணை, 'ஏழிசைச் சூழல்' 62, மறைமலை அடிகள் சாலை, புதுச்சேரி - 605 001. பக்கங்கள் : 162. விலை : ரூ. 22.00)

பழந்தமிழ் இலக்கியச் சுவைக்கு நிகரான சுவை வேறில்லை. பழங்கால அருமை பெருமைகள் படித்து இன்புறுவதற்கு மட்டுமல்ல இன்றைய வாழ்க்கை வெளிச்சங்களாகவும் பயன் படத்தக்கன என்பதை 'முல்லைப் பாட்டு'த் தொடங்கி 'விடுதலை வேள்வியில் இசைப் பாடல்கள்' வரை 16 கட்டுரைகளில் தன் துள்ளல் நடையில் மெய்ப்பிக்கிறார் நூலாசிரியர். புகார் முத்தம் வாழும் இலக்கியப் பேரலைகளின் சாஸ்வத சத்தம்.

அந்த ஆறு வாரங்கள்

(ஆசிரியர் : நாகர்கோவில் கிருஷ்ணன். வெளியீடு : மஹேஸ்வரி பிரசுரம், 55, சோலையப்பன் தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004. பக்கங்கள் : 176. விலை : ரூ. 20.00)

ரகுராமன் சீதாவைக் காதலித்து மணக்கிறான். எதிர்பாராத விதமாக அலுவலகத்தில் தன் கீழ் பணியாற்றும் அபிமன்யுவையும் சீதாவையும் தவறாகக் கணித்து கர்ப்பவதியான மனைவியை அவளுடைய மாமா சிதம்பரம் வீட்டிற்கு அனுப்புகிறான். பெண் குழந்தை பெற்ற சீதா கணவனின் பிரிவால் மிகவும் வருந்துகிறாள். மாமாவுடனும், குழந்தையுடனும் மாங்காடு காமாட்சி அம்மனைத் தரிசித்து கணவனோடு சேர்ந்து வாழ சென்னைக்கு வருகிறாள். இதற்கிடையில் ரகுராமனுக்கு இரண்டாவது திருமணத்திற்கு ஏற்பாடு நடக்கிறது. சந்தேகத்தால் தானும் சஞ்சலப்பட்டு சீதாவையும் சஞ்சலத்திற்குள்ளாக்கி, அபிமன்யுவையும் அதற்காட்படுத்திய ரகுராமனின் சந்தேகம் தீருவதும் அபிமன்யுவிற்கும் சீதாவிற்குமிடையே நிலவியது எத்தகைய உறவு என்று சொல்லப்படுவதும், ஏற்றுக் கொள்ளக் கூடிய முடிவு நாவலுக்கு நற்பெயரைத் தேடித் தருகின்றன.

ஸ்ரீ சூரிய புராண வைபவம்

(ஆசிரியர் : நாகர்கோவில் கிருஷ்ணன். வெளியீடு : மஹேஸ்வரி பிரசுரம், 55, சோலையப்பன் தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004. பக்கங்கள் : 176. விலை : ரூ. 20.00)

'பூமியிலுள்ள நீரைத் தம முடைய உஷ்ணமான கிரண களால் கிரஹித்து மேகமாக்கி அந்த மேகத்தால் நீரை வர்ஷிக்கச் செய்வது கதிரவனின் கடமை அல்லவா? மழை இல்லாவிடி பயிர்கள் வாடிவிடாதா? பயிர்கள் வாடினால் உயிர்களுக்கு உண ஏது? உயிர்கள் இல்லையே உலகில் யாகாதி கர்மங்க எவ்வாறு நடைபெறும்?' மாறுவே சூரிய தேவனுக்கும் ஜமதக் முனிவருக்குமிடையே நடந் தர்க்கத்தின் சிறு பகுதி சூடா சூரியக் கதைகள், சூர்ய நம

காரமும், ஆதித்ய ஹ்ருதயமும், சப்த சுலோகங்களும், ஸ்ரீ ஸூர்ய தோத்ரமும் அடங்கியுள்ள இவ்வைபவம் இறை நம்பிக்கை இல்லாதவர்களையும் ஈர்க்க வல்ல வைபவம்.

கண்கவர் கோவா

(ஆசிரியர் : சுந்தரானந்த ராஜா. வெளியீடு : உமா பதிப்பகம், 2/1, கற்பகாம்பாள் நகர், (விவேகானந்தா காலேஜ் அருகில்) மயிலாப்பூர், சென்னை – 600 004. பக்கங்கள் : 104. விலை : ரூ. 13.00)

'நாமே நேரே கோவாப் பயணத்தில் ஈடுபடுவது போன்று சொல்லும் விதம், நடைச்சிறப்பு, அடுத்து என்ன சொல்லப் போகிறார் என்ற ஆவல் ஆகியவையே முதல் பக்கத்தைப் படிக்கத் தொடங்கியதிலிருந்து முடிக்கும் வரை இடையே நிறுத்தாமல் ஒரே மூச்சில் படிக்கக் காரணங்கள்', என்று அணிந்துரையில் குறிப்பிடும் கலைமாமணி விக்கிரமனின் கூற்று அப்படியே ஏற்றுக் கொள்ளும் விதத்தில் அமைந்துள்ளது. கண்கவர் கோவா மனங்கவர் கோவாவாகவும் நூல் முழுதும் பரிணமிக்கிறது. நல்ல பயண நூல்.

தண்ணீர் இயற்கையின் அற்புதம்

(ஆசிரியர் : டாக்டர் சோ. சேசாசலம். வெளியீடு : ஜெயகுமார் பப்ளிகேஷன்ஸ் 1-97வது தெரு, பக்தவத்சலம் நகர், பழவந்தாங்கல், சென்னை – 600 114. பக்கங்கள் : 80. விலை : ரூ. 12.50)

இயற்கை இவ்வுலகிற்கு எத்தனையோ அற்புதங்களை வழங்கியிருக்கிறது. அவற்றில் ஒன்று தண்ணீர். தாயைப் பழித்தாலும் பழிக்கலாம். தண்ணீரைப் பழிக்கக் கூடாது என்பதிலிருந்து தண்ணீரின் மகத்துவத்தை அறியலாம். அத்தகைய அத்தியாவசியமான ஒன்றினால் ஏற்படும் விளைவுகளை அறிவியல் ரீதியில் எளிய நடையில் எழுதியுள்ளார் நூலாசிரியர்.

காகிதக் கணையாழி

(ஆசிரியர் : கவிஞர் பாஸ்ரீ. பதிப்பகம் : கவிஞன் பதிப்பகம், முகிலை, குமரி – 629 701. பக்கங்கள் : 70. விலை : ரூ. 10.00)

மனிதத்தைப் பாட வந்தவர் மனிதத்தின் மகத்தானவைகளில் ஒன்றான காதலையும் பாடத் தவறவில்லை. இதோ ஒன்று –

'உன்
ஒரு துளிக் கண்ணீர்
என் கல்லறையின்
ஒரு கல்!'

ஸ்டில் மேதை நாகராஜராவ்

(ஆசிரியர் : நீலம். பதிப்பகம் : சாந்தி பதிப்பகம், 44, அண்ணா சாலை, சென்னை – 600 002. பக்கங்கள் : 96. விலை : ரூ. 15.00)

பிறவிக் கலைஞரைப் பற்றிய முழுமையான சுவாரஸ்யம் நிறைந்த பல நிகழ்ச்சிகளைத் தாங்கி வந்திருக்கும் இந்நூல், பழம்பெரும் எழுத்தாளர் நீலம் அவர்களின் நடையால் மேலும் சிறப்புப் பெறுகிறது. அரிய புகைப்படங்கள் பல அடங்கியுள்ளன.

நீதிக்கதைகள்

(ஆசிரியர் : ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள். பதிப்பகம் : குமரிப் பதிப்பகம் 8, நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம் – 611 001. பக்கங்கள் : 108. விலை : ரூ. 10.00)

வேத, புராண, இதிகாசங்களிலிருந்து விசுவாசம், மெய்நட்பு, பரோபகாரம், நேர்மை, ஜீவ காருண்யம், விடாமுயற்சி, பொறாமை போன்ற தலைப்புகளில் நல்லன நல்கும் சின்னச் சின்னக் கதைகள் மற்றும் நம் கலாச்சாரம், பெண்மை ஆகியவற்றைப் போற்றும் கட்டுரைகள் அடங்கிய ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அருளிய ஒரு மாணிக்க மாலை இது!

கண்மணி மாலை

(ஆசிரியர் – சிவ செல்வராஜ். பதிப்பகம் – ஜோதி குருஞான சபை, 60, நீதிமன்ற சாலை, நாகர்கோயில் – 629 001. பக்கங்கள் – 136. விலை – ரூ. 5.00).

அனைத்து வித்தியாசங்களையும் இல்லையென்றாக்கி, ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வு அனைவருடைய மனங்களிலும் ஜனிக்க வேண்டுமென்ற அரிய சரியான நல்லெண்ண மேலீட்டைத் தெரிவிக்கிறது இந்நூல். இறைவன் ஒருவரே எனத் தொடங்கி ஒன்றே ஒன்றுதான் என்ற திட்டமான முடிவையே உறுதியாய் நமக்குத் தெளிவிக்கிறது.

அருள்வெளி நடனம்

(ஆசிரியர் – இரா. தியாகராஜன். பதிப்பகம் – நேச்சுர் சோர்ஸ் பப்ளிகேஷன்ஸ், சபாபதி நகர், மடிப்பாக்கம், சென்னை – 600 091. பக்கங்கள் – 112. விலை – ரூ. 30.00).

அணுப்பிரபஞ்சத்தின் மூலாதாரம், அணுமுதல் அண்டம் வரை, அணுவின் தோற்ற ஆட்டம், பிண்டத்தின் காமநாட்டம், அண்டத்தின் இயக்க ஓட்டம், இயற்கையின் திட்டநிலை போன்ற தெளிவான விளக்கங்கள் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன.

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் பின்னிப் பிணைந்து ஏராளமான கருத்துகளைத் தன்னுள் அடக்கியது இந்நூல்! — நீலவன்


கடிதக்கலை

(விலை ரூ. 11.00. தொகுப்பாளர் – அன்புப்பழம்நீ. வெளியீடு-பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை – 108).

இந்த நூலிலுள்ள கடிதங்கள் இலக்கியச் சுவையுடன் பல அரிய கேள்விகளுக்கு விடையளிக்கின்றன.

டாக்டர் உ.வே. சாமிநாதஐயருக்கு வந்த கடிதங்களையெல்லாம் தேடி எடுத்து வெளியிட்டிருக்கிறார்கள். திரு.வி.க., வ.உ.சிதம்பரம் பிள்ளை, பண்டிதமணி முதலிய பலருடைய கடிதங்களும் பலமுறை படிக்கத் தக்கவை.

— டாக்டர் கு. விவேகானந்தன்



வெல்வெட் ஷாம்பூவின் கங்காஸ்நான்

பிரபல வெல்வெட் ஷாம்பூ நிறுவனத்தார் புனித கங்கை நீராடலை உங்கள் இல்லத்துக்குக் கொண்டு வந்துள்ளார்கள்.

'கங்காஸ்நான்' –

இவர்களுடைய புதிய சிகக்காய்ப் பவுடர் தயாரிப்பு 'வெல்வெட் இண்டர்நேஷனல்' நிறுவனத்தின் ஷாம்பூக்கள், நிவாரண் 90 முதலிய மூலிகைச் சிறப்புள்ள பல உற்பத்திகளைத் தொடர்ந்து 'கங்கா ஸ்நான் சிகக்காய்ப் பவுடரை' இப்போது அறிமுகப்படுத்தியுள்ளனர். வரவேற்பும், விற்பனையும் அமோகமாக உள்ளன.

காரணம் --

இந்த ஸ்நானப் பவுடாில் நமது பாரதத்தின் புண்ணிய நதியான கங்கையின் புனித நீர் கலந்துள்ளது. இமய மலையில் புண்ணிய இடமான கங்கோத்ரியில் உதயமாகி, மலைப் பிரதேசத்தில் உடல் ஆரோக்கியத்துக்குத் தேவையான பல மூலிகைகளிடையே தவழ்ந்து வந்து, வங்கக் கடலில் கலக்கும் புனித கங்காநதி வடபுலத்தில் மட்டுமில்லாமல், பாரதம் முழுவதும் புண்ணிய நதியாகக் கருதப்பட்டு, கங்கைக் குளியல் என்பது வாழ்வின் முக்கியமான அம்சமாகப் பலராலும் கருதப்படுகிறது.

விரிந்து பரந்துள்ள நம் நாட்டில் எல்லோருக்கும் கங்கைக் குளியல் சாத்தியமாவதில்லை. மேலும் எல்லோருக்கும் கங்கை நீரும் கிடைக்க வேண்டும்.

இதையே நம் எல்லோருக்கும் தினசாிக் குளியலாக – நமது அன்றாட வாழ்க்கையின் நீக்கமற்ற ஓர் அம்சமாக – மாற்றிவிட்டால் எப்படியிருக்கும்?

இந்தப் புண்ணிய காாியத்தைத் தான் வெல்வெட் ஷாம்பூ நிறுவனத்தார் ஏற்றிருக்கிறார்கள்.

இவர்களின் கங்காஸ்நான் – சிகக்காய்ப் பவுடர் இப்போது மார்க்கெட்டில் ஒரு பிரபலமான தயாாிப்பு. சித்த ஆராய்ச்சி நிபுணர்களால் தயாாிக்கப்பட்டு, இந்திய சித்த வைத்திய நிபுணர்களின் ஆராய்ச்சியின் பூரண ஈடுபாட்டுடன் தயாாிக்கப்பட்டுள்ளது.

நமது குளியலில் இந்த சிகக்காய்ப்பவுடர் உபயோகிப்பதால் சருமத்தின் ஆரோக்கியம் எல்லா விதத்திலும் பாதுகாக்கப்படுகிறது. மேனி அழுக்கை அகற்றுவதுடன், சரும வியாதிகள், தோலுக்கு வரக்கூடிய தொற்று வியாதிகள் முதலிய அனைத்தும் தடுக்கப்படுகிறது. குளியலுக்குப் பிறகு தலைக் கேசம் உலர்ந்து சுத்தமாக வாசத்துடனும் மினுமினுப்புடனும் விளங்குகிறது. தலைக் கேசத்தின் நிறம் மாறுபடாமல் காக்கிறது. கேசப் பராமாிப்பும் சருமப் பராமாிப்பும் இணைந்து வழங்குவது 'கங்காஸ்நான்'.

தமது இந்த உற்பத்திக்குக் காஞ்சி பரமாச்சாாியார் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமி களின் நல்லாசியைப் பெற்றுள்ளது மிகச் சிறப்புடையதாகும்.

வெல்வெட் ஷாம்பூ நிறுவன அதிபர் திரு ஸி.கே. ராஜ்குமார் நிர்வாகிகளிடம் தயாாிப்பை வழங்கி, ஸ்ரீ ஸ்வாமிகள் தமது திருக்கரத்தால் விற்பனையைத் தொடங்கி வைத்தார்கள்.

மேலும் இந்நிறுவனத்தார் வெல்வெட் கங்கா ஊதுவத்தித் தயாாிப்பிலும் ஈடுபட்டு, இவ்வகையில் மக்களுக்குத் தொண்டாற்றுகிறார்கள்.

கங்கா வெல்வெட் ஊதுபத்தி விற்பனைத் தொடக்க விழா சமீபத்தில் நடைபெற்றது. பிரபல ஓவியர் திரு கோபுலு ஊதுவத்தியை வெளியிட, திருமதி மஞ்சுளா ரமேஷ் பெற்றுக் கொண்டார். விழாவில ஆசிாியர் கலைமாமணி விக்கிரமன், நடிகர் பாண்டியராஜன் கலந்துகொண்டு வாழ்த்தினார்கள்.



★ கந்தன் கலை அரங்கம் சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டுவிழா மண்டபத்தில் 1975ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர்., சிவாஜி அவர்கள் முன்னிலையில் திரு. எஸ்.வி. சுப்பையா நாயுடு அவர்களுக்கு ரூ. 51,000 பணமுடிப்பு வழங்கியபோது எடுத்த படம். மேடையில் பேசுபவர் : திரு. பாலசுப்பிரமணியம்.

அவர்கள்கூட நூல் வெளியீடு மற்றும் பாராட்டுரை வழங்குதல் போன்ற விழாக்களில் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார்கள்.

தொடர்ந்து பல வருடங்களாக கந்த கோட்டத்தின் முதன்மை அறங்காவலராகப் பணியாற்றி வரும் இவர், கோயிலின் பராமரிப்பிலும் வரவு செலவினங்களிலும் அதீத அக்கறை காட்டி வருகிறார். இக் கோயில் ஒரு வெறும் வழிபாட்டு ஸ்தலமாக மட்டுமில்லாமல் மக்களுக்குப் பயனுறும் வகையில் பல்வேறு சமூகப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளது. கோயிலைச் சார்ந்துள்ள நூலகம் சிறந்த பயனுடையதாயுள்ளது. பொது மக்களுக்காக அடிக்கடி மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் டாக்டர் சந்திரசேகர் ஆர்த்ரைடீஸ் மற்றும் மூட்டு தசை வகைகளுக்காகப் பிரத்யேக மருத்துவ முகாம் நடத்துகிறார். கோயில் வளாகத்திற்குள் நோயாளிகளுக்கு இலவசமாகச் சிகிச்சையும் மருந்தும் அளிக்கப்படுகின்றன. இதைத்தவிர தம்பு செட்டி தெருவில் கோயிலைச் சார்ந்த மருத்துவமனை ஒன்றும் இயங்கி வருகிறது. கோயிலில் பரத நாட்டியம் மற்றும் வீணை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. கோயிலில் உள்ள கல்யாண மண்டபம் பொது மக்கள் தங்கள் வீட்டு விசேஷங்களை நடத்த, குறைந்த வாடகைக்கு விடப்படுகிறது.

கந்தன் சீட்டு நிறுவனம் மற்றும் ஃபைனான்ஸ் குரூப் கம்பெனிகள் பார்க் டவுனில் உள்ள வியாபாரிகளுக்குப் பயன் அடைய நிறுவி அவர்களுக்குப் பலவிதமாக உதவி வருகிறார்கள்.

இந்த விவரங்களையெல்லாம் எடுத்துக் கூறிய திரு. பாலசுப்ரமணியம் "மக்கள் சேமிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அதுவே பொருளாதாரச் செழிப்பிற்கு வழி கோலும்" என்ற தம்முடைய அடிப்படைத் தத்துவத்தை ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

பேட்டி : வனிதா

மனித நேயம்?

ஆறாம் அறிவின்
அற்புதக் குழந்தையைக்
காணவில்லை –
காண்போர் தொடர்பு கொள்க

— எம்.இ. பிரபாகரபாபு

நட...

நீ எழுந்தால்
தோல்வி கிழமாகும் – உன்
அத்தனை திசையும்
கிழக்காகும்.

— து. கவிநிலவன்

கங்காபுரிக் காவலன்

28. தந்தையும் மகனும்

மாளிகை நிலா முற்றத்தில் இராசராச தேவர் சாய்ந்தவாறு அமர்ந்து இராச ராசேச்வர நாடகத்தை வசதியாகக் காண ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தஞ்சைப் பெரிய கோயில் நாடக சாலை மண்டபத்தில்தான் பொதுவாக அந்த நாடகம் நடைபெறுவது வழக்கம். மாளிகையிலுள்ள கோயில் நாடக சாலையிலும் நாடகங்கள், கூத்துகள் நடைபெறுவது வழக்கம். உடல்நிலை மிகவும் சீர்குலைந்த நிலையில், அந்த நாடகத்தைப் பார்ப்பதற்காகவே இதுநாள்வரை உயிர் அவர் உடலில் இருப்பதுபோல் தோன்றியது.

தன் வீர தீரப் பிரதாபங்களை மீண்டும் நாடகத்தின் மூலம் காண்பதற்கு அவர் ஆவல் கொண்டுள்ளார் என்று சொல்ல முடியாது. அவர் ஆவலுடன் எதிர்பார்த்த ஒரு நிகழ்ச்சிக்காகத்தான் அன்றைய நாடக ஏற்பாடு என்றும் சொல்லலாம்.

நிலவு ஒளியும், சுழுந்துகளின் வெளிச்சமும் நிறைந்த அந்த முற்றத்தில் சோழ குலத்திற்கு மிகமிக நெருக்கமானவர்கள் மட்டுமே கூடியிருந்தனர்.

அரசருக்கு எதிரே அரைவட்ட வடிவமான மேடையில் ஓர் ஓரத்தில் இசைக் கருவிகளை இயக்கும் கலைஞர்கள் அமர்ந்திருந்தனர்.

கொட்டி, மத்தளம், ஒடுக்கை, சகடை, கரடிகை உவச்சப் பறை போன்ற தோல் கருவிகளைத் தட்டுபவர்களும், வங்கியம், பாடலியம், குழல் போன்ற துளைக் கருவிகளை இசைப்பவர்களும், வீணை போன்ற நரம்புக் கருவிகளை மீட்டுபவர்களும் சுருதி சேர்த்துக் கொண்டிருந்தனர்.

பல ஆண்டுளாக இராசராசேச்வர நாடகம் நடிப்பதில் திறமை நிலைநாட்டியவரான விசயராசேந்திர ஆசாரியன் என்ற பெயருடைய கூத்தில் வல்லவன் மெல்ல நடந்து நாட்டிய அரங்கேறினார். இன்னும் இராச ராசர் வந்து அமரவில்லை என்பதை அறிந்தார். ஏறத்தாழ எழுபது அகவையை நெருங்கும் அவரால் முதுமை காரணமாக நாடகத்தை நடித்துக் காட்ட முடியுமா என்ற ஐயம் மாளிகையில் வசிப்போரிடம் எழுந்தது.

வெற்றிலையை எப்போதும் குதப்பிக் கொண்டிருக்கும் மத்தளம் கொட்டும் ஹாஸ்யன் விக்கிரமாதித்தனும் வந்து விட்டார். பட்டுப் பட்டாடை உடுத்தி சவ்வாது நறுமணத் திரவியங்கள் பூச்சுடன், பெரும் குங்குமப் பொட்டுத் துலங்க அவர் கம்பீரமாக அனைவரையும் ஒரு தடவை பார்த்தார்.

ஏறத்தாழ நான்கு நாழிகை நேரம் நடத்தப்படும் அந்த நாடகத்தை இராசராசர் அமர்ந்து முழுமையும் காண முடியுமா என்று அதிகாரிகள் கவலை கொண்டனர்.

அரண்மனைக் காரியங்களை மேற்பார்வை செய்யும் மாளிகை நாயகத்துடன் கலந்தாலோசித்து, யார் யார் அந்த நிலா முற்றத்தில் இருக்கலாம் என்ற முடிவெடுத்தனர். யாரையும் அழைக்க வேண்டாம் என்று கண்டிப்பாக இராசராசர் கூறியது இராசேந்திரனுக்கு வியப்பாக இருந்தது.

பொதுவாக, இதுபோன்ற நிகழ்ச்சிகளில் சக்கரவர்த்தி நடுநாயகமாக வீற்றிருக்க, அரசி உடனிருக்க, மற்ற உரிமை இளவரசிகள் நிகழ்ச்சியைக் காண வசதியாக மேல் மாடத்தில் வீற்றிருக்க, கட்டியங்காரர், அரசர் அவ்வப்போது மலர்ந்தருளும் ஆணைகளைக் கேட்டு வந்து திருமந்திர ஓலை நாயகத்திடம் அறிவிக்கும் அதிகாரியான திருவாய்க் கேள்வி, மிகவும் முக்கிய அதிகாரியான திருமந்திர ஓலை நாயகம், நாள்தோறும் நடக்கும் நிகழ்ச்சிகளை நிகழ்ச்சிப் புத்தகத்தில் குறித்து வைக்கும் பட்டோலைப் பெருமான், எப்

விக்கிரமன்

போதும் அரசர் அருகே இருந்து அரசியல் செய்திகளை மன்னருக்கு அறிவிக்கும் அரசாங்கச் செயலாளர், நகர மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நகர நிர்வாகத்தைக் கவனிக்கும் சபையின் தலைவர், அரசர் மெச்சி அழைக்கும் பெரும் புலவர், படைத் தலைவர் போன்றோர் அரங்கில் அவர வர்க்கு உரிய இடத்தில் அமர்ந்திருப்பது வழக்கம். மாளிகையில் நடைபெறும் பிறந்த நாள் விழா போன்ற முக்கிய நிகழ்ச்சி யின்போது மன்னர் பெரிதும் போற்றி வணங்கும் சிவாச்சார்யார்களான ஈசானிய சிவன் மன்னருக்கு அருகே வீற்றிருப்பார்.

போர்க் காலங்களில் உதவியவர், நல் லாட்சிக்கு உறுதுணையாயிருந்தவர், நிர் வாகத் திறமை பெற்ற அரசு அதிகாரிகள், நம்பிக்கையுடன் பல்லாண்டு பணிபுரிந் தவர்கள், வீரப் போர் புரிந்தவர்கள் ஆகி யோருக்குப் பட்டம் வழங்கிச் சிறப்பிப்பது சக்கரவர்த்திகளின் வழக்கம். மூவேந்த வேளான், பூவேந்த வேளான், கேரள ராசன், காலிங்கராயன், கச்சி ராயன், வாணவ கோவரயன், பல்லவராயன், சேதி ராயன், காடவ ராயன், தொண்டையன், விழுப்பரயன், ஈழங்கொண்டவர், இளங் கோவேள், களத்தில் வென்றார் போன்ற சிறப்புப் பட்டங்களைப் பெற்றவர்கள் சபையின் அரங்கில் கம்பீரமாக இருப்பது வழக்கம்.

இன்று அவர்களுள் ஒருவரும் நாட்டியங் காண அழைக்கப்படவில்லை.

இராசராசர் மெல்லிய குரலில் இராசேந் திரனிடம் சொல்வார்: "மகனே! இந்த நாடகம் என் பெருமைகளைப் பறை சாற்றுவதன்று.நான் அடைந்த வெற்றியை நானே பார்த்து, கேட்டு மகிழ்வதற்காக நடிக்கப் பெறுவதன்று. சோழ நாட்டுப் பெருமக்கள் மனத்தில் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் தம் நாட்டைப் பற்றிய பெருமையையும் வளர்ப்பதற்காகத்தான் இந்த நாடகத்தை என் பிறந்த நாளான ஐப்பசி சதய நாளன்று கோயிலில் நடக்குமாறு செய்தேன்.

"அருமை மகனே! இந்த நாடகத்தை நீ பல தடவைகள் பார்த்திருப்பாய். நான் அரியணை ஏறியவுடன் பாண்டிய மன்ன னுடன் போரபுரிந்ததும், சேர நாட்டு உதகைக் கோட்டையை வென்றதும், குடமலையைக் கொண்டதும், சாளுக்கிய சத்யாச்ரயனுடைய நாட்டில் புலிக் கொடியை ஏற்றியதும் நாட்டிய நாடகமாக நடிக்கப் பட்டதைக் கண்டு மகிழ்ந்திருப் பாய். நாட்டியப் புலமை பெற்ற விஜய ராசேந்திர ஆசாரியன் என்னைப் போன்று நடித்து மக்களிடம் பாராட்டுதல் பெற்ற தையும் நீ அறிவாய்.

"நான் அரியணை ஏறுவதற்கு முன்பு கடல் கடந்த நாடுகளுக்குச் சென்ற செய்தி உனக்குத் தெரிந்திருக்கலாம். அந்த நிகழ்ச்சியை விசய ராசேந்திரன் இந்த நாடகத்தில் நடிப்பதில்லை".

இராசராச சோழர் மெல்லப் பேசி னாலும் அவருக்கு மூச்சு வாங்கியது.

இளம் பருவத்திலே கடல் கொள்ளை யர்களை எதிர்த்துத் தன் தந்தை போரிட் டதை இராசேந்திரன் அறிவார். அவர் சென்ற கலம் பழுதடைந்ததும், முல்லைத் தீவில் கலத்தைப் பழுதுபார்க்க நங்கூரம் பாய்ச்சி கலம் நின்றபோது தன் தந்தை, தீவிற்குள் சென்று அந்தத் தீவின் தலைவரைச் சந்தித்ததும், அவரது மகள் இன்பவல்லி அறிமுகமானதும், அவளுடன் முதல் கை கொடுத்து ஆடிய நிகழ்ச்சியும் அவருக்குத் தெரியும்.

இராசராசனே இப்போது சொல்ல ஆரம்பித்தார். "இராசேந்திரா, தமிழ்நாட்டி லிருந்து வெகு தொலைவில் முல்லைத் தீவிலிருக்கும் இன்பவல்லி நாட்டியக் கலையில் சிறந்திருந்தாள். கூத்தன் விசய ராசேந்திரன் அந்தச் சம்பவத்தை ஆடுவ தில்லை. அந்தச் சம்பவத்தை நேரே கண்டதுபோல் ஆட ஒருவருக்குத்தான் தெரியும். நடனப்புலமை பெற்றவர் ஆணா, பெண்ணா என்பது உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

நடந்த கதை ஓரளவுக்கு இராசேந்திர னுக்குத் தெரியும். "அத்தை குந்தவ்வை பிராட்டி எனக்குச் சொல்லியிருக்கிறார்" என்றார் இராசேந்திரன்.

சிறிது நேரம் மௌனமாயிருந்த இராச ராசர், "இளைய பிராட்டிக்குத் தெரி யாததா? அவர்கள் உனக்குக் கதைபோல்

எல்லாவற்றையும் சொல்லியிருப்பார்கள் அப்படித்தானே?" என்று கேட்டார்.

"ஆமாம், ஆமாம். இளைய பிராட்டியார் எனக்கு எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறார். எனக்குத் தாயாயும், தந்தையாயும், ஆசானாயும் விளங்கியவர் அவர். தக்க சமயத்தில் அவர் எச்சரித்திராவிடில் மாபெரும் பிழையை நான் செய்திருப்பேன்" என்று இராசேந்திரன் மெல்லிய குரலில் பேசினார்.

இராசராசன் தன் மகனைப் பார்த்து மெல்லப் புன்னகை புரிவது தெரிந்தது. ஆனாலும் அவர் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருப்பது மற்றவருக்குத் தெரிய வாய்ப்பில்லை. அவர் உதடுகள் 'சிவசிவ' என்று உச்சரித்தவண்ணம் இருந்தன. சில நாள்களுக்கு முன் அவர் உடல்நலம் விசாரிக்க வந்த இளையபிராட்டியின் கரத்தைப் பற்றியபோது இளையபிராட்டி சொன்னாள்.

"தம்பி, தேக்கு போன்ற உன் கரங்கள் எலும்புகள் மட்டும் நிறைந்த கூடாகி விட்டனவே. உனக்குப் பிறகும் நான் இந்த உலகில் வாழ வேண்டும் என்பது இறைவன் சித்தம் போலும்" என்றாள். அவள் கூறும்போது குரல் தழுதழுத்தது.

ஏன் அவ்வாறு சொன்னோம் என்று அவளுக்குத் தோன்றிவிட்டது. இராசராசன் இந்த உலகில் இனி அதிக நாள்கள் வாழமாட்டார் என்பதும், அவருக்குப் பிறகும் தான் வாழப் போவதாகவும் அவள் எண்ணியிருக்கலாம்.

இராசராசர் மெல்லப் பேசினார். ஆனால் அதில் தெளிவு இருந்தது. "என் அருமைச் சகோதரியே! என்னை உருவாக்கினீர்கள். என் மகனை வீர தீரனாக, அறிவாளியாக வளர்த்துச் சோழ நாட்டின் சக்கரவர்த்தி ஆக்கினீர்கள். நீங்கள் இன்னும் பல ஆண்டு வாழ்ந்து என் மகனுக்கு வழி காட்டியாகவும் சோழர் குலத்திற்கு உறுதுணையாகவும் இருக்க வேண்டும்".

இளைய பிராட்டியின் முகத்தில் பூத்த புன்னகையில் விரக்தி தெரிந்தது.

"தம்பி, இப்பொழுது எனக்கு என்ன வயது என்று நினைக்கிறாய்? உன்னைவிட ஆறே ஆண்டுகள் மூத்தவள். சோழ நாட்டின் பெருமை, புகழ்தான் எனக்கு மன வலிமையை அளித்து வருகிறது. இப்போதெல்லாம் பழையாறைக்கும், தஞ்சைக்கும் வந்துசெல்வதால் உடல் களைப்பு ஏற்படுகிறது. நான் பழையாறையிலிருந்து புறப்பட்டுப் பிரம்மதேயம் செல்லப் போகிறேன். உனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் உன் உடல் அடக்கம் செய்வதற்கு முன்பு வருவேனா என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. சோழர் குலத்துக்குத் தோன்றாத் துணையாக உள்ள கருவூர்த்தேவரிடம், தஞ்சையில் உன் அருகேயே இருக்குமாறு வேண்டிக் கொண்டிருக்கிறேன். எப்போதும் சிவபெருமான் நாமத்தை உச்சரித்துக் கொண்டு, ஆடவல்லான் நினைவாக எஞ்சிய பொழுதைக் கழிக்குமாறு சொல்லியிருக்கிறார். உன்னைப் பார்க்க வருவது இதுவே கடைசி முறையாக இருக்கும்"-இளைய பிராட்டியின் விழிகள் கலங்கின.

இராசராசன் விழிக் கோடியிலிருந்து நீர்த்துளிகள் உருண்டன. குரல் தழுதழுக்கக் கூறினார்! "என்னை விட்டு ஒரு கணமும் பிரியக்கூடாது. என் கட்டளை. நீங்கள் அருகிலிருந்தால் நான் இன்னும் பல ஆண்டுகள் வாழ்வேன். என்னை இந்த உலகை விட்டு, உங்களை விட்டு விரைவில் பிரிந்து செல்ல விரும்புகிறீர்களா?".

அவர் விழியிலிருந்து வடியும் கண்ணீரைத் தன் நடுங்கும் கரத்தால் மெல்லத் துடைத்த இளையபிராட்டி, "தம்பி, அதெப்படி முடியும்? வல்லவரையரை நான் உடனே சந்திக்க வேண்டும். அவர் உடல் நலமில்லாமல் இருப்பதாகத் தகவல் கிடைத்தது. எனக்கும் அவருக்கும் நூறு கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். என்றாலும் அவர் அருகே இறுதிவரை இருக்க வேண்டும் என்ற எண்ணம் அழுத்தமாக என் மனத்தில் பதிந்துவிட்டது. அவருக்குப் பணிவிடைகள் செய்ய வேண்டும் என்ற ஆவல் என்னை ஒரு கணம்கூட இங்கே நிற்கவிடவில்லை. இராசராசா! எதற்கும் அஞ்சாதே. 'சிவசிவ' என்று எப்போதும் சிவபெருமான் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டே இரு. நமச்சிவாய என்ற நாதன்

திருநாமம்தான் உறுதுணை" என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள்.

தன் சகோதரி இளையபிராட்டி கூறிய படி அந்தக் கணம் முதல் சிவசிவ என்று மனத்திற்குள்ளேயே சொல்லலானார். பிறகு மெல்ல உச்சரிக்கலானார்; மெல்லக் கூறலானார். அதனால் அவருக்கு மன அமைதி ஏற்பட்டது. காலை வேளையில் திருநாவுக்கரசர் தேவாரப் பதிகங்களை மட்டும் தன்னருகே இருந்து பாடுமாறு செய்தார்.

இராசேந்திரனிடம் இராசராசர் சொன்னார்: "மகனே, இளைய பிராட்டியாரையும் வல்லவரையர் வந்தியத் தேவனையும் இனி கண்ணெனக் காப்பது உன் கடமை. ஒரு பெரிய இரகசியம் - தன் பெயரைக் காலகாலத்திற்குச் சொல்ல உன் அத்தை வாரிசை உருவாக்கிக் கொள்ளவில்லை. வல்லவரையர் இளைய பிராட்டியின் பாசப் பிணைப்பு மகத்தானது என்பது உனக்குத் தெரிந்திருக்கும். அமர காதலர்கள் வரிசையில் சேர்க்கப்படவேண்டிய அவர்கள் சோழ நாட்டிற்குச் செய்திருக்கும் தொண்டும், பணியும் ஆயிரம் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட வேண்டியவை. உண்மையைச் சொல்லப் போனால் உன்னைத் தன் மகனைப்போல் கருதி அன்பைப் பொழிந்தாள், வல்லவரையருடன் சேர்ந்து வாழ்ந்த நாட்கள் மிகக்குறைவு. அவர்களுக்கு எந்த வித இடர்ப்பாடும் நேராமல் நீ பார்த்துக் கொள்ள வேண்டும். வல்லவரையருக்கு நாம் உரிமை செய்து கொடுத்துள்ள மகத நாட்டில் வாரிசுரிமைக்காக எந்தப் போட்டியும் போரும் பிற்காலத்தில் நேர்ந்துவிடக் கூடாது. உன் அத்தை தனக்கு வாரிசை உருவாக்கிக் கொள்ளவில்லை. 'மதுராந்தகன்தான் என் வாரிசு' என்று அடிக்கடி உன்னைக் குறிப்பிட்டுச் சொல்வார்கள். அது எப்படி இயலும்? வல்லவரையர் பல ஆண்டுகளுக்குப் பிறகு குந்தள நாட்டு இளவரசியைத் திருமணம் செய்து கொண்டதையும் நீ அறிந்திருக்கலாம். அவர்களுக்கு ஒரு மகள். திருமண வயதுடைய அவளை நீ மணந்திருந்தால் பிறகு ஒரு காலத்தில் வந்தியத் தேவனுக்குப் பிறகு ஏற்படப் போகும் வாரிசுரிமைப் பிரச்னையைத்







தீர்த்திருக்கலாம். உம்..." என்று கூறிப் பேச்சை நிறுத்தினார்.

இராசேந்திரனுக்கு இந்தச் செய்தி புதிதாக இருந்தது. வல்லவரையருக்கு ஒரு மகளா? இதுவரையில் அவருக்குத் தெரியாது. தன் தந்தை கூறுவதில் தீர்க்க தரிசனம் இருக்கிறது. சோழ நாட்டின் மிக முக்கியமான பகுதிகள் அடங்கிய மகத நாட்டு வாரிசுரிமை குறித்துப் பிணக்குகள் ஏற்பட்டால் சோழ நாட்டின் ஒற்றுமை குலையக் கூடுமல்லவா? கடுமையாக நோய் வாய்ப்பட்டிருக்கும் இந்த நிலையில் தன் தந்தை, இவ்வளவு முக்கியச் செய்தியைத் தனக்குச் சொல்கிறார். அதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். இதுபோன்ற முக்கியமான செய்தியைச் சொல்லத்தானோ என்னவோ, இராசராச விஜய நாட்டிய நிகழ்ச்சியைக் காணும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறாரோ? நிகழ்ச்சியைக் காண முக்கியமான அதிகாரிகள் ஒருவரும் அழைக்கப்படாததற்கு இதுவும் ஒரு காரணமோ? என்று இராசேந்திரன் எண்ணினார்.

"வலலவரையர் பிரச்னையைத் தீர்க்க நான் என்ன செய்ய வேண்டும்?" என்று அவர் அருகே சென்று கேட்டார் இராசேந்திரன்.

மீண்டும் ஒரு முறுவல், இராசராசன் வதனத்தில். "மிகவும் தாமதமாக நான் சிந்திக்கிறேன்; வல்லவரையர் மகளை நீ மணந்து கொண்டிருக்கலாம். மணஉறவில் வயது இடைவெளி அதிகம் என்று நீ சொல்லக் கூடும்" என்று கூறி இராசேந்திரனை நோக்கினார்.

'ஆம் ஆம்' என்பது போல் இராசேந்திரன் தலையசைத்தவுடன், மீண்டும் ஓர் குறும்புச் சிரிப்பு முகிழ, "வீரம்மாளுக்கு என்ன வயது?" என்று கேட்டார்.

இராசேந்திரனுக்குப் புரிந்துவிட்டது. காதலுக்கும், காமத்துக்கும் கண், வயது ஏதுமில்லை என்பதை அவர் அறிய மாட்டாரா!

வயதையும் மீறிய வீரம்மாளுக்கும் தனக்கும் உள்ள உறவைத் தந்தையிடம் எப்படி விவரிப்பது? இராசேந்திரன் பரபரப்படைந்தார்.

"இராசேந்திரா, ஒரு முக்கியமான செய்தியைத் தெரிவிக்கவே இன்று இராசராச விஜய நாடகம் காண விரும்பினேன். நாடகம் தொடங்கும் நேரம் வந்துவிட்டது. அதற்காகத்தான் நான் வீரமாதேவியையும், அவளுடன் சேர்ந்து கலைப்பணி செய்யும் கலைத்தேவியையும் இங்கே அழைக்குமாறு சொன்னேன். அந்தக் கானகத்தின் நடுவே நாட்டிய சாலை ஏற்படுத்தித் தொண்டாற்றி வரும் கலைத் தலைவியைப் பற்றி உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

இராசேந்திரனுக்குத் தெரியும். தன் தந்தையின் இளமைக் காதல் கதை தெரியும். தன் தந்தை முல்லைத் தீவில் தங்கியபோது இன்பவல்லி என்ற மங்கையிடம் மனத்தைப் பறி கொடுத்ததும் தெரியும்.

இராசேந்திரன் தலையசைத்தார். அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு தன் வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் அவர் மனக் கண்

முன்னால் தோன்றின. அவருக்கு நாண மாகக்கூட இருந்தது. இளமையில் தான் நடந்து கொண்ட விதம்.

இராசராசர் புரிந்து கொண்டார். இன்னும் சற்று நேரத்தில் நாட்டிய நாடகம் தொடங்கப் போகிறது.

உடனிருந்து இசைக்கும் வாத்யக் காரர்கள் ஆயத்தமாக இருந்தனர். இராச ராச விஜயம் நாடகத்தில் முக்கியப் பொறுப் பேற்றிருக்கும் விஜய ராசேந்திர ஆசாரியர் வேடமணியாமல் மேடையின் ஒருபுறம் அமர்ந்திருந்தார். யார் ஆடப் போகிறார்கள்? இராசேந்திரனுக்குப் புரிந்துவிட்டது. ஆடப்போகிறவர் யார் என்று.

கானகத்தில் உள்ள கலைக்கூடத் தலைவியும் வீரமாதேவியும் ஆடப் போகி றார்கள். சோழ சக்கரவர்த்தி இராசராசன் சரித்திரத்தை ஆடிக் காட்டப் போகி றார்கள்.

மேடையின் ஓர் ஓரத்தே அமர்ந்து ஒருவர் பாடுவார். அதற்கேற்ப ஆசாரியன் ஆடு வான். மத்தளமும், குழலும், யாழும், வீணையும் பின்னணியில் ஒலிக்கும்.

இராசராச சோழர் மெல்லச் சாய்ந்து படுத்தவாறு நாடகத்தைக் காண ஆயத்த மானார். இராசேந்திரன் அவர் அருகே அமர்ந்திருந்தார்.

கட்டியக்காரன் நாடகம் தொடங்கும் முன்பு இராசகேசரி இராசராசர் பெருமை பேசினான்.

"திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளல்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி--"

என்று அவன் விரிவாகத் தனக்கே உரிய குரலில் பேசிச் சென்றான். அமைதியாக இருந்த வாத்யங்கள் முழங்கின.

பிறகு வாத்ய ஓசை நின்றது. எங்கும் அமைதி. நிலாமுற்றத்தருகே உள்ள நந்த வனத்திலிருந்து பூத்துக் கொண்டிருக்கும் மலர்களின் நறுமணம் தென்றல் காற்றோடு கலந்து வந்தது. ஓர்புறத்திலிருந்து அகிலின் புகை மெல்லப் பரவியது. நீல வானத்தைக் கூரையாகக் கொண்ட அந்த முற்றம் கந்தர்வலோகம்போல் காட்சி யளித்தது.

திடீரெனப் பாதச் சலங்கை ஒலி கேட்டது. தொடர்ந்து இனிய பாடல் எழு கிறது.

'குன்றெறிந்து குலம்காத்த குமரன் வந்து
காவானோ தோழி? காவானோ தோழி?
மன்றமும் பொதியிலும் மகிழ்ந்தே விளங்குவான்
மலையிடைப் பொழிலிடை மலர்ந்தே வாழ்வான்
இன்றிங்கு வந்தெனக் காறுதல் கூறியே
இடரொழித் தினிமை கூட்டுவனோ தோழி...'

வீரமாதேவி பாடிக் கொண்டே ஆடு கிறாள். இது என்ன? இராசராச விஜயம் நாடகத்தில் வரும் காட்சியா?

இராசராசனும், இராசேந்திரனும் நிமிர்ந்து பார்க்கின்றனர்.

பல ஆண்டுகளுக்கு முன்பு இராசராச சோழருக்கு அருண்மொழித் தேவர் என்ற பெயர்.

யாரும் எதிர்பாராத வகையில் சோழ நாட்டு மணிமுடியை உத்தம சோழருக்குக் கோலாகலமாக அணிவித்து விழா நடத்தி விட்டு, தன் சகோதரி இளைய பிராட்டி யாரின் யோசனைப்படி கடல் கடந்த நாடுகளுக்கு நாகைப்பட்டினத்திலிருந்து கிளம்பிய கலிங்கத்துக் கலம் ஏறிப் புறப் பட்டார். கலிங்கத்துக் கலம் மிகப் பெரியது. அதில் மூன்று அடுக்குகள் இருந்தன. மேல்தளம், இடைத்தளம், அடித்தளம். அடித்தளத்தில் வணிகர்களின் பண்டங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. இடைத் தளத்தில் கலத்தில் பயணம் செய்வோர் தங்கியிருந் தனர். பல நாள்கள் பயணத்திற்குப் பிறகு கலிங்கத்துக் கலம் முல்லைத் தீவை அடைந்தது. கலத்திற்குத் தேவையான பொருள்களை முல்லைத் தீவில்தான் சேகரிப்பது வழக்கம். தவிர மரக்கலத்தின் இருபுறமும் படிந்திருக்கும் கனமான பாசிகளை அகற்றிப் பழுதுபார்க்கவும் அத்தீவில் சில நாள்கள் தங்க விரும்பி னார் கலபதி.

முல்லைத் தீவில் உட்புறத்தே வளைந்து செல்லும் ஆழமான கழிக்குள் கலிங்கத்துக் கலம் நங்கூரம் பாய்ச்சி நின்றது. மூன்று நாள்கள் கலம் அங்கே தங்குமென்றும், மூன்றாவது நாள் பொழுது சாயுமுன்னர் கலம் புறப்படுமென்றும் கலபதி அறிவித்

திருந்தார். கலத்தில் வந்த வணிகர்கள் கடற்கரையின் வெண்மணல் பரப்பில் கூடாரமடித்துக் கொண்டு தங்கினர். மாறு வேடத்திலிருந்த அருண்மொழி தீவிற்குள் சென்றார்.

வணிகர்கள் தங்கியிருந்த கூடாரத்தை நோக்கி அருண்மொழி மெல்ல நடந்தார். மற்றவர்கள் முன்னதாகவே உறங்கச் சென்றுவிட்டனர். அவரைத் தொடர்ந்து யாரோ வரும் காலடி ஓசை... அருண்மொழி திரும்பினார். அவ்வுருவம் மர நிழலோடு நிழலாக மறைந்தது. வேறு எவராக இருக்க முடியும்? ரவிதாசன்தான்! அவன் ஏன் தன்னைச் தொடர்கிறான்? தன் உண்மைத் தோற்றத்தைக் கண்டு கொண்டானா? ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டார் அருண்மொழி. தலை முண்டாசை ஒழுங்குபடுத்திக் கொண்டார்.

கூடாரத்தில் அவர் படுத்து உறங்குவதற்குக் கண்களை மூடிக் கொண்டார். துயில் அவரை வந்து அடையவில்லை. பல நினைவுகள். அலை கடலின் ஒலி, காற்றின் ஓசை, கலத்தின் காவலர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து அவர்கள் மொழியில் பாடும் ஓசை, சில வணிகர்கள் வாய்ப்பிதற்றலால் ஏற்படும் புரிய முடியாத சப்தம் எல்லாமாக வந்து அவரைச் சூழ்ந்தன. 'யார் அது'... அருண்மொழி துள்ளி எழுந்தார். கூடா ரத்து வாயிலில் யாரோ வந்து சென்றது போன்ற ஓசை. மெல்ல எழுந்த அருண் மொழி வெளியே வந்தார்.

எங்கிருந்தோ மெல்லிய இசை காற்றில் மிதந்து வந்தது.

'குன்றெறிந்து குலம்காத்த குமரன் வந்து
காவானோ தோழி? காவானா தோழி?
மன்றமும் பொதியிலும் மகிழ்ந்தே விளங்குவான்
மலையிடைப் பொழிலிடை மலர்ந்தே வாழ்வான்
இன்றிங்கு வந்தெனக் காறுதல் கூறியே
இடரொழித் தினிமை கூட்டுவனோ தோழி'.

ஆகா; நம் கையில் சுருதியெழுப்ப இசைக் கருவி இல்லையே; உடன்பாட இசை கற்றோமா? அதுவும் இல்லையே. இதுவரை நாம் கண்டதென்ன? அரண்மனை வாழ்வு... போர்க்களத்துச் சூழ்நிலை. இதுதான் வாழ்க்கையா? இசையில் உயிரைப் பறி கொடுக்க மாட்டோமா? இனிய நடனத்தில் சிந்தையைச் செலுத்த மாட்டோமா? இவற்றை இப்படியே இதயச் சுவரில் ஓவியமாகத் தீட்டி வைத்துக்கொள்ள மாட்டோமா!


'இளைய பிராட்டியாரே! நீங்கள் நீடுழி வாழ வேண்டும். நீங்கள் என்னை வெளி நாட்டிற்கு அனுப்பாவிடில் இந்த மரகத பூமியின் சௌந்தர்யம் காண்பேனா? நீல வானத் தடாகத்தில் பூத்த வெண்தாமரை மதியின் குளிர்க் கிரணச் சூழலில் தேவ மாதரைப் போல இசை பாடும் மகளிரைக் காண்பேனா...?

மறுநாள் இப்படிச் சிந்தித்தபடியே அருண்மொழி காற்றிலே இசை வந்த திக்கு நோக்கி இரண்டடி எடுத்து வைத்தார்.

அருண்மொழி வெண்மணற் பரப்பில் நடந்து கடற்கரையை அடைந்தார். தாழை சூழ்ந்த தடாகத்துக் கரையில் நீண்டு நிமிர்ந்த பாறையின் மேல் இன்பவல்லி அமர்ந்து வானத்தைப் பார்த்துப் பாடிக் கொண்டிருந்தாள். அவள் பாடலுக்கு மினு மினுக்கும் தாரகைகள் தாளம் போட்டன. காற்றில் அசைந்தாடும் தென்னைக் கீற்றுகள் சுருதி மீட்டின. உதிரும் புன்னை மலர்கள் கைகொட்டி ஆரவாரித்தன. வெண்நுரை கக்கி விரைந்து வந்து கரையைத் தழுவும் வெண்திரைகள் ஆடிப் பாடின.

தொடரும்...

ஒற்றை மரக்குயில்



கவியரசு. நா. காமராசன்

ஒற்றை மரக்குயில் கூவியது - அந்த
ஓசையில் ஊமைகள் பேசுகிறார்.
வெட்ட வெளியினில் காட்டருவி - ஒரு
வேங்கையின் பாய்ச்சலாய் ஓடிவரும்.

கூப்பிடு தூரத்துத் தோப்புகளைக்
குலுக்கி எடுத்து உலுக்கியது
கோடையில் வந்த காலப்புயல்...
புயலின் அசைவுகள் மௌனமுற - அந்தக்
குயிலின் குரல்கள் வானம் தொடும்.

சூரியச் சக்கரம் சுழன்று மறைந்தது
காரிருள் வானத்தின் மன்றத்திலே!
பறவைகள் கூடு தொடும் பாட்டுச் சத்தம்
இரவின் சபையில் கேட்கிறது.

அதோ.... அந்த
மழைக் காலத்துப் பௌர்ணமி நிலவெளிச்சம்
மங்கி நிறம் மயங்கிப் புகைபடிந்து வருகிறது...

வாழ வழியில்லாத
ஏழைத் தொண்டனின் கண்களைப் போல்.

உதயம் எழுதிய காலையிலே
கண்கள் மலர்ந்தன பூமியிலே - எங்கள்
ஒர விழிகளின் பார்வையிலே
ஓராயிரம் பௌர்ணமி ஊர் வலமாம்...

சூரியன் சந்தனம் பூசுகிறான் - இனி
ஏழைகளே இல்லை என்று பேசுகிறான்!

ஆரோவில் நகரம்

வாழ்வின் தேவைகளுக்காக மனிதன் நாள் முழுவதும் உழைக்காமல், அத்தேவைகள் அவனுக்கு வழங்கப்படுமானால், மனிதனால் இறைவனை முழுமையாக நாடமுடியும். அதுபோன்ற இடம் ஒன்றை உலகில் நிறுவவேண்டும் என்ற கனவு அன்னைக்கு இளம் வயதிலிருந்தே உண்டு. ஆரோவில் நகரம் அக்கனவைப் பூர்த்தி செய்தது. உலகப் போர் முடிந்தபின், அடுத்த போர் எப்பொழுது கிளம்பும் என்ற கேள்வி சுமார் 25 வருஷங்களாக உலகில் வலுவாக உலவியபொழுது, ஆன்மீக முறையில் அப்போர் மூளாது தடுக்க வேண்டும் என்ற எண்ணம் அன்னைக்கு இருந்தது.

இறைவனை நாடும் நகரம் ஒன்று அமைக்கப்பட்டால், அந்நகரில் உள்ள மக்கள் இறை ஆர்வத்தின் சின்னமானால், அந்தச் சின்னத்தால் உலகப் போரைத் தடுக்க முடியும் என்பது ஆன்மிக தத்துவம். மனித மனத்தின் பிணக்குகளின் மோதல் உலகப் போரின் அடிப்படை என்பதால், அப்பிணக்கொழிந்த மனிதர் குழாம் அமைதியின் சோலையாக ஆன்மீக ரீதியில் அமைவதால், சூட்சும உலகில் அமைதி நிலைத்துவிடும். நிலைபெற்ற அமைதி ஸ்தூல உலகில் போர் மூண்டுவருவதை தடுக்க வல்லது.

எல்லா நாட்டு மண்ணையும் கொணர்ந்து நகரத்திற்கு அஸ்திவாரமாக இட்டனர். நகரத்தின் ஜீவனாக மாத்ருமந்திர் - அன்னையின் கோயில் எழுப்பப்பட்டது. கோளவடிவில் தன்னுள்ளே ஒரு தியானக் கூடத்தைப் பெற்றது மாத்ருமந்திர். ஒரு பளிங்குக் கோளத்தின் மூலம் பகல் முழுவதும் சூரிய ஒளி தானே தியானக் கூடத்தில் நுழையும் ஏற்பாடு அதில் முக்கிய இடம் பெறும்.

50,000 பேர் வாழத் திட்டமிட்ட இந்நகரில் 1968இல் அது நிர்மாணிக்கப்பட்டதிலிருந்து இன்று வரை சுமார் 500 பேர் வந்து தங்கியுள்ளார்கள். அன்னை அந்நகரத்தைப் பற்றிச் சொல்லிய பல விஷயங்களைச் சேகரம் செய்து கொடுக்கின்றேன்.

ஆரோ+வில் என்ற சொல்லில் வில் என்பது பிரெஞ்சுச் சொல், ஊர் என்ற பொருள் பெறும். ஸ்ரீ அரவிந்தர் (Sri Aurobindo) என்றதிலிருந்து Auro என்பது எடுக்கப்பட்டது. ஆரோவில் என்றால் ஸ்ரீ அரவிந்த நகரம் என்றாகும்.

"ஆரோவில்லின் பக்திக்குச் சின்னமாக மாத்ருமந்திர் அமையும்" என்றார் அன்னை.

ஆரோவில் சாசனம்

1. ஆரோவில் மனித குலத்தினுடையது. எவருக்கும் சொந்தமானதல்ல.

2. அழியா இளமையும், தணியாத ஞான ஆர்வமும், இடையறாத முன்னேற்றமும் ஆரோவில்லுக்குண்டு.

3. ஆன்மீக ஆராய்ச்சியும், விஞ்ஞான வளர்ச்சியும் மனித குலத்தை இணைக்கும் வகையில் ஆரோவில் செயல்படும்.

தன்னை வென்று, ஆன்மீக முன்னேற்றத்தை மட்டும் நாட ஓர் இடம் இவ்வளவு நாள் கழித்து ஏற்பட்டது.

போட்டியின்றி வாழ ஒரு இடம் கிடைத்தது.



எந்த ஒரு கருத்தையும் மற்றவர்மீது திணிக்க முடியாத ஓர் இடம் முடிவாக நிறுவப்பட்டது.

முன்னோடியாக ஆசிரமம் என்றும்போல் திகழும்.ஆரோவில் நகரத்தில் அனைவரும் கூடி சாதிக்க முயல்வார்கள்.

ஆசைகளைப் பூர்த்தி செய்யும் இடம் ஆரோவில் இல்லை. ஆன்மீகம் முன்னேறும் கோயில் ஆரோவில்.

மனித குலத்தை ஒன்றுபடுத்தும் எந்த முயற்சியையும் ஆரோவில் ஏற்கும்.

கட்டுப்பாடின்றி எதையும் சாதிக்க முடியாது.

தனி மனிதனுக்குக் கட்டுப்பாடு தேவை.

ஸ்தாபனத்திற்குக் கட்டுப்பாடு தேவை.

இறைவனை நோக்கிச் செல்லும் தவமுயற்சி கட்டுப்பாடாகும்.

பூமாதேவிக்கு இன்றியமையாத நகரம் ஆரோவில்.

உண்மையான ஆரோவில்லியனாக இருப்பதெப்படி?

1. முதற்காரியமாக உள்ளுறை இறைவனைக் காண வேண்டும்.

2. சமூகத்திலிருந்து, மற்ற கட்டுப்பாடுகளின்றும் விலகி சுதந்திரம் பெற ஒருவர் ஆரோவில்லுக்கு வருகிறார். புதிய ஆசைகளுக்கு அதனால் அடிமைப்படுவது சரியாகாது.

3. சொந்த சொத்து என்ற உணர்வை ஆரோவில்லியன் இழத்தல் அவசியம்.

4. உடலுழைப்பு உள்ளுறை இறைவனைக் காண அவசியம்.

5. புதிய மனிதன் பிறக்க வேண்டி பூமி தன்னைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

6. புதிய மனிதனைக் கொஞ்சம் கொஞ்சமாக அறிய வேண்டும்: அதுவரை ஆத்ம சமர்ப்பணத்தை மேற்கொள்ள வேண்டும்.

ஆரோவில் நிர்மாணிக்கப்பட்ட பொழுது அங்கு இதுவரை குடியிருந்தவர்களைப் பற்றி அன்னையைக் கேட்டபொழுது அவர்களே ஆரோவில்லின் முதற் பிரஜைகள் என்றார்.

ஆரோவில் நிர்மாணத்தைப் பரம்பொருள் துவக்கினார். அதற்குரிய பணத்தைப் பரம்பொருள் தருவார். பரம்பொருளின் சிறப்பைப் பெற முயல்வதே அங்கு வாழும் நோக்கம். இங்கு வாழ்வே யோகமாக அமையும். ஆரோவில்லுக்கும் ஆசிரமத்திற்கும் உள்ள சம்பந்தத்தைப் பரம்பொருள் நிர்ணயிப்பார். இனியும் குடும்பம் தேவைப்பட்டவர்கள் குடும்பமாக வாழலாம். மதக் கோட்பாட்டைத் தாண்டி வராதவர் மதத்தைப் பின்பற்றுவர். நாத்திகத்தைக் கடக்காதவர் அதைப் பின்பற்றுவர். எதுவும் ஆரோவில்லில் வற்புறுத்தப்படாது. பணம் நகரத்தினுள் செலாவணியாகாது, வெளித்தொடர்புக்கே பணம் தேவை. இங்குள்ள கட்டடங்களையும், நிலங்களையும் பரம்பொருளே உரிமையுடன் அனுபவிப்பார். எல்லா பாஷைகளையும் பேசலாம் என்று கூறிய அன்னை போக்குவரத்து எப்படி அமையும் என்றதற்கு,தனக்குத் தெரியாது என்றார்.

தமிழில் தவறுகளை அறிவோம்

வலி (க்,ச்,த்,ப்) மிகும் இடங்களும் மிகா இடங்களும் (தொடர்ச்சி)

சில தவறுகளும் திருத்தங்களும்

இரு சொற்கள் (நிலைமொழியும் வருமொழியும்) சேரும் இடங்களில் (புணர்ச்சி) வல்லெழுத்துகள் (க்,ச்,த்,ப்) எங்கெங்கு மிக வேண்டும், எங்கெங்கு மிகுதல் கூடாது என்பன பற்றி இதுகாறும் விளக்கமாக அறிந்தோம். இவற்றைப் பன்முறையும் நன்கு படித்து உள்ளத்தில் உறுதியாகப் பதிய வைத்துக் கொள்ளுதல் வேண்டும். தமிழறிஞர்களின் கட்டுரைகளைப் படிப்பதும் இதற்குத் துணை செய்யும்.

வல்லெழுத்துகள் மிக வேண்டுமா? அவசியம் தானா? என்னும் வினாக்களைச் சிலர் எழுப்புகிறார்கள். மிகவேண்டிய இடங்களில் மிகாமலும், வேண்டா இடங்களில் மிகுத்தும் எழுதுவது பொருளையே மாற்றிவிடும்; மாறான பொருள் தரும். சில வேளைகளில் விபரீதமான பொருளையும் தரும். இங்கு சில சொற்றொடர்களைக் காண்போம். இவையனைத்தும் நாள், வார, மாத இதழ்களில் காணப்பட்டனவே என்பது குறிப்பிடத்தக்கது.

1. வேலை செய்தான்

வேலைச் செய்தான்

முதலில் உள்ள தொடர் 'அவன் தன் வேலையைச் செய்தான்' எனப் பொருள்படும். இரண்டாம் தொடர் வேலாயுதத்தைச் (வேல் + ஐ) செய்தான் என்று பொருள்படும். முதல் தொடரில் வேலையை (ஐ) என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கு நிற்பதால் அது இரண்டாம் வேற்றுமைத் தொகை. அதில் மிகவில்லை.

2. ஏற்ற பாட்டு

ஏற்றப் பாட்டு

முதற்றொடர் தகுதியான - ஏற்புடைய பாட்டு என்று பொருள்படும். இரண்டாம் தொடர் விவசாயிகள் நீரிரைக்கும் ஏற்றத்திலிருந்து பாடும் ஏற்றப் பாட்டைக் குறிக்கும்.

முதலாவது 'ஏற்ற' என்னும் முற்றுப் பெறாத வினைச்சொல் 'பாட்டு' என்னும் பெயரைக் கொண்டு பொருள் முழுமையடைவதால் அது பெயரெச்சம். பெயரெச்சத்தின் பின் மிகாதல்லவா? இரண்டாவது தொடரில் 'ஏற்றம்' என்னும் நிலைமொழியின் மகரம் (ம்) கெட்டு உரியவாறு வல்லெழுத்துப் பெற்றுள்ளது. இது விதி.

3. நாய் இன்று காலை கடித்தது.

நாய் இன்று காலைக் கடித்தது.

முதல் தொடர் 'நாய் இன்று காலையில் கடித்தது' என்று பொருள்படும். இரண்டாம் தொடர் 'நாய் என் காலைக் கடித்தது' (கால்+ஐ) என்று பொருள்படும்.

விபரீதமான பொருளைக் குறிக்கும் இன்னொரு சொற்றொடரைக் காண்போம்.

அரசு ஆணைப் பிறப்பித்தது. இதன் பொருள் அரசு 'ஆண் குழந்தையைப் பிறப்பித்தது' (ஆண்+ஐ) இங்கே வல்லெழுத்து 'ப்' மிகக்கூடாது. மிகுந்தமையால் எப்படிப் பொருள் மாறி விட்டது பார்த்தீர்களா? 'ஆணை' என்பது கட்டளை என்னும் பொருள் தரும் ஒரு தனிச் சொல். 'ஆணை பிறப்பித்தது' - இது இரண்டாம் வேற்றுமைத் தொகை. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் மிகக்கூடாதல்லவா?

மேலும் சில சொற்றொடர்களைக் காண்போம். (இவை யாவும் இதழ்களில் வெளியானவையே).

1. பூச்சிக் கொல்லி, 2. திருவடித் தொழுதார்

3. குறைக் கூறினார், 4. வெற்றிக் கொண்டார்

5. உறுதிக் கொள், 6. ஆத்திச் சூடி

7. மூட்டைத் தூக்கு, 8. உதவிப் புரிந்தார்

9. கங்கைக் கொண்டான், 10. உயிர்க்கொல்லி

11. கவலைத் தெரிவித்தார், 12. சுமைத்தாங்கி

13. குட்டிப் போட்டது, 14. பச்சைக் குத்து

15. நகைத் திருடினான்.

இவையனைத்தும் இரண்டாம் வேற்றுமைத் தொகை. அதாவது 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கு (மறைந்து) உள்ளது. ஆகையால் வலி மிகுதல் கூடாது. இவற்றில்

முத்து கண்ணப்பர்

வல்லெழுத்து பெய்து எழுதியுள்ளார்கள்! எவ்வளவு தவறு பாருங்கள்.

அவ்வாறே, 1. வந்துப் போனார், 2. சென்றுப் பார், 3. சேர்ந்துப் பழகு, 4. கொண்டுச் சென்றார், 5. என்றுக் கூறினார் என வல்லெழுத்துப் பெய்து எழுதுகிறார்கள். இது தவறு. இவற்றிலுள்ள நிலைமொழிகள் - வந்து, சென்று, சேர்ந்து, கொண்டு, என்று என்பன மென்றொடர்க் குற்றியலுகரங்கள். இவற்றில் கடைசி எழுத்துக்கு அயல் எழுத்து மெல்லின எழுத்துகள். எனவே மென்றொடர்க் குற்றியலுகரங்களின் பின் வலி மிகுவது தவறல்லவா?

1. எழுதினப் புத்தகம், 2. அடுத்தத் தெரு

3. நெருங்கியப் பழக்கம், 4. படித்தப் பாடம்

5. கடந்தக் காலம், 6. வந்தக் கடிதம் - என்று எழுதியுள்ளார்கள். இங்கெல்லாம் வல்லெழுத்து மிகக்கூடாது. மிகுவது தவறு. காரணம் இவற்றின் நிலைமொழிகள் அனைத்தும் பெயரெச்சம். பெயரெச்சத்தில் வலி மிகக்கூடாது என்பது விதியல்லவா?

1. கிள்ளுக் கீரை, 2. திருநிறைச் செல்வன்

3. சுடுச்சோறு, 4. கனைக்குரல் - என்று எழுதப்படுகின்றன. இவற்றிலுள்ள நிலைமொழிகள் அனைத்தும் வினைத் தொகைகள். அதாவது இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் எதனையும் தெளிவாய்க் காட்டாமல் முக்காலத்துக்கும் பொதுவாய் உள்ளன அல்லவா? வினைத் தொகையில் வலி மிகக் கூடாது என்பதல்லவா விதி?

சில சொற்கள் சிலரால் (சிந்திக்காமல்) தவறாக எழுதப்பட்டு விடுகின்றன. அவை அப்படியே வழக்கில் வந்து விடுகின்றன.

(எ.டு) கணிப்பொறி. (Calculator) இதன் நிலை மொழியாகிய கணி என்பது வினைச் சொல். எக்காலத்தையும் தெளிவாகக் காட்டாமல் முக்காலத்துக்கும் பொதுவாய் நிற்கிறது. கணித்தபொறி, கணிக்கின்ற பொறி, கணிக்கும் பொறி என விரியும். ஆதலால் இது வினைத் தொகை. 'அணிகலன்' என்பதை 'அணிக்கலன்' என்றா எழுதுகிறோம்? 'கணி பொறி' என்பதுதான் சரி. ஆனால் இப்போது 'கணிப்பொறி' என்று பெருவழக்காக வந்து விட்டது. இனி இதை மாற்ற முடியாது. வேறு இத்தகைய தவறுகள் நேராமல் கவனித்துக் கொள்ளுதல் நல்ல தமிழ் அன்பர்களின் கடமையாகும்.

இன்னும் சில சொற்றொடர்களையும் காண்போம்.

1. செய்துக்கொள், 2. இதுவரைக் காண்போம்.

3. வெற்றிலைப் பாக்கு, 4. தேவாரத் திருவாசகம்

5. கற்பனைச் சிறந்தது, 6. புத்திக்கெட்டது

7. வாழ்க்கைச் சிறப்புற்றது, 8. தைப் பிறந்தது

9. வருகிறதேத் தவிர, 10. ஒருக்கோடி

11. வரும்படிச் சொல், 12. இன்றையச் செய்தி

இச் சொற்றொடர்களில் (1) 'செய்துக் கொள்' என்பதில் 'க்' மிகக்கூடாது. 'செய்து கொள்' என்பதுதான் சரி. காரணம் 'செய்து' என்பது இடைத் தொடர்க் குற்றியலுகரம். ஈற்றெழுத்துக்கு அயலெழுத்து 'ய்' என்னும் இடையின எழுத்தல்லவா? வன்றொடர்க் குற்றியலுகரத்தின் பின் மட்டும்தான் மிகும். (2) இதுவரைக் காண்போம்'. இத்தொடரில் 'வரை' என்னும் சொல்லுக்குப் பின் மிகக்கூடாது. 'இதுவரை காண்போம்' என்பதுதான் சரி. (3) 'வெற்றிலைப்பாக்கு', (4) தேவாரத் திருவாசகம்' - மிகுந்திருப்பது தவறானது. இத்தொடர்கள் உம்மைத்தொடர்கள்! 'வெற்றிலையும் பாக்கும்'. தேவாரமும் திருவாசகமும்' என விரிவன. உம்மைத் தொகையில் மிகக்கூடாது. (5) கற்பனைச் சிறந்தது' (6) புத்திக் கெட்டது'. (7) வாழ்க்கைச் சிறப்புற்றது'. (8) 'தைப் பிறந்தது' மிகுதல் தவறு. காரணம் இவை எழுவாய்த் தொடர்கள். எழுவாய்த் தொடரில் மிகக்கூடாது. (9) 'வருகிறதேத் தவிர' இதில் 'வருகிறதே' என்னும் நிலைமொழியின் ஈற்றில் 'ஏ' (த்+ஏ=தே) காரம் வந்துள்ளது. 'ஏ'காரத்தின் பின் மிகக் கூடாது.

(10) 'ஒருக் கோடி' - 'ஒரு கோடி' என்பது தான் சரியானது. 'ஒரு, இரு' என்னும் சொற்களுக்குப் பின் மிகுதல் கூடாது.

(11) 'வரும்படிச் சொல் - தவறு. அப்படி, இப்படி, எப்படி - என்னும் இம் மூன்றனுக்குப் பின்னர்தான் மிகும். வரும்படி, நிற்கும்படி, செய்யும்படி, அறியும்படி - என வரும் சொற்களுக்குப் பின்னர் வல்லெழுத்துகள் மிகக் கூடாது.

(12) 'இன்றைய செய்தி' என்பதுதான் சரியானது. இங்கு வல்லெழுத்து (ச்) மிகுதல் கூடாது.

இவையனைத்தையும் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளல் வேண்டும்.

48 மணி நேரம்

சுபத்ரா கோவிந்தராஜன்

"கீதா, கீ...தா..."

கீதாவுக்கு அரைத்தூக்கம்; கனவுகள் காணும் மேல்மட்ட மயக்க நிலை.

"கீ...தா..."

கிசுகிசுப்பாய், அவசரமாய் ஒலித்த குரல், கீதாவை உசுப்ப, 'திடுக்'கென்று விழிப்பு வருகிறது. 'பன்னிரண்டு மணி ஆக இன்னும் பத்து நிமிஷங்கள் இருக்கு' என்று 'க்ரிஸ்டல்' கடிகாரம் கண் சிமிட்டுகிறது பக்கத்தில். "ஐயோ! மது, மது, மது.. என்னாச்சு? என்னாச்சு உங்களுக்கு? கீழே விழுந்துட்டிங்களா? எழுந்திருங்க; மது, மது" என்று கீதா பரபரத்துப் பதட்டப்பட –

மதுவின் உடம்பு கட்டிலிலிருந்து பாதி சரிந்த நிலையில் துவண்டு தொங்க, அவன் முகம் சொல்லமுடியாத வேதனையில் இறுகி இருக்கிறது. வியர்வை வெள்ளமாய்ப் பெருகி, பனியனை நனைத்திருக்கிறது. பேச முடியாமல் தவிக்கிற தவிப்பு, முகத்தில் தெரிகிறது. அவனுடைய கண்கள் அருகில் இருக்கும் மேஜையைப் பார்க்கின்றன.

அந்த மேஜையின் மேல் – கம்ப்யூட்டரில் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. தன் முகத்தில் என்னவோ எழுதி வைத்துக் கொண்டு? அது கீதாவுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. 'எமர்ஜென்சி, எமர்ஜென்சி' என்று சத்தமில்லாமல் அலறிக் கொண்டிருக்கிறது. கீதாவுக்கு நிலைமையின் பயங்கரம் புரிந்துவிட, தூக்க மசமசப்பு ஓடிப் போகிறது; அறிவு விழித்துக் கொள்கிறது.

அன்றைக்கு ஒருநாள் – ஒரு மாதம் போல இருக்குமா? – மலை முகடுகள், மரங்கள், வீட்டுக் கூரைகள் எல்லாம் வெள்ளி முலாம் பூசிக்கொண்டு மினுமினுக்க, வெளியே தோட்டத்தில் பஞ்சுமிட்டாயைப் பிய்த்து, சிதறல் சிதறலாக ஆகாயத்திலிருந்து தூவுவது போலப் பனி பெய்து கொண்டிருக்க, இந்த ரம்மியமான காட்சியைக் கண்கள் விரியக் கண்டு குதூகலப்பட்டுக் கொண்டிருந்த கீதாவிடம், மது என்ன சொன்னான்?

"கீதா, நான் சொல்றதைக் கவனமா கேட்டுக்கோ. நாம இங்கே தனியா இருக்கோம். இந்திய எல்லையில் ஏதோ ஒரு மூலைலே இருக்கோம். ஒரு ஆபத்து என்றால் உடனே உதவி வரமுடியாது. 'காம்ப்'க்கு 'போன்' போட்டு, உதவிக்கு ஆள் வரதுக்குள்ளே என்ன ஆகுமோ தெரியாது. அதனாலே – ஏய், நான் பேசிண்டே இருக்கேன்; நீ பாட்டுக்கு வேடிக்கை பாத்துண்டு இருக்கியே! சில்லி–"

"ஓ... மது, வெளிலே பாருங்கோ. எவ்ளோ அழகா இருக்கு! 'ஸ்நோ' எப்டி விழறது பாத்தீங்களா? நான் இத்தனை நாள் பாத்ததே இல்லேப்பா இப்டி ஒரு அழகை! இதை ரசிக்காம இப்பப் போய் என்னமோ ஆபத்து, அது இதுன்னு பேசறீங்களே! நமக்கு என்ன ஆபத்து வந்துடப் போறது! மது, மது, நான் இப்ப வெளிலே போய் நின்னா – எம்மேலே 'ஸ்நோ' பிசிர் பிசிரா விழுந்துண்டே இருந்தா – நான் எப்டி இருப்பேன் மது?"

"உன் தலைபோல இருப்பே. நான் சீரியஸா பேசறேன். நீ என்னமோ சின்னக் குழந்தை மாதிரி குதிக்கிறே. விளையாட்டா இருக்கா? அதெல்லாம் அப்புறமா வச்சுக்கலாம். சொல்றதைப் புரிஞ்சுக்கப் பாரு இப்போ". மதுசூதன் கடுமையாகவே பேசுகிறான். வாரம் தவறாமல் டி.வி.யில் மகாபாரதம் பார்த்த கீதா, உடனே நாடக பாணியில் கரம் குவித்து,

"ஜோ ஆக்ஞா, பர்த்தா ஸ்ரீ" – என்கிறாள் சிரிப்பு பொங்க.

"ஆபத்து நோட்டீஸ் கொடுத்திட்டு வராது. திடீர்னு அது தாக்க வர சமயத்திலே, நாம தயாராக அதைச் சந்திக்கலேன்னா – இன்னொரு 'சான்ஸ்' கிடைக்கிறது கஷ்டம். இரு – குறுக்கே பேசாதே. எனக்கு 'ஹார்ட் அட்டாக்' வந்துடுத்துன்னு வச்சுக்கோ. என்ன செய்வாய்? அழுதுண்டு நிற்பியா? அதனாலே பலன் உண்டா? அதனாலேதான் சொல்றேன். நான் சொல்றதைப் புரிஞ்சுக்கோ, புரிஞ்சுக்கோனு".

உறைக்கிறது கீதாவுக்கு. மதுசூதனின் கவலையின் பரிணாமத்தை உணர்ந்து கொள்ள முடிகிறது. மதுசூதன் விவரமாகச் சொல்கிறான். அவன் 'கம்ப்யூட்டர் புரோக்ராம்'கள்

எழுதி அதனுடைய மூளைக்குள் ஏற்றி வைத்திருக்கிறான். எல்லாம் 'மெடிக்கல் ஸாஃப்ட் வேர்' என்று சொல்லப்படுகிற மருத்துவ சம்பந்தமான ப்ரோகிராம்கள். 'ஹார்ட் அட்டாக்', 'ஸ்ட்ரோக்', 'ஹைபோ க்ளைசீமியா' என்று தனித்தனியாகக் கோப்புகள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் அடையாளக் குறிகளும், விரிவான சிகிச்சை முறைகளும் உள்ளன. முன்னறிவிப்பில்லாமல் கடுமையான நோயின் அறிகுறிகள் தோன்றினால் அவற்றை உடனே, கம்ப்யூட்டரில் ஏற்ற வேண்டும். கம்ப்யூட்டரை இயக்குவது கஷ்டமே இல்லை. மது, கீதாவுக்குப் புரியும்படி கற்றுக் கொடுப்பான். 'சிம்ப்டம்ஸ்' - அதாவது அறிகுறிகளைக் கம்ப்யூட்டரில் பதிவு செய்துவிட்டால் போதும். பிறகு அதுவே நோய் இன்னதென்று உறுதி செய்துகொண்டு சிகிச்சை முறையை ஒளிபரப்பும். அது சொல்வதையெல்லாம் தப்பு செய்யாமல் பின்பற்றினால் - எந்த நிலைமையையும் சமாளிச்சுடலாம்.

"ஹா!" என்று வியந்து போகிறாள் கீதா.

"நிஜமாகவா? நிஜமாகவா? மது, நீங்க பெரிய ஜீனியஸ்" என்று அமர்க்களமாகப் புகழ்கிறாள். மதுசூதன் மலர்ந்து சிரிக்கிறான்.

"இன்னும் கேளு கீதா. இந்த 'மெடிகல் ஸாஃப்ட்வேரை' விலைக்கு வாங்க என்ன போட்டி இருக்கும் தெரியுமா? நமக்கு லட்சம் லட்சமாய் பணம் குவியப் போறது" என்று கீதாவை அசத்துகிறான்.

அன்று மதுசூதன் கூறியதெல்லாம் இன்று - இந்த இரவு பன்னிரண்டு மணிக்கு - நடைமுறையில் நடக்கப் போகிறதா!

மது எப்படியோ கம்ப்யூட்டரை இயக்கிவிட்டிருக்கிறான். அதற்குமேல் எதுவும் செய்ய முடியாமல் கட்டிலில் சரிந்துவிட்டிருக்கிறான் என்று புரிகிறது. நெருக்கடி நிலையின் அவசரத்தைப் புரிந்து கொண்டு பரபரப்பாகிறாள்.

மதுவால் பேச முடியவில்லை என்றாலும், மார்பைப் பிடித்துக் கொண்டு தவிக்கிறான்; வியர்வை ஏராளம் —

ஓ! இதுவெல்லாம் 'ஹார்ட் அட்டாக்'கின் அறிகுறிகள் என்று மது சொல்லவில்லையா!

கீதா நொடியில் தன்னை திடப்படுத்திக் கொள்கிறாள். கையைப் பிசைந்து கொண்டு நிற்க இது நேரமல்ல. மதுவின் உயிர் பிரச்னை - கீதாவின் வாழ்வுப் பிரச்னை - தனியாக நின்று சமாளிக்க வேண்டும். சிந்தாமல் சிதறாமல் வேலை செய்ய வேண்டும்.

பயம், அழுகை, கவலை போன்ற உணர்ச்சிகளை உதறித் தள்ளிவிட்டு கீதா இயந்திரமாகிறாள். அறிகுறிகளை நிதானத்துடன் கம்ப்யூட்டரில் ஏற்றுகிறாள்.

"மையோ கார்டியல் இன்ஃபார்க்ஷன்" என்று கம்ப்யூட்டர், கீதா நினைத்தது சரி என்று ஆமோதிக்கிறது. கூடவே ஆணைகள் இடுகிறது.

"உடைகளைத் தளர்த்தி விடு. பேஷண்டை அலுங்காமல் தூக்கிச் சரியாகப் படுக்க வை. ஃப்ரிட்ஜில் 'ட்ரிப்ஸ்' பாட்டில்கள் இருக்கின்றன. 'சோடியம் க்ளோரைட் வித் 5% டெக்ஸ்ட்ரோஸ்' என்று லேபில் போட்ட பாட்டில்கள். ஸ்டாண்டில் பாட்டிலைப் பொருத்து. தமனியைக் கண்டு பிடித்து, ஊசியை ஏற்று. ஊசியை "கானுல்லா'வில் பொருத்தி வை. அலமாரியில் முட்டை வடிவத்தில் சிவப்பு நிற ஒயர்களுடன் ஒரு மிஷின் இருக்கு. அதை எடுத்து வா. கம்ப்யூட்டரில் அதை இணைத்து விடு".

செய்கிறாள் கீதா.


"தப்பு" என்று கம்ப்யூட்டர் உறுமுகிறது. "நீ இணைத்திருப்பது தவறு" என்று மிரட்டுகிறது. கையோடு படம் ஒன்றைக் காட்டுகிறது. அதைப் பார்த்துச் சரியாகச் செய்கிறாள் கீதா. படபடவென்று நெஞ்சு அடித்துக் கொள்கிறது அவளுக்கு. கம்ப்யூட்டருக்குள்ளிருந்து பல விநோதமான சத்தங்கள் வருகின்றன. சிறிது நேரத்தில், மதுவின் இ.சி.ஜி. கம்ப்யூட்டர் திரையில் மேல் பக்கமாக ஓடத் தொடங்குகிறது. 'பீப் பீப் பீப்' என்று சீராக ஒலி கேட்கிறது.

"பேஷண்டின் இ.சி.ஜி. 'மானிட்டர்' செய்யப்படுகிறது" என்ற செய்தியைத் தெரிவித்து விட்டு,

"ப்ரிட்ஜில் 'யூரோகினஸ்' இஞ்செக்ஷன் வியால் இருக்கிறது. அதை எடுத்து வா. முட்டை வடிவ மெஷினில் 1 என்று நம்பர் போடப்பட்ட இடத்தில் பொருத்து. 2 என்று நம்பர் போட்ட இடத்தில் நூறு மில்லி கிராம் பெத்திடின் வியால் - 3 என்று நம்பர் போட்ட இடத்தில் 2% க்ஸைலோ கார்ட் வியால் - எல்லாவற்றையும் ஒழுங்காகப் பொருத்து. அப்புறம்..."

கம்ப்யூட்டர் கட்டளையிட, கீதா பணிய... மாறி, மாறி... "குட்" என்கிறது கம்ப்யூட்டர். கீதாவைத் தட்டிக் கொடுப்பதுபோல இருக்கிறது.

"எல்லாம் சரியாகச் செய்து விட்டாய். குட். மருந்துகள் வேலை செய்யட்டும். இன்னும் நாற்பத்தியெட்டு மணிநேரத்துக்கு ஒன்றும் சொல்ல முடியாது. மனசைத் தளரவிடாதே. தைரியமாக இரு. கவனமாக இரு. தூங்கி விடாதே" என்கிறது. இரவின் நீண்ட நிமி



ஷங்கள் நகர்ந்து பொழுது புலரும் வேளையில் கம்ப்யூட்டர் நல்ல செய்தி தருகிறது.

"இப்போது பேஷண்ட் ஒரே சீரான நிலையில் இருக்கிறார். இ.சி.ஜி. சீராக இருக்கிறது. பேஷண்ட் தூங்குகிறார். தூங் கட்டும்" என்கிறது.

விடிய விடிய விழிப்புடன் இருந்த கீதாவுக்குக் கடுகளவு நிம்மதி பிறக்கிறது.

"ஏழுமலையானே, நன்றி; என்னப்பனே நன்றி".

கீதாவுக்குப் பசி எடுக்க. வில்லை. தாகமும் இல்லை. தூக்கம் என்பதை அவள் மறந்தே போகிறாள். கம்ப் யூட்டரின் கட்டளைகளே குறி யாக இருக்கிறாள். நாற்பத் தெட்டு மணிகளில் எவ்வளவு மணிகள் இன்னும் மீதமுள் ளன என்ற கணக்கும் அவள் போடவில்லை. அவள் குழந்தை போல குதிக்கும் கீதா அல்ல. இயந்திரம், கம்ப்யூட்டரின் கட் டளைகளை உடனுக்குடன் நிறை வேற்றி வைக்கும் வெறும் இயந்திரம். பொழுது புலர் வதும் போவதும்கூடத் தெரி யாத இயந்திரம்.

'திடும்'மென்று அபஸ்வர மாக ஒரு சத்தம் வருகிறது. அது கம்ப்யூட்டரின் வயிற்றி லிருந்து வருகிறது. கூடவே கடமுடவென்று இனம் புரியாத ஒலிகள். இந்தச் சத்தங்கள் ஒயுமுன், சீராக வந்து கொண் டிருந்த 'பீப் பீப்' சத்தம் நின்று போகிறது. திரையில் இ.சி.ஜி. படமும் தெரியவில்லை.

கீதா ஓடிச்சென்று மது வைத் தொட்டுப் பார்க்கிறாள். ஒன்றும் தெரியவில்லை. கம்ப் யூட்டரைப் பார்க்கிறாள். ஒன் றும் புரியவில்லை. கம்ப்யூட் டரில் சிகப்பு விளக்கு எரியத் தொடங்க,

"எனக்கு உடம்பு சரியாக இல்லை" என்று அது முனகு கிறது.

"உடனே கம்ப்யூட்டர் என்ஜி னீயர் அச்சுதனுக்குப் போன் செய். இதோ அவருடைய டெலிபோன் நம்பர். சீக்கிரம் வரச்சொல்" என்று கட்டளை இடுகிறது. பிறகு ஒரேயடி யாக மௌனமாகி விடுகிறது. கம்ப்யூட்டர் அப்படி இருப்பது கீதாவுக்குப் பிடிக்கவில்லை. பயமாக இருக்கிறது. என்ன ஆயிற்று இதற்கு! கம்ப்யூட்டர் வேலை நிறுத்தம் செய்து விட்டால் மதுவின் கதி என்ன? கூட்டிக் கழித்துக் கணக்குப் போடுகிறாள் கீதா. நாற்பத்தி யெட்டு மணி நேரத்துக்கு இன்னும் சில மணிகளே இருக்கின்றன. கடைசி நேரத்

தில் எல்லாம் கவிழ்ந்து விடுமோ! திகிலாக இருக்கிறது. உடம்புக்குள் பூச்சிகள் பறப்பது போல இருக்கிறது. அச்சுதன் சீக்கிரம் வருவாரா? சாதாரணமாக அச்சுதன் அடிக்கடி வருபவர்தான்.

"மிஸஸ் மது. சாய் இரிக்கோ?" என்று கேட்டு வாங்கி டீ குடித்துவிட்டுப் போகிற அளவுக்குப் பழக்க மானவர்தான். முதலிலேயே அவருக்குப் போன் செய்து அழைத்துத் துணையாக இருக்கச் சொல்லியிருக்க முடியும். கீதாவுக்கு அது தோன்றவே யில்லை.

"மிஸஸ் மது. சாய் இரிக்கோ?" என்று கேட்டுக் கொண்டே வரும் அச்சுதன் சாரைப் பார்த்ததுமே, கீதா வுக்கு அழுகை வரும்போல் ஆகிவிடுகிறது.

"சாய் அப்புறம். முதல்லே கம்ப்யூட்டரை சரி பண்ணுங்கோ சார். இ.சி.ஜி. தெரியவில்லை. 'பீப் பீப்' சத்தம் கேட்கலை. மதுவுக்கு என்ன பண்ணணும்னு தெரியலை. கம்ப்யூட்டர் ஒடலை. அதை ஒடப் பண்ணுங்கோ. சீக்கிரம். இல்லாட்டி மதுவுக்கு ஆபத்தாயிடும். ப்ளீஸ் – ப்ளீஸ்".

கீதாவின் தவிப்பைக் கண்டு அச்சுதன் மறுபேச்சில்லாமல் கம்ப்யூட்டரின் வயிற்றைத் திறக்கிறார்.

"எனிக்கு ஒன்னும் மன சிலாகலை" என்று முனகிக் கொண்டே, எதையோ பிடித்து இழுக்கிறார். என்னவோ செய்கிறார். கம்ப்யூட்டர் கண்ணை உருட்டிக் கொண்டு ஓ.கே. என்கிறது. 'பீப் பீப்' சத்தம் வருகிறது. திரையில் இ.சி.ஜி. தெரிகிறது. பழையபடி கட்டளைகளை அள்ளி வீசுகிறது. நன்றி உணர்ச்சியால் கீதா வின் மனம் பூரிக்கிறது. புதிய சுறுசுறுப்புடன் கம்ப்யூட்டரின் ஆணைகளை நிறைவேற்றுகிறாள்.

அச்சுதன் பேசாமல் எல்லா வற்றையும் பார்க்கிறார். அதிசயமாக இருக்கிறது அவருக்கு. கீதா கொடுத்த 'சாயை' உறிஞ்சிக் கொண்டே, அவள் சொல்லும் விவரங்களை உன்னிப்பாகக் கேட்கிறார்.

நிலைமை புரிந்து போகிறது அவருக்கு. மதுசூதனுக்கு என்ன ஆச்சு என்பதும் கம்ப் யூட்டருக்குள் ஒடிக் கொண் டிருக்கும் 'புரோக்ராம்' பற்றியும் நன்றாக ஊகிக்க முடிகிறது. இதய நோய்க்குப் புதுசாக ஒரு சிகிச்சை முறையைப் பின்பற்றுவதாகவும், அதனால் தொண்ணூறு சதவிகிதம் வெற்றி கிட்டுகிறது என்றும் மதுசூதன் அவரிடம் சொல்லியிருக்கிறான். மதுசூதனின் மருத்துவத் திறமையைப் பற்றி அவருக்குச் சந்தேகமில்லை. ஆனால் – அந்த சிகிச்சை முறையைப் 'புரோக்ராம்' செய்து, அதைக் கம்ப் யூட்டரின் மூளைக்குள் செலுத்தும் அளவுக்கு 'ஸாஃப்ட்வேர் டெக்னாலஜி'யில் மதுசூதன் எப்போது திறமை பெற்றான் என்பதுதான் கம்ப்யூட்டர் என்ஜினீயரான அச்சுதனுக்கே பெரிய திகைப்பாக இருக்கிறது. மனதில் ஒருவிதமான நமைச்சல் ஏற்படுவதைத் தடுக்க முடியவில்லை.

'சாதாரண புரோக்ராமா இது! ஓ! ஃபன்டாஸ்டிக்!'

"ராப்பகலா உழைச்சார் சார். 'உனக்கு ஏதாவது திடீர்னு வந்தா பாத்துக்க நான் இருக்கேன். எனக்கு வந்துட்டா, நீ திகைச்சுப் போய் நிக்கக் கூடாது. கம்ப்யூட்டர் சொல்றபடி செய்யக் கத்துக்கோ"னு எனக்குச் சொல்லிக் கொடுத்தார். அப்ப, அவர் நாக்கிலே சனி இருந்ததோ என்னவோ, இவ்ளோ சீக்கிரமா பலிச்சுப் போச்சே! இந்த 'ஸாஃப்ட் வேர்' நமக்கு லட்ச லட்சமாய் கொடுக்கப் போறதுனு சொன்னார் சார். எனக்கு லட்சமும் வேணாம்; ஒண்ணும் வேணாம். மது இல்லேன்னா – எத்தனை லட்சம் இருந்தாத்தான் என்ன? யாருக்கு வேணும்?" அழுகையுடன் கீதா பேசப் பேச அச்சுதனின் மூளை கூர்மையாகிறது.

"ஓ! என்ன பெண் இவள்! லட்சமாம் லட்சம்! இந்தப் புரோக்ராமுக்குச் சர்வதேச மார்க்கெட் இருக்கும். கோடி கோடியாய்க் கொண்டு வந்து கொட்டுமாக்கும்! ஒரு காப்பி எடுத்து துபாய்க்கு அனுப்பினால் – அந்த எமப்பயல் சங்குண்ணி, சில கோடிகள் புரட்டிவிடுவான். அப்புறம் அமெரிக்கா – அங்கே டாலர் மழை! பணம்! பணம்! அச்சுதனுக்குப் பணம் வேணும். நிறைய நிறைய வேணும். எர்ணாகுளத்திலே பெரிய மனை; ஏத்தம்பழத் தோப்பு; முந்திரிக்காடு – ரப்பர் எஸ்டேட் கூட வாங்கணும். பின்னே – குஞ்சுக்குட்டன் மோளை – அந்த பார்க்கவி குட்டியை விவாகம் கழிச்சு – குஞ்சும் குளுவானுமா" மனக்கோட்டை கட்டும் சுகத்தில் அச்சுதன் சார் ஆழ்ந்து போகிறார்.

'இந்தப் புரோக்ராமைக் காப்பி எடுத்துட வேண்டியதுதான். கம்ப்யூட்டர் உலகத்தில் 'பைரேட்ட் காப்பி' என்கிறது புதிசு இல்லை. தப்பும் இல்லை. காப்பிதானே! அசலை வித்து மதுசூதன் பணம் பண்ணிக் கொள்ளட்டும். காப்பியை வித்து அச்சுதன் பணம் பண்ணிக்கலாம். தப்பில்லை. இது திருட்டு இல்லை. அப்படியெல்லாம் பார்த்தால் பணம் கிடைக்குமா? அச்சுதனுக்குப் பணம் வேணும். வேணுமானா குருவாயூரப்பனுக்கு ஒரு பெர்சன்ட் கமிஷன் போலக்கொடுத்துடலாம். (பணம் கோடிக் கணக்கா வந்தால் அரை பெர்சன்ட் மதியோ!) மதுசூதன் கண்விழிப்பதற்குள் காப்பி

வைரவரிக் கவிதைகள்

யார் கையில்?

நோயாளி குணம்காண
தேர்ந்த மருத்துவர்கையில்.
ஆட்சிப் பொறுப்போ
யார் கையிலும்..!

— தியாகஜோதி ராமலிங்கம்

எழு!


சூரியக் குஞ்சுகளைப்
பிரசவிக்கும் நீ
இருளின் மடியிலா
முகம் புதைப்பது?

— தாயு. செந்தில்

கபடம்

தனி ஒருவனுக்கு
உணவில்லையேல்
ஜெகத்தினை அழி...
தனி ஒருவன்
உழைக்கவில்லையேல்
அவனை அழி.

— க. சீத்தா



வேஷம்

தேசத்திற்கு நேசம்
அடிப்படையாகும்
இல்லையெனில்
வேஷங்களே
வேள்வி நடத்தத்
தொடங்கி விடும்.

— 'இதயகீதம்' இராமானுஜம்

எடுத்துடணும். கம்ப்யூட்டர் என்ஜினீயரான அச்சுதனுக்குக் காப்பி எடுப்பதா பிரமாத வேலை!

கம்ப்யூட்டரும் கீதாவும் அயராமல் வேலை செய்து கொண்டு இருக்கின்றனர் - அச்சுதனின் மனதைப் போலவே!

நாற்பத்தெட்டு மணி நேரம் முடிந்து விடுகிறது.

"இனி பயம் இல்லை என்று கம்ப்யூட்டர் அபயம் அளிக்கிறது. தொடர்ந்து குறிப்புகளை எழுதிக் கொள். அதன் படி இரண்டு நாட்களுக்குப் பின்பற்று. பிறகு பேஷண்ட் எழுந்து நடக்கலாம். 'புரோக்ராம் முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிறது" என்கிறது.

"சக்ஸஸ், மிஸஸ் மது! பெரிய வெற்றி! மது பிழைத்து விட்டார். ஓ! இந்த 'ஸாஃப்ட்வேர்' பெரிய வரப்பிரசாதமாக்கும்! க்ரேட்! ரியலி க்ரேட். இதைக் கொண்டாடணுமே! மிஸஸ் மது, சாய் இரிக்கோ?" என்று அச்சுதன் ஆர்ப்பரிக்கிறார்.

அச்சுதன் சாரின் இந்தக் கேள்வியால், கீதாவின் மனப்பாரமெல்லாம் கரைந்து போகிறது. கள்ளமில்லாமல் மலர்ந்து சிரிக்கிறாள். முறுக்கேறியிருந்த நரம்புகள் எல்லாம் தளர்ந்து கொடுக்க, அந்தப் பாதிப்பு தாங்காமல் 'ஓ'வென்று அழுகிறாள். உறைந்து போயிருந்த பயமும், திகிலும், மன அழுத்தமும் உருகி உருகி, கண்ணீராய் - வெள்ளமாய் வெளியேறுகிறது.

'புரோக்ராம்' முடிந்து விடுகிறது. அச்சுதன் குதித்தெழுந்து கம்ப்யூட்டரை நிறுத்துகிறார்.

அவருக்குச் 'சாய்' தயாரிக்க கீதா உள்ளே செல்ல, அச்சுதன் மளமளவென்று செயலில் இறங்குகிறார். பாக்கு கடிக்கும் நேரத்தில் காப்பி எடுத்து விடலாமே!

"முடியாது" என்கிறது கம்ப்யூட்டர். "அனுமதி இல்லை" என்கிறது.

"ஹே! எனிக்கு எதுக்கு அனுமதி!" சிரிக்கிறார் அச்சுதன். அவர் கம்ப்யூட்டர் என்ஜினீயராக்கும்! கற்ற வித்தைகள் அத்தனையும் பயன்படுத்துகிறார். கம்ப்யூட்டர் சீறுகிறது. "முடியாது. வீண் வேலை" என்று கத்துகிறது.

அச்சுதனுக்கு ஆத்திரம்! என்ன இது? மனை, எஸ்டேட், பார்க்கவி, போய்விடுமா எல்லாம்! கைக்கெட்டியது வாய்க்கெட்டால் போய்விடுமா? ஐயோ, கோடிக்கணக்கில் பணம்!

கேவலம் ஒரு காப்பி எடுக்க அச்சுதனால் முடியவில்லை என்றால்! விலை மதிப்பில்லாத இந்த 'ஸாஃப்ட்வேரை' யாரும் காப்பி எடுத்துவிட முடியாத படி, கம்ப்யூட்டருக்குள் ஏதோ வேலை செய்து வைத்திருக்கிறான் இந்த மது! கள்ளன்! இருக்கட்டும். மது வெறும் டாக்டர்தானே! அச்சுதனிடம் இவனுடைய வேலைத்தனமெல்லாம்நடக்குமா?

அச்சுதன் கறுவிக் கொண்டே, 'பி.சி.டூல்ஸ்' என்னும் கருவியைப் பயன்படுத்த - கம்ப்யூட்டரின் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்கிறது. விளக்கு அணைந்து அணைந்து எரிகிறது.

"புரோக்ராம் முழுவதும் அழிந்துவிட்டது. மிச்சமில்லாமல் அழிந்துவிட்டது" என்று சீறுகிறது. சீறிவிட்டுக் கம்ப்யூட்டர் ஓய்ந்து போகிறது. அதன் முகம் இருளடைந்து போக, 'இனி பேச முடியாது போ' என்பது போல மௌனமாகி விடுகிறது. அச்சுதன் !

"நாளை நமதே"

"இதயத்துக்கு விடுமுறை"

டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியன்

ஒருமுறை முதறிஞர் இராஜாஜி அவர்கள் சொன்னார்கள். "டாக்டர்கள் ஆபரேஷன் செய்யும்போது இரத்தக் குழாய்களைக் கட்டிவிட்டு இரணசிகிச்சை செய்வார்கள். ஆனால், அதேபோல் இதயத் துடிப்பைப் பூரணமாக நிறுத்திவிட்டு அறுவைச் சிகிச்சை செய்ய முடியுமா என்று எந்த மருத்துவரையாவது கேட்டுப் பாருங்கள். ஐயோ! முடியாது என்பார்கள். உடலின் வேறு எந்த உறுப்பின் பணியையாகிலும் நிறுத்தலாம். ஆனால் நம் இதயத்துக்கு விடுமுறை அளிக்க முடியாது. அதைப் போன்றதே நம் இளைஞர்களின் கல்வியும்" என்றார் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் என்னும் மாமேதை.

இம் முதறிஞர், உலகின் சிறந்த அறிஞர்களுள் ஒருவர். அவர் மரணமடைந்தபோது எதற்கும் கலங்காத தந்தை பெரியார் அவர்களே கலங்கினார்கள் என்றால் முதறிஞரை, தந்தை பெரியார் எவ்வளவு நேசித்திருக்க வேண்டும் என்று நமக்குத் தெரியவருகிறது. இராஜாஜி அவர்களை 'உலகின் சிறந்த அறிஞர்' என்று அமெரிக்க ஜனாதிபதி கூறினார்கள். காங்கிரஸ் மூளை அவர் என்று தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள் கூறினார்கள். அவரை முதறிஞர் என்று அழைத்தது பேரறிஞர் அண்ணா அவர்கள்.

அப்படி யாவராலும் போற்றிப் புகழப்பட்ட 20ஆம் நூற்றாண்டின் சிறந்த அறிஞர் பெருமான் இளைஞர்களின் கல்வி பற்றிக் கூறியுள்ள கருத்தைக் கவனியுங்கள்.

இதயத்துடிப்பு ஒரு கணம் நின்றால்கூட மரணம் சம்பவிக்கும். ஐந்து எண்ணுவதற்குள் மூளைக்கு இரத்தம் போகாது, மூளை மரத்து விடும். எல்லா அங்க அசைவுகளும் அடங்கிவிடும். பெட்ரோல் இல்லாது ஆகாயத்தில் பறக்கும் விமானம்போல் இதயத்துடிப்பு நின்ற மனிதனும் உடனே விழவேண்டியதுதான். பிறகு அவன் சொர்க்கம் போகிறானா, நரகம் போகிறானா என்பது நமக்கு இங்கு சம்பந்தமில்லாத ஆராய்ச்சி.

ஆனால், முதறிஞர் கூறிய அரும் பெரும் கருத்தில் நாமெடுத்துக் கொள்ள வேண்டிய அறிவுரை ஒன்றே ஒன்றுதான்.

ஒரு நாட்டின் இதயத்துடிப்பு என்ன? ஒரு நாட்டில் சிறிது நேரம் கூட நிறுத்தி வைக்க முடியாதது எது?

நன்றாக யோசித்துப் பாருங்கள். சினிமாவும், டப்பாங்குத்து நடனங்களும் நின்று விட்டால் நாடு செத்துவிடுமா? சினிமாவில் வரும் கதாநாயகன் விடும் குத்துகளில் அவனை எதிர்க்கும் ஒரு பட்டாளமே சாயும் அதிசயங்கள் நின்று விட்டால் பாரதம் படுத்துவிடுமா? தினம் தினம் நாட்டியமணிகள், நடன சிகாமணிகள் ஆடும் ஆட்டங்கள், பாட்டங்கள் சிறிது ஓய்ந்துவிட்டால் இந்தியாவின் நாடி நின்று விடுமா?

நான் பெரியவனா, நீ பெரியவனா என்று தினம் தினம் நடக்கும் அரசியல் ஆராய்ச்சிகள் சிறிது அஸ்தமித்துவிட்டால் நம் பண்டைய பாரதம் ஸ்தம்பித்து விடுமா? தினம் தினம் தொலைக்காட்சிகளில் வரும் விளம்பரங்கள், இந்தப் பற்பசையை வாங்குங்கள் உங்களை இன்பபுரிக்கே அது கூட்டிச் செல்லும், இந்தக் கடைப் புடைவையை வாங்குங்கள். உங்கள் வாழ்க்கையிலேயே ஒரு திருப்பம் வரும், ஆயிரம் ரூபாய் துணி 100 ரூபாய்க்கு விற்பனை, போன்ற ஜகஜ்ஜால விளம்பரங்கள் சில நாட்களுக்கு இல்லை எனில் இமய முதல் குமரி வரை பரந்து நிற்கும் பாரதமாதா வாழ மாட்டாளா? உங்களையே இக்கேள்விகளைக் கேட்டுப் பாருங்கள். ஒரே பதில்தான் கிடைக்கும். மேலே சொன்னவை அனாவசிய கிளுகிளுப்பை நமக்கு உண்டு பண்ணலாம். ஆனால், அவற்றால் தேசத்தின் உடல் தேறாது. ஆனால் இவற்றால் நாடு உஷ்ணமடையும். இதய நோய் நாட்டைப் பீடிக்கும்.

அண்மையில் இந்திய ஆட்சிப் பணி (ஐ.ஏ.எஸ்.) தேர்வில் நாட்டின் பிதா பற்றிய கேள்விகளைக் கூட எழுத முடியாது நூற்றுக்கணக்கானவர் திணறிய செய்திகளைப் பத்திரிகைகள் பறைசாற்றியதை நாம் அவ்வளவு சீக்கிரம் மறந்துவிட முடியாது.

தூர்தர்ஷனில் ஒரு வினாடி வினாப் பகுதியில் தில்லியில் சில மாதங்கட்கு முன்பு நடந்த நிகழ்ச்சி ஒன்றில், சினிமா பற்றிய செய்திகள் தவிர வேறு எதுவுமே தெரியாத பட்டமேற்படிப்பு மாணவ மாணவியர் திருதிருவென விழித்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

இந்த நிலை ஏன்? ஒரு கணம் சிந்தியுங்கள்.

"நாட்டின் எதிர்காலம் இளைஞர்கள் கையில்" என்றார் மனிதருள் மாணிக்கம் நேரு பிரான்.

அறிவு அற்றம் காக்கும் கருவி என்று கூறிய உலகின் முதல் சிந்தனைச் சிற்பி வள்ளுவன், 'கற்க கசடறக் கற்க' என்றான். எப்போது. 2000 ஆண்டுகட்கு முன்பு.

ஆனால், இளைஞர்கள் எங்கு இன்று இருக்கிறார்கள்? கல்லூரிகள் காலை 9.30 மணிக்குத்

திறக்குமுன் சினிமா கொட்டகைகள் திறந்து தினம் 4 அல்லது 5 காட்சிகளைக் காட்டும் இந்தப் பரந்த நாட்டில் இளைஞரின் இடம் என்ன?

வருடத்துக்கு மொத்த நாட்கள் 365. அவற்றில் சுமார் 200 நாட்கள் கல்லூரிகள் வேலை செய்ய வேண்டுமென்பது சட்டம். இதில் கால் பாகம் கூட வேலை செய்யாத பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் ஏராளம் ஏராளம்.

என்னை, இந்தியாவின் மிகப் பெரிய மாநிலமாகிய உத்தரப் பிரதேசத்தில் பல்கலைக்கழக முறையைச் சீரமைக்க அவ்வரசு ஏற்படுத்திய உயர்மட்டக் குழுவின் ஓர் உறுப்பினராக அரசு நியமித்தது.

பல நாட்கள் உத்திரப்பிரதேச மாநிலத்தில் பல கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களையும் பார்க்கும் பெருவாய்ப்புப் பெற்றேன். பெருமைமிகு காசி பல்கலைக் கழகம், பழைமைமிகு லக்னோ பல்கலைக்கழகம், புகழ்மிகு அலகாபாத் பல்கலைக்கழகம் இவற்றையெல்லாம் போய்ப் பார்த்தோம்.

பல அற்புதங்களையும் பார்த்தோம்; பல அவலங்களையும் கண்டோம். சிறுபான்மையினர் நடத்தும் கல்லூரிகளில் பி.காம்., வகுப்பில் 50 பேர் சேர்க்கலாம் எனப் பல்கலைக்கழகம் சொல்லி இருக்கும் போது 300 பேர் வரை, பெரும் அன்பளிப்புகள் பெற்றுக் கொண்டு சேர்க்கிறார்கள். கல்லூரி ஆரம்ப நாளன்று வரும் இவர்கள் பிறகு பரிட்சை நாளன்றுதான் வருகிறார்கள். இதுபோல்தான் பல ஆண்டுகளாக ஆசிரியப் பயிற்சி முறையில் கர்நாடக மாநிலம் இம்மாதிரி ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளை அனுமதித்தது.

இந்தியா பூராவிலும் இருந்து மாணவ மாணவியர் இங்கு வந்து இரண்டு ஆண்டுகள் படிப்பதாகப் பதிவு செய்து கொள்ளலாம், பலப் பல ஆயிரங்கள் கொடுத்த பின்னர் தான். பிறகு அவர்கள் ஊர் திரும்பி விடலாம். ஆனால் கர்நாடகாவிலிருந்து இரண்டு ஆண்டுகள் படிப்பதே போல் தினம் தினம் பதிவேடுகள் வைக்கப்படும். உண்மையைவிட, சர்ட்டிபிகேட்டுகள்தானே இன்று நம்பப்படுகிறது. இரண்டாண்டுக்குப் பின்னர் பரிட்சை என்ற பெயரில் பெருந்தொகை மறுபடியும் பெறப்பட்டு ஆசிரியப் பயிற்சிச் சான்றிதழ்கள் அளிக்கப்பட்டன.


ஆசிரியர் என்னும் அருமையான தமிழ்ப் பதத்தைப் பாருங்கள். ஆசு என்றால் குற்றம், இரிதல் எனில் துடைத்தல், அகற்றல் என்று பொருள். மாசகற்றும் இந்தப் பணியில் ஈடுபடுவதால் ஆசு இரிதல் – ஆசிரியர் என்ற பெயர் வந்தது என்பார் என் தமிழ்ப் பேராசிரியர் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள்.

ஆனால், இங்கோ ஆசு என்னும் மாசுக்களை உருவாக்குவதே இந்தப் பள்ளிகளின், கல்லூரிகளின் வேலையாக உள்ளது.

நான் லக்னோ மாநகரத்தில் அன்றிருந்த துணை வேந்தரிடம் கேட்டேன். "ஏன் இப்படி நடக்கிறது? 50 மாணவியருக்குப் பதில், ஆறு மடங்கு அதிக மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்களே. நீங்கள் அங்கு எந்தப் பாடமும் நடக்கவே இல்லை என அறிந்தும் சும்மா இருக்கிறீர்களே? என்று கேட்டபோது ஒரு பேருண்மையை அவர் கூறினார்.

"இன்று பலரும் ஒரு முக்கிய விஷயத்தைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பண நாயக உலகில் எல்லோரும் பணம் சேர்வதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றனர். எனவே அரசியல்வாதிகளில் பலரே இம்மாதிரி பணங்காய்ச்சி மரங்களை வளர்க்கிறார்கள். இதில் நான் என்ன செய்ய முடியும்?" என்றார் அவர்.

பங்குச் சந்தையில் ஒரு பெரிய காளை என்று வர்ணிக்கப்படும் அர்ஷத் மேத்தா இருந்தால் இங்கும் இக்கல்வித்துறையிலும் எங்கும் பல சிறிய மேத்தாக்கள் உள்ளனர். அர்ஷத் பங்கு மார்க்கெட்டில் புகுந்து விளையாடினார். ஆனால், நம்மவர்களோ கல்லூரி, பள்ளி, பொதுவாகக் கல்வித்துறையில் புகுந்து விளையாடுகிறார்கள்.



கட்டடங்களே இல்லாத பொறி இயல் கல்லூரிகள், ஒரே சமயத்தில் 20, அல்லது 30 மருத்துவக் கல்லூரி கட்கு உத்தரவு. ஒரே சமயத்தில் நூற்றுக்கணக்கான பயிற்சிப் பள்ளி கட்கு ஆணை. இப்படி இந்தியாவில் உள்ள மாநிலங்கள் முழுதும் நடக்கிறது. இவை மூலம் வரும் டாக்டர்கள், பொறியியல் நிபு ணர்கள் பட்டம் வாங்கக் கல்லூரியில் சேர முன்பு அவர்கள் கொடுத்த பல இலட்சங்களை என்று திரும்பப் பெறுவதென்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். மருத்துவத் தேர்வுக்கு 12 லட்சம் கொடுத்து மருத்துவரான மாணவன் இதை எவ்வளவு சீக்கிரம் தன் னுடைய மருத்துவப் பணி மூலம் எடுக்க முடியும் என்பதிலேயே குறியாக இருக்கிறான்.

இது பற்றி நான் ஹைதராபாத் துக்கு ஒரு பேருரை ஆற்ற அங்குள்ள பல்கலைக்கழகத்துக்குச் சமீபத்தில் சென்றிருந்தபோது ஒரு வேடிக்கைக் கதையைக் கூறி னார்கள்.

ஒன்றுமே இல்லாமல் ஆரம்பிக் கப்பட்ட ஒரு மருத்துவப் பள்ளியில் படித்து பட்டத்துடன் வெளியேறிய ஒரு கண் மருத்துவர் ஆபரேஷன் செய்யும்போது வலது கண்ணுக்குப் பதில் இடது கண்ணை எடுத்து விட்டார். ஒருவருக்கு வலது கண் தெரியவில்லை - புரையோடி விட் டது. அது நீக்கப்பெற வேண்டும். நம் Capitation Doctor - அதற்குப் பதில் நன்றாகத் தெரியும் இடது கண்ணை எடுத்துவிட்டார். Operation Successful, Patient Collapsed என்பார்கள். அதுபோல் முழுப் பார்வையையும் இந்நோயாளி இழந்தார்.

இதற்கு யார் பொறுப்பாளி? அமெரிக்க நாடு என்றால் சட்டப்படி பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் அந்த டாக்டர் குருடருக்குக் கொடுக்க வேண்டும். ஆனால்

பொன்மொழிகள்

வயலில் எந்த விதையை விதைக் கின்றோமோ அதன் விளைவுதான் வீடு வந்துசேரும். கம்பை விதைத்து விட்டு கோதுமையை எதிர்பார்க்கக் கூடாது. கருவேல மரத்தை நட்டு விட்டு சந்தனமரத்தை எதிர்பார்க்க முடியாது. அதுபோல் நன்மைகளை வாழ்க்கையில் ஓயாமல் செய்தால் தான் நம்மையும் நன்மைகள் நாடி ஓடிவரும்; மாறாகத் தீமைகளைச் செய்தால் தீமைகளே நம்மை வந்தடையும்.

– வாரியார் உரையிலிருந்து.

படிப்பில் மட்டுமின்றி, நமது நாடு, நமது மொழி, நமது மதம் எல்லாவற்றின் மீதும் பற்றும் மரி யாதையும் கொள்வது அவசியம். இதுவே நமக்கு நம்பிக்கையையும் வளர்க்கும்.

– சத்திய சாயிபாபா.

எதையும் பதிலுக்கு விரும்பாமல், கொடுக்க வேண்டியிருப்பதை மற்ற வர்க்கும் கொடுங்கள். அது உங் களையே திரும்ப வந்தடையும். ஆனால் அதைப்பற்றி இப்போது சிந்திக்க வேண்டாம். கொடுக்கும் சக்தி உங்களிடம் உள்ளவரையில் கொடுங்கள். அத்துடன் விட்டு விடுங்கள். அது ஆயிரம் மடங் காகப் பெருகி உங்களிடமே மீளும்.

–விவேகானந்தர்.

சேற்றுமீன் சேற்றினுள் புதை யுண்டு கடந்தாலும் அம்மீனின் மீது சேறு படிவதில்லை. அதேபோல் மனிதன் உலகில் வாழ்ந்திருக்க வேண்டும். ஆனால் உலகப் பற் றினுள் அவன் தோய்ந்து விடக்கூடாது.

– ராமகிருஷ்ணர்.

பொருளற்ற சொற்களால் ஆக்கப்பட்ட கவிதைகள் ஆயிர மாயிருந்தாலும், பொருளுள்ள கவிதையின் ஒரே சொல் மேலானது.

–புத்தர்.

— ஆர். மகாதேவன்.

இங்கோ, அது குருடரின் தலைவிதி எனக் கூறிவிடுவோம்.

தனது பகுத்தறிவை நம்பாது தனது அறிவை வளர்க்காத சமு தாயம் இப்படித்தான் அல்லலுறும். உண்மை அறிவை நாடாது குறுக்கு வழிகளில் அறிவு மாதிரித் தெரியும் மாய மான்களைப் பெற்றவர்கள் இப்படித் தான் பணியாற்ற முடியும்.

இதைத்தான் இராஜாஜி சொன் னார், இதயத்துக்கு விடுமுறை அளிக்க முடியாது. அதேபோல்தான் இளைஞர் கல்வியும் என்று. இன்று இந்த இதயத்துக்கு விடுதலை நாம் அளித்து விட்ட மாதிரி தெரிகிறது. கல்வி இயந்திரம் என்னும் இதயம் இன்று விடுமுறை எடுத்துக் கொண் டது போல் தெரிகிறது.

ஏனெனில் கல்வியே இல்லாது இன்று பட்டங்கள் பெறும் கூத்து நடைபெற்று வருகின்றன. 500 ரூபாய்க்குப் பட்டங்கள் கொடுக்கும் நிலையங்கள் தில்லியில் தெருவுக்கு ஒன்று இருக்கின்றன. பூஷண விருதுகள் பலருக்கு அளிக்கப்படு கின்றன. பல பெரிய மனிதர்கள் லட்சாதிபதிகள், கோடிசுவரர்கள் இவ்விருதுகளைப் பெறுகிறார்கள். கொடுப்பதைக் கொடுத்துப் பெறு வதை இவர்கள் பெறுகிறார்கள். இப்பூஷண விருதுகள் ஒரு தொழிலாளிக்கோ, ஓர் ஏழை ஆசிரியருக்கோ இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. பல இலட்சங்களுக்கு அதிபதிகளே, இந்திய பூஷணங்கள் என்று ஆகிவிட்டால் எவர் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பார்கள்?

இளைஞர்கள் கல்வி கற்க மாட்டார்கள். பி.எச்.டி.க்கு ஒரு விலை என்றால் அதைக் கொடுக் கவே முயற்சிப்பார்கள். இளைஞர் கல்வி தானாக நின்றுவிடும். இதயம் நின்ற கதைதான் மறுபடியும். தீர்க்கதரிசி இராஜாஜி சொன்ன நிலைதான் வரும்.

மார்ட்டின் லூதர் போப் லியோ (POPE LEO X) என்பாரையே எதிர்த்தார். ஏன்? அந்தப் போப் பணம் பண்ண ஒரு புதிய முறையைக் கண்டுபிடித்தார். பாவ மன்னிப்புப் பத்திரங்கள் (SALE OF INDULGENCES) என்னும் புனித முத்திரைப் பட்டயங்கள் போப்பாண்டவர் கையெழுத்தில் அடிக்கப்பட்டு விற்பனைக்கு உலக முழுதும் வந்தன. கொலையா, பாவமன்னிப்புப் பத்திரம் 50,000 ரூபாய், கற்பழிப்பா 20,000 ரூபாய், சகோதரனை வஞ்சிப்பதா 20,000 ரூபாய், பக்கத்து வீட்டானுக்குக் குழி பறித்ததா 20,000 ரூபாய், காவல்துறை பொய் கேசு போட்டுத் துன்புறுத்தியதா, அரசுத்துறை ஊழலா, 25,000 ரூபாய் – இப்படி ஏதோ ஒரு விலை ஒவ்வொரு பத்திரத்துக்கும் போப்பாண்டவர் பெயரில் வைக்கப்பட்டது. எவ்வளவு பணம் அன்று வாங்கினார்கள் என்று தெரியவில்லை. ஆனால் கோடிக் கணக்கில் வாங்கியதைச் சரித்திரம் கூறுகிறது. நாம் போய் மண்டியிட்டு, "ஐயா என் சகோதரனின் மனைவியை நான் கெடுத்து விட்டேன். மன்னிப்புத் தேவை" என்கிறோம். ஆண்டவன் பெயரில் பல ஆயிரங்கள் பெறப்பட்டு மன்னிப்புப்பத்திரம் அளிக்கப்படும்.

கொலைக்கான பாவமன்னிப்புப் பத்திரம் ஒரு நாலு, நான் வாங்கி வைத்துக் கொண்டால் 4 பேரைக் கொல்லலாம், ஆண்டவன் பாவ மன்னிப்புதான் முன்னாலேயே என்னிடம் இருக்கிறதே? என்ன கவலை? இப்படி அந்தக் காலத்திலேயே கடவுளின் பேரால் பெரும் பணம் பண்ணப்பட்டதை எதிர்த்துக் கொதித்தெழுந்து பிராடஸ்டன்ட் மதத்தை ஆரம்பிக்கக் காரணமாக இருந்தவர் ஜெர்மானிய மார்டின் லூதர் ஒப்பற்றவர். அதிசயமானவர்.

மதத்தைப் பணமாக்குவதா என்று குமுறினார் இவர். எரிமலையாக வெடித்தார் அன்று. உடனடியாக இந்தப் பாவமன்னிப்புச் சீட்டுகள் ஒடுக்கப்பட்டன. உலகம் தப்பியது. உலகத்துக்காக மக்களுக்குப் பாவ மன்னிப்புப் பெற உத்தமர் ஏசுபிரான் சிலுவையின் மரித்த புனி காக்கப்பட்டது.

பின்னால் வந்த போப்பான வர்கள் மிகச்சிறந்த புனிதர்கள விளங்கினார்கள்.

அதேபோல் இன்று இந்தி முழுதும் கல்வியைப் பணமாக்கு பெரும் பணமாக்கும் நிலை வந் விட்டது. எங்கும் எல்.கே.ஜி. மு பி.எச்.டி. வரை கல்வித் துல காசுத்துறை ஆகிவிட்டது எ கிறார்கள் கல்வியாளர்.

மூதறிஞர் இராஜாஜி கூறியப இளைஞர் கல்வி முடங்கி நாட்டின் இதயமே, ஸ்தம்பிக்கு நிலை உருவாகிறது. இதய துடிப்புக்கு நாம் விடுமுை விட்டுவிடும் நிலை வந்தா விட்டது.


கல்வியில் ஒரு மார்டின் லூத இதைத் தடுக்கத் தோன்றுவாரா?

நாம் பிரார்த்திப்போம், வேறுவ தெரியாததால்?



நெஞ்சோடு கொஞ்சும் சிங்காரத்தமிழே
என்னோடு பண் பாட வா
நினைவோடு நின்று உயிரோடு கலந்து
எந்நாளும் உறவாட வா

நாவினிற்கு ஒரு நல்ல சுவை
காதினிற்கு ஒரு கான மழை
வாழ்வினிற்கு ஒரு பூஞ்சோலை
வளத்தினிற்கு நீ மும்மாரி
உந்தன் சுவைதான் உலகில் பெரிது
உந்தன் நயம்தான் உண்மை கதிரே
கண்டவுடன் கேட்டவுடன் தித்தித்திட
தன் நிலையில் யாவரையும் முத்தமிட
என் ஆசை மங்கை சுவை வற்றாத த
தேனாக நீ பாய்ந்து வருவாய்
உன் சுவையோடு கூடிப் புது ராகத்தே
நான் பாட நீ ஓடி வருவாய்
கண்ணே உன்னைச் சுவைக்காத யாவ
நீரே இல்லா ஆறே ஆவர்
மண்ணில் மனிதராய்ப் பிறப்பின் ஒரு
தமிழைச்சுவைத்தல் பிறப்பின் பய



திரும்பத் திரும்ப முயன்றும் அமைதிகொள்ள முடிய வில்லை. அழுகை வற்றி விட்டது. பொட்டுக் கண்ணீர்கூட இல்லை. அறை முழுதும் வெறும் பாலைவனமாய் பொரிந்து கிடப்பதுபோல தோற்றம். விரிந்த சுவர்களில் வேறேதும் தெரியவில்லை. 'நான் போய்விட்டேன். இனி என்ன செய்யப் போகிறாய்?' என்ற கேள்வியே அந்தச் சுவரெங்கும் ஆளளவு உயரத்திற்கு எழுதப் பட்டிருப்பது போலத் தோன்றிற்று.

இப்படிச் செய்ய அவனால் எப்படி முடிந்தது? வயிறே பற்றியெரிகிறது? இந்த வயிற்றில்தானே அவனைச் சுமந்தேன். வயிற்றில் கருவான நாளிலிருந்து எவ்வளவு கவனம். எத்தனை கனவுகள், கண்காணிப்பு, வளர்ந்த ஒவ்வொரு கணமும் அவனைக் கண்ணுக்குள் இமையாகக் காத்தது. சின்ன அழுகைக்கும் மனம் நடுங்கி உறக்கமிழந்து கண்ணீராய்க் கரைந்து மடியிலேயே அவனை வைத்திருந்தது. பதினெட்டு வயது வரை கைக் குழந்தையாகவே போற்றி வளர்த்தது. நேற்றுவரை இதே விதமாகத்தான் அவனை வளர்த்தேன்.

எழுந்து அவனது அறைக்குள் சென்றேன். அமைதியாயிருந்தது. அழகாய், ஒழுங்காய் இருந்தது. அவன் விரும்பியபடியேதான் அந்த அறையின் ஒவ்வொரு பொருளையும் வாங்கிக் கொடுத்தேன். ஐந்து வயதிலிருந்து அவனுக்குத் தனி அறை. எதையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென்று நான் கற்றுக் கொடுத்தேன். டயரி எழுதக்கூட நானே பழக்கப்படுத்தினேன். மனதில் தோன்றுகிற எதையும் எழுதிவை என்று சொன்னேன். ஆனால் அவனாகத் தனது டயரியைக் காட்டினாலொழிய ஒருநாளும் நான் அதைப் படிக்கவோ பார்க்கவோ முயன்றதில்லை. அவனுக்கு அழகான கையெழுத்து. மணி மணியான, அடித்தல் திருத்தலில்லாத, கண்களில் ஒற்றிக் கொள்ளச் சொல்கிற எழுத்து. கடைசியாக எழுதிய டயரியை மட்டும் அவன் எடுத்துச் சென்று விட்டான். மற்றவை யாவும் அப்படியே இருக்கின்றன. எதற்காக அதை மட்டும் எடுத்துச் சென்றான்? தொடர்ந்து எழுதத்தானே! என்ன எழுதுவான் இனி? இவ்வளவு காலமும் எழுதியவற்றை, அந்த நினைவுகளை வெகுசுலபமாக மனத்திலிருந்து தூக்கி எறிந்து விட முடியுமா? இரண்டு நாட்கள் பிரிந்திருக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பம் நேர்ந்தபோது - அதுவும் பதினாறாவது வயதில் - எவ்வளவு சுருங்கிப்போய் நின்றான் அவன்? பேச முடியாமல் கண்கள் கலங்க விம்மலோடு நின்றவனைத் தேற்றுவதற்கு எவ்வளவு பிரயத்தனப்பட்டேன். அதை நினைத்து எவ்வளவு இறுமாப்பும் பெருமையும் அடைந்திருக்கிறேன். பிறரிடம் சொல்லிக் கர்வப்பட்டிருக்கிறேன்.

அவனது கண்களைத் துடைத்து ஆறுதல் சொன்னபோது என்னைப் பிரிந்திருப்பதற்காக இன்னும் அவன் அழ வேண்டும், என்னைக் கெஞ்சி, 'நின்று விடம்மா' என்று இரக்க வேண்டுமென்றுகூட என் மனம் நினைத்தது. அப்படி அவன் செய்வதில் நெஞ்சு தளதளத்; சந்தோஷம் குபுகுபுவென றோடும் துள்ளருவியாய் மனத்த னுள் நிறைந்தது. அவன் அட படி நடந்து கொண்டதை எவ வளவு அற்புதமான நிகழ்வாய மனச்சிமிழினுள் பூப்போலட் பத்திரமாய் வைத்திருந்தேன் ஆனால் இரண்டு வருஷத்திற் குள்ளா அந்த வார்த்தைகள மாறிப் போயின? பொய்யா கின? வேஷங்கலைந்து பாசாங காய் நின்றன?

— வெளியே யாரோ வருட சத்தம்.

கோபால் வந்தான்.

"டிக்கட் எடுத்திட்டேம்மா ஒர் 'அவரி'ல் புறப்பட்டிடணும்".

"சரிப்பா..." என்றேன்.

"சாப்பிடுங்க. இப்படியே இருந்தா எப்படி?" என்றான்.

"பசிக்கல்ல... நீ சாப்பிட்டிடு.."

"வேணாம்மா."

நான் வெறுமையாக அவ னைப்பார்த்தேன்.

"கண்ணன் ரயில்ல ஏறி னதைப் பார்த்ததா போர்ட்டர் ராமுவும் சொல்றாம்மா.."

"கையில என்ன வைச் சிருந்தான்னு பார்த்தானாமா?"

"சூட்கேஸ் இருந்திச்சாம்.."

"வேறே?"

"அதுமட்டுந்தான் என்றான்".

"வேறென்ன சொன்னான்?"

"இவ்வளவு காலத்தில கண் ணன் அவன் அம்மாவை விட்டுத் தனியாப் போனது இந்தத் தடவைதான். எனக்கே அதிசயமாயிருந்திச்சு என் றான்".

எனது கண்கள் நொந்தன மனம் புண்ணாய் வலித்தது உடல் அணுஅணுவாகத்

செ. யோகநாதன்

அமுதசுரபி 25 ஆண்டுகளுக்கு முன்பு...

1967 – டிசம்பர்

1967 – டிசம்பர் – அமுத
பி அட்டைப் படமே வெகு
றப்பாய் அமைந்துள்ளது.
ன்பு மனைவி ஆசையுடன்
ள்ளித்தரும் பழைய கஞ்
யைத் தேவாமிர்தமாகக்
கயில் வாங்கியுள்ள உழவ
ன் முகத்தில்தான் எவ்வளவு
னந்தம். உலகமே நம் காலடி
ல் என்று, எக்கவலையு
ன்றி, உள்ளப் பூரிப்போடு
த்தம்பதியர் அமர்ந்திருக்கும்
ாட்சியில் எளிமையைத்தான்
ாண்கிறோமே தவிர, ஏழ்
மையை அல்ல.

'யார் தேசியவாதி' தலைப்பில் வெளியாகியுள்ள செய்தியில் டாக்டர். விசுவேசுவரய்யா அவர்கள் தேசியவாதிக்காக அளித்துள்ள விளக்கம் இன்றைய நமது நாட்டுச் சூழலில் அனைவரும், முக்கியமாக நமது அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டிய ஒன்று. "தேசியவாதி தேசத்துக்காக எல்லாம் என்ற தேசபக்தி கொண்டவன். அரசியல்வாதி தனது கொள்கை, தனது திட்டம், தனது கட்சி முதலில், பிறகுதான் எல்லாம் என்னும் சுயநல நோக்கங்கள் கொண்ட குறுகிய வரையறைக்குள் செயல்படுகிறான்" என்கிறார். அவரது கூற்று நூற்றுக்கு நூறு உண்மையாயிருப்பதை நாம் இன்று கண்கூடாகக் காண்கிறோமல்லவா?

புதுவைப் பெரியார் திருமதி. கமலா சர்மா அவர்களைப் பற்றிய செய்தி மிகவும் பயனுள்ளது. தேசப்பிதா காந்தியடிகளுடன் வார்தாவிலும், ராஜ்காட்டிலும் சிறுவயதிலேயே அவர் பணிபுரிந்திருப்பது அவரது தொண்டு உள்ளத்தைக் காட்டுகிறது. பள்ளியில் படிப்பு மிகக் குறைவாக இருந்தும், அம்மா, தெலுங்கு, தாய் மொழியான கன்னடம், தமிழ், மராட்டி, குஜராத்தி, ஹிந்தி போன்ற பல பாஷைகளில் புலமை பெற்றிருப்பது "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ" என்பதையே காட்டுகிறது.

நாய்ந்தது. பலமே முற்றிலும்
ணாமற் போனதுபோல
ளர்ச்சி பற்றிக் கொண்டது.
ண்ணன் அச்சுப் பிசகாமல்
வன் அம்மாவைப்போலச்
ரிப்பு, நடை, உடல்வாகு,
நள்முடி, குணம். அம்மா
வப் போலவேதான் பிரியங்
ளும். இட்லி பிடிக்கும். மாம்
றம் ருசிக்கும். ஜில்லென்ற
ண்ணீராய்க் குடிப்பார்கள்.
லங்கிய நீலவானம் பிடித்த
றம். அம்மாவும் பிள்ளையுமா
வர்கள்? தோழனும், தோழி
ம். இப்படி எங்களிருவரையும்
ற்றி எத்தனை புகழுரைகள்
ன்னாலும் பின்னாலும்.
ப்போதெல்லாம் எவ்வளவு
ரகாசமும் புன்னகையும்
வன் முகத்திலே வசீகர
ாய்த் துலங்கும். பளீரென்று
ண்கள் மின்னிட என்னைப்
ார்ப்பான். அந்தப் பார்வை
ட்டும்தான் அவனது அப்பா
க்குச் சொந்தமானதுபோல
னக்குத் தோன்றும். மனம்
துகணமே முள்ளில் தவிக்கும்.
னம் என்னையறியாது

வலையாய் என்மீது படரும். அவன் முன்னே நான் என்றும் அழுததில்லை. அவனது அப்பாவை அவனுக்கு நினைவு படுத்த நான் என்றும் விரும்பியதில்லை. அதனால் என் அழுகை அவனால் அறியப் படாத ஒன்றாயிற்று. அவனது ஏழு வயதில் கார் விபத்தில் அவனது அப்பா இறந்து போனார். நான் திக்குத் தடுமாறி நின்றேன். எனக்கு வாழ்க்கையின் ஒரே பிடிமானமான கண்ணன் மாறிப் போனான். அப்பாவை இழந்த துயரத்தை மகனில் வைத்த மூர்க்கமான அன்பால் ஆற்றிக் கொண்டேன். அன்பும் ஒரு சுயநலந்தான். அவன் ஒருநாள் கூட அப்பாவைப் பற்றிக் கேட்கவில்லையே என்பதும் எனக்குச் சந்தோஷம் தருகிற ஒரு பெருமையாகவே நேற்றுவரை இருந்தது.

சிலவேளை இப்படியும் இருக்குமோ என்று அடிக்கடி நான் நினைத்துக் கொள்ளுவேன். அவனது அப்பா இறந்து போனதை நான் எனக்குள்ளேயே அழுது, வேதனைப்பட்டு ஆறதலடைவது போல அவனும் செய்கிறானோ? ஆனால் அப்படி நினைத்தால் ஏனோ எரிச்சல் வரும். அந்த எண்ணத்தை மனத்திலிருந்தே துடைத்தெறியத் தோன்றும். எனக்குத் தெரியாமல் அவனது மனத்திலே சிறு யோசனைகூட இருக்கக் கூடாதென்று நினைப்பேன். அப்படித்தான் அவன் இருக்கவேண்டுமென்பது எனது ஆசை. அவனை அந்த விதமாகவே நான் வளர்த்தேன்.

"கண்ணா.."

என் தயக்கமான குரலைக் கேட்டால் அவன் பரிவோடு என்னருகே வருவான்... நான் அவனை நேரே பார்க்க மாட்டேன். அதுவும் பளீரென்று பளபளக்கிற கண்களைப் பார்க்க மாட்டேன்.

"நான் ஒன்று கேட்பேன். உண்மை சொல்லவேணும்?"

"கேளுங்க..."

பக்தர்களுக்குப் பரவச மூட்டும் வண்ணம் "சப்த மங்கைத் தலங்கள்" பற்றி விவரிக்கப்பட்டுள்ளன. பிடாரி, காளி போன்ற கிராம தேவதை களுடைய கோயில்களுக்கு வெளியே, இரு ஆண் சிலை களுக்கிடையே காணப்படும் ஏழு பெண் சிலைகளே சப்த மாதர் என்றும், அவர்கள் எழுந் தருளியுள்ள தலங்கள், திருச் சக்கரப்பள்ளி, அரிமங்கை, தாழைமங்கை, புள்ளமங்கை, சூலமங்கை, நத்திமங்கை, பசுபதி மங்கை எனவும் விவ ரிக்கப்பட்டுள்ளன.

திருக்குறளைப் பற்றி ஆரா யும் அமெரிக்கப் பேராசிரிய ரான டாக்கர் யூஜின் இர்ஷிக் பற்றிய ஆச்சரியமான செய்தி யும் உண்டு. தென் இந்திய வரலாற்றில் அவர் கொண் டுள்ள ஈடுபாட்டால் அவரது மாணவர்கள் பலர் ஆராய்ச் சிக்காக இந்தியா வருகின் றனர் என்பது விந்தையான, மகிழ்ச்சியான செய்தியல்லவா?

நான் ரசித்த நாவலில் 'தவமோ தத்துவமோ' என்ற திரு. கோவி. மணிசேகரனின் நாவல் அலசல் 'கற்பு' பற்றி சிறந்த கட்டுரையாக அமைந் துள்ளது. திரைப்படங்களின் தாக்கம் எந்த அளவு சமு தாயத்தைப் பாதிக்கின்றது என் பதைத் தெளிவாகக் காட்டி யுள்ளனர்.

வளரும் இசைப் புலவர்கள் வரிசையில் சிக்கல் பாஸ்கரன் (வயலின்) திருமதி. ராஜலட்சுமி சந்தானம் ஆகியோர் போற்றி பாராட்டப்பட்டுள்ளது. அமுத சுரபி இசைத் தமிழுக்குச் செய்யும் சிறந்த தொண்டாக உள்ளது.

'தாய் மொழிப் பற்று' பற்றி மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் கூறும்போது, "தமிழ் படிக்காதவர்கள், தமிழ் நாட் டில் வசிக்க யோக்கியர்கள் அல்லர்' என்கிறார். இக்கூற்று தாய்மொழி மேல் அவருக் கிருந்த பற்றைத் தெளிவாகக் காட்டுகிறது.

கந்தர் அநுபூதியில் உரை யாசிரியர் ஸ்ரீ அம்ருதானந்த யோகி நாம் ஜீவன்முக்தி அடை வதற்கான அறவழியைக் காட்டு கிறார்.

மொத்தத்தில் டிசம்பர் அமுதசுரபி முக்கனிகளின் கலவையில் அமைந்த திகட்டாத பழச்சாறாய் உள்ளது.

— *திலகவதி சீனிவாசன்*

"இந்த நெஞ்சில அம்மாவுக் குத் தெரியாம ஏதாச்சும் வைச் சிருக்கியா?"

"என்னம்மா கேட்கிறே?"

"எந்த நேரமானாலும் சரி உன் மனசில என்ன இருக் குன்னு அம்மாவுக்கு நீ சொல்லு வியா?"

அவன் குழந்தையாகிச் சிரிப்பான்.

"உனக்குத் தெரியாம என் மனசில ஒண்ணுமேயில்லை. ப்ராமிஸ்ம்மா" என்பான்.

"என்னம்மா நீங்க சின்னப் பசங்க மாதிரி ஆயிட்டீங்க" என்று சிரித்தபடியே என்னிடம் கேட்பான். என்னைச் சிறுமி யைப் போல ஏளனமாகப் பார்ப் பான். பின்னர்தான் எனக்கு எனது சிறுபிள்ளைத்தனம் தெரியும். ஆனாலும் அவன் பதிலிலோ எனது மனம் உற் சாகங்கொண்டு புரளும். பேசா மலே உட்கார்ந்து அந்தச் சந் தோஷத்தில் இருக்கிற என்னை, அவன் விநோதமாகப் பார்ப் பான். ஒன்றும் பேசாமல் மௌனமாகப் போய்விடுவான்.

ஏழு வருஷகால தாம்பத்தி யத்தில் என் வாழ்வின் பாதி யாகிய கணவரிடம்கூட நான் இவ்வளவு உரிமைகளை எடுத்துக் கொண்டதில்லை. அவர் தத்துவத் துறைப் புரபஸர். எதற்கும் புன்னகை. அர்த்தமாயும், அர்த்தமற்றும் தெரிகிற புன்னகை. சேர்ந் திருக்கிற போதும் தனி யாளாய்த் தெரிகிற சுபாவம். கண்ணனை வளர்ப்பதில்தான் எங்கள் இருவரிடையேயும் சச்சரவுகள் வரும். நான் எதி லும் ஒழுங்கையும், டிஸிப்ளி னையும் விரும்புகிறவள். 'பங்சு வாலிடி' எனக்கு முக்கியம். கான்வென்ட் படிப்பும், என் அப்பாவின் வளர்ப்பும் என்னை உருவாக்கியவை.

"மாலு, குழந்தையை அதன் இயல்போட வளரவிடு. பெரிய வங்க கட்டுப்பாடெல்லாம் குழந்தைக்கு வேணாம். சூரிய வெளிச்சத்தில தன்னிஷ்டமா வளர்ற செடிபோலக் குழந்தை வளரணும்."

"நான் அப்படியா வளர்ந் தேன்?"

"நம்ம குழந்தை நான் சொல்ற மாதிரி வளரணும்.."

"எனக்கு அந்த வளர்ப்பில நம்பிக்கையில்லை.."

"அப்போ?"


"என் இஷ்டப்படி வளர்ப் பேன்.."

அவர் மௌனமாகிவிடுவார். லேசாக இருமுவார். வெளியே விரிந்திருக்கிற வானத்தைப் பார்த்தபடியே நெற்றியைச் சுருக்கிக் கொள்ளுவார்.

சென்ட்ரல் ரயில்வே ஸ்டே ஷனில் இறங்கிய கண்ணனும், ரகுராமனும் அங்கு கடலாய் வழிந்த ஜனங்களைக் கண்டதும் பிரமித்துப் போய் விட்டனர்.

"ரகு எங்கேடா போறோம்?" என்றான் கண்ணன்.

"ஒண்ணுக்கும் பயப்படாத. என் பிரண்ட் தேவனின் அட்ரஸ் இருக்குது. அவன்கிட்ட போயிட லாம்.."



"சரி. முதல்ல குளிக்கணும். உடம்பு நசநசன்னுது.."

"அதெல்லாம் அங்கே போய்த்தான்.."

"காபி?"

"இன்னும் போனா அம்மா எங்கேன்னு கேட்பே?"

சிரிப்போடு சொன்னான் ரகு. சட்டென்று அவனது நெஞ்சில் என்னவோ உதைத்தது.

கண்ணனின் முகம் சுருங்கிற்று. அம்மா வாத்சல்யம் பொங்க அவனைத் தொட்டாள். கண்ணனுக்குத் தொண்டை அடைத்தது. தலை லேசாக வலித்தது.

"என்னடா ஆச்சு உனக்கு?" ரகு அவனது தோளை வெடுக்கென்று உலுப்பினான்.

"இரவு முழுதும், நாம ஜெயில்ல இருந்து வெளியே வந்திட்டோண்டா என்று எனக்கு தைரியம் சொன்னே. இப்போ உனக்கு என்ன ஆச்சு... வீட்டு யோசனையா?"

மௌனமாக அவனைப் பார்த்தான் கண்ணன்.

"சொல்லு.."

"பயமாயிருக்குடா.."

"என்ன பயம்?"

"தெரியல்ல.."

"நீ சந்தோஷமாயில்ல.."

அழுகிறாற்போல ரகுவைப் பார்த்தான் கண்ணன்.

"அம்மா என்னை சுதந்திரமே இல்லாம வளர்த்தாங்க. என் இஷ்டத்துக்கு எதையும் விடமாட்டேன்னாங்க. வீடே எனக்குப் பிடிக்கல்லேன்னியே..."

"நிஜந்தான்.."

"அப்புறம்..?"

"சரிவுடு.."

தேவன் வீட்டு பாத்ருமில் குளித்துக்கொண்டு நின்ற போது, அம்மா முதுகிற்கு சோப்புப் போட்டுவிடுவது நினைவிலே வந்தது. குளித்து முடிந்ததும், "டவலடா?" என்றான் கண்ணன்.

"கட்டியிருக்கிறதைப் பிழிஞ்சு துடை..."

"போடா.." என்றான் கண்ணன் வெட்கமாக.

மறுகணம் ரகுராமன் இடுப்பில் கட்டியிருந்த டவலை அவிழ்த்துப் பிழிந்தான்.

கண்ணன் கண்களை மூடிக் கொண்டான். ரகுராமன் குலுங்கிச் குலுங்கிச் சிரித்தான். சிரிப்பை நிறுத்திய ரகுராமன், "ஆமா... மஞ்சுளாவுக்கு லெட்டர் எழுதப் போறியா?" என்றான் கண்ணனைப் பார்த்து.

கண்ணனின் முகம் மாறிற்று.

"எப்படீடா? அவங்க அப்பா கொன்னுடுவாங்க..."

"அப்போ உன் லவ்வு?"

"முதல்ல வேலை தேடணும்.. அப்புறம்?"

"உங்க அப்பா புரபஸர். நீ என்ன வேலை பார்ப்பே?"

நெற்றியில் அடித்துக் கொண்டான் கண்ணன்.

படுத்திருந்தபடியே அம்மாவைப்பற்றி நினைத்தான் கண்ணன். வீட்டில் இந்த நேரத்தில் இப்படிப் படுத்திருக்க அம்மா விடமாட்டாள். பகல் தூக்கம் வேண்டாம் என்பாள். அசதியாய் இருந்தால்கூட ஐந்து மணிக்கே தூக்கத்திலிருந்து எழுந்துவிட வேண்டும். இல்லையென்றால், "என்ன ராஜா எந்திரு" என்ற வார்த்தைகளாலேயே அவனைத் தட்டியெழுப்புவாள். ஒவ்வொரு நாளும் குளித்தேயாக வேண்டும். உணவு அட்டவணைப் படிதான் சாப்பிட வேண்டும்... "எதிலும் ஒரு திட்டம் வேண்டும்" என்று அடிக்கடி கூறுவாள் அவள். தலையணையைக் காலுக்குள் போட்டபடி, "திட்டமும் மண்ணாங்கட்டியும்" என்றான் கசப்பு நிறைந்த குரலிலே கண்ணன். அந்த நேரத்திலே மஞ்சுளா நினைவிலே முகங் காட்டினாள்.

புகை புகையாய்ச் சிதறிய வெளிக்காட்சி பின்னே போக, ரயில் ஓடிக்கொண்டிருந்தது. எனக்குத் தூக்கமே வரவில்லை. ஒருவரியில், 'என்னைத் தேட வேண்டாம். நான் எங்கோ போகிறேன்' என்று எழுதி வைத்துவிட்டு கண்ணன் ரயில் ஏறிவிட்டான். அந்த எழுத்து தடுமாறியிருந்தது. பலமுறை எழுதிக் கசக்கி எறிந்திருந்தான். மொட்டைக் கடிதம். இது எப்படி இவனால் முடிந்தது? ஒரு குறைகூட இவனுக்கு நான் வைத்ததில்லை. கேட்காமலே எல்லாம் செய்தேன்.

நான்கு தினங்களுக்கு முன் என்னிடம் தயங்கித் தயங்கி தனது டயரியை நீட்டினான். "என்னிடம் ஒரு ரகசியம் உண்டு. அதை இதில் எழுதியுள்ளேன்" என்றான். அவனது குழைவு எனக்கு விநோதமாயிருந்தது. டயரியில் மடித்து வைத்திருந்த பக்கத்தைப்



அனுமதி இல்லை

மீனவன்

தென்றல் நங்கையே
தேன்தமிழ்ப் பெண்ணே
எங்கள் இருவர்
இடையில் நுழைய
முயன்று மோதும்
முட்டாள் பெண்ணே
கால தேவனின்
கற்பனை மாளிகை
அலைந்து திரிந்து
அமுதம் சிந்தும்
இந்தக் கலையை
இன்பச் சிலையை
கண்ட பின்யான்
காதல் வீதியில்
இதயத் தேருலா
ஏகும் வேளையில்
பூச்சர மேனியின்
பொன்னொளி தழுவி
மன்மதன் மாளிகை
மண்டப மேடையில்
ஆடை என அவள்
அழகு மேனியை
எடுத்து வளைத்தொரு
இன்ப மோகனம்
பாடும் வேளையில்
பார்த்திட உனக்கு
அனுமதி இல்லை
அருகில் வராதே.

புரட்டினேன். முதல் வரியே என்னை அதிர்ச்சியடைய வைத்தது. நெற்றிப் பொட்டில் அறைந்தது. என் உடல் நடுங்கி வேர்த்தது... "நான் மஞ்சுளாவைக் காதலிக்கிறேன். படித்து முடிந்ததும் அம்மாவின் சம்மதத்துடன் அவளை..."

என்னால் தொடர்ந்து படிக்க முடியவில்லை. டயரியை வீசி எறிந்தேன். என்னை இழந்தேன். சத்தமிட்டேன். வாய்க்கு வந்த எல்லாவற்றையும் பேசினேன். அவனை வளர்க்கப் பட்ட பாடுகளைக் கூறினேன். பைத்தியக்காரியைப் போல அவனது மேசையிலிருந்த புத்தகங்களை விசிறியடித்தேன். நோட்டுப் புத்தகங்களைக் கிழித்து வீசினேன். அந்த அறையைத் தலைகீழாக்கினேன்.

அவன் ஸ்தம்பித்துப் போய் நின்றான்.

"சொல்லு... உனக்கு என்ன குறை வைச்சேன்? சொல்லு. நான் உனக்கு என்ன செய்யல்லை?"

அவனை உலுப்பினேன்.

அவனது முகம் மாறிப் போயிருந்தது. அது, இதுவரை அவனிடம் நான் பார்க்காத முகம். இறுகிப்போன முகம். மனதினை என்னவோ செய்கிற முகம். என்னோடு சச்சர விடுகையில் தோன்றுகிற விரிந்த வானவெளியைப் பார்த்திருக்கிற அவனது தகப்பனின் முகம்.

"சொல்லு.."

நான் கத்தினேன். அவன் ஒன்றும் பேசவில்லை. கண் கலங்கவில்லை. சட்டென்று வெளியே போனான். அவன் போனபின் நான் விம்மி விம்மி அழத்தொடங்கினேன்.

இப்போதும் எனக்கு அழ வேண்டும் போல தோன்றிற்று.

"அம்மா பால் சாப்பிடுங்க.." என்றான் கோபாலன்.

"சரி.." என்றேன்.

கோபாலன் தந்த பாலை வாங்கியபோது, ரயில் சட்டென்று நின்றது. திடீரென்று நின்றதால் உடல் குலுங்கிற்று. அதிர்ந்தேன்.

"ஸ்டேஷன் இன்னும் வரலியே?" என்றான் கோபாலன்.

"கோபாலா, அவன் பிரண்ட் வீட்ல கண்ணன் இருப்பானா?" என்றேன் நான் திடீரென்று பின்னர், "கோபாலா, பத்து வருஷமா எங்க வீட்ல நீ வேலை பார்க்கிறே. நீயே சொல்லு எம் புள்ளைக்கு நான் ஏதாவது குறை வைச்சிருப்பேனா?" என்று கோபாலனைப் பார்த்துக் கேட்டேன்.

"அப்படிச் சொல்றவங்க வாயே அழுகிப் போயிடும்.." என்றான் கோபாலன் வெறுப்பான குரலிலே.

"எதுக்கு ரயில் நிக்குது?" என்றேன் நான். என் நெஞ்சு லேசாய் வலித்துக் கொண்டிருந்தது. பாலை மெல்ல உறிஞ்சிக் குடித்தேன்.

"பதினெட்டு வயசுப் பையன். ரெயில்ல விழுந்திட்டான். யார் பெற்றதோ?"

என்னைத் தாண்டிப் போன குரல் எனது தலையில் கடப்பாரையாய் அமுங்கி, நெஞ்சில் நின்றது. மின்னலாய், கண்ணனின் அப்பா விபத்தில் சிக்கிச் சிதைந்துபோய் வீட்டிற்குப் பிணமாய் வந்தது மூளையில் குத்திற்று. பளீரென்று என் உடலின் மேல் பாறாங்கற்கள் உருண்டு மூடின. மூச்சு அமுந்திற்று. மாரடைத்து என்னைக் கசக்கிப் பிழிந்தது. நான் லேசாவதை உணர்ந்தேன். என் கண்ணனை அழைக்க வாயைத் திறந்தேன். முடியவில்லை.

மாலதியைப் பார்த்துப் பயந்த கோபாலன் அவளது மூக்கில் உள்ளங்கையை வைத்துப் பார்த்தான். பின்னர் கைகள் பதற, "அம்மா... போயிட்டீங்களா.." என்று அலறியபடி தலை தலையாய் அடித்துக் கொண்டான். அப்போது ரயில் மெதுவாகப் புறப்பட்டது.

அந்த நொடி

"அப்படிச்செஞ்சுடலாம்னு பார்க்கிறேன் தண்டு. நீலாவுக்கு என்னைப் பண்ணிக் கொண்டு என்ன சுகம்? சொல்லு".

அண்ணனைத் தட்டிக் கொடுத்தான்.

"தைரியம் வர இரண்டு வருஷம் ஆயிருக்கு. ஐடியா பிரமாதம். எங்கேருந்து பிடிச்சே? ஆபீசிலே யாரானும் – சொல்லுவியே ரங்கசாமின்னு டெஸ்பாட்ச் கிளார்க் – சொல்லித் தந்தானா?"

"ஊஹும். நானாக யோசனை பண்ணினதுதான். ஒரு இங்கிலீஷ் நாவல் படிச்சிட்டிருந்தேன். ஒரு புதுப் பெண்டாட்டி ரொம்பப் பயந்துக்கறா. இவன் என்ன பண்றான்? திருடனாட்டம் வேஷம் போட்டுண்டு அவளைக் கற்பழிச்சிடறான் – ரொம்ப நல்ல கதை".

தண்டு சிரித்தான். "சில சமயத்தில் கதைகளால வாழ்க்கைக்கு உபயோகம்கூட இருக்கு..." ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்.

"இன்னைக்கு ராத்திரிதானே பண்ணப்போறே?"

"ஆமாண்டா. ஆனாலும் அம்மாவை நினைச்சா பயமாயிருக்கு".

தண்டு பீடியைக் காலிலே போட்டுத்தேய்த்தான்.

"அதானே பார்த்தேன். எப்படிடாப்பா மாறினேன்னு ஆச்சரியப்பட்டேன். நீ பழைய கருப்பன், கருப்பன்தான். ரெண்டு வருஷம்டா. உன் பெண்டாட்டியை – அந்த வாயில்லாப் பூச்சியை நினைச்சுப் பாரு. ஒரே ஒரு நாள் நீ சினிமாவுக்குக் கூட்டிண்டு போயிருக்கியா? அம்மா தினமும் அவளைப் பூஜை ரூம்லே ஏன் படுத்துக்கச் சொல்றா? அம்மா ஒரு பொறாமைப் பிண்டம்! சின்ன வயசுலே மாமியார்கிட்டே மாட்டிண்டு எட்டு வருஷம் வாழாவெட்டியா இருந்தாளோல்லியோ? இப்போது மருமகளை வறுத்தெடுக்கிறா. நீயும் ஆடறே".

தண்டு எடுத்துச் சொல்கிற போதெல்லாம் அவனுக்கு ரோஷம் வந்து ஏதாவது பண்ணணும் என்று தோன்றி உடனே கோழைத்தனத்தாலே பிசுபிசுத்து விடுவது வழக்கம்.

"அம்மா நம்மளை ஆளாக்க ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கிறாள். அனுசரிச்சுப் போகணுமாயிருக்கு".

"வெங்காயம்".

"அவள் இரட்டை வடம் தானே என் டெபாசிட்டுக்கு".

"போடா முகரைக்கட்டை. இப்போ நான் என்ன செத்தாடா போயிட்டேன்? என் உடம்பு எப்படி இருக்கு பார்த்தியா? எங்கே உங்க அப்பனையாகட்டும், அம்மாவையாகட்டும் என்கிட்டே ஒரு வார்த்தை பேசச் சொல்லு பார்க்கலாம்".

"நமக்கேன் பாவம், அவங்களை மரியாதைக் குறைவாப் பேசிட்டு? அவாவாள் பாவம் அவாவாளுக்கு".

"மன்னியைப் போட்டு வதைக்கறாளேடா. இவ படுத்துக்கல புருஷனோட? ரெண்டு நாளைக்கொரு தரம் தலைகாணி உறையைத் தேய்த்துத் தேய்த்து ஸ்டைலா பெட்ஸ்பிரெட் போட்டுக்கலை? அவள் உன் பெண்டாட்டி – ஏண்டா பூஜை ரூம்லே படுத்துக்கணும்? யாருக்குடா பெட்ரூம் வேணும்? அந்தக் கிழ முண்டைக்கும் கிழட்டுப் பொணத்துக்கும் அறிவு வேணாம்?"

"பெற்றவாளை அப்படியெல்லாம் பேச வேண்டாம். ஒரு ரூம்தானே இருக்கு. அதனால சங்கடம்".

"சரி சரி. வென்ட்டிலேஷன் ஜன்னல் கம்பியையெல்லாம் பிடுங்கி வெச்சிருக்கேயில்லையா?"

"நைஸா உருவிட்டேன்".

கையை உயர்த்திக் குலுக்கினான். "ஆல் த பெஸ்ட்டுடா. நான் போய் ஸ்டேஷன்லே கையெழுத்தெழவைப் போட்டுட்டு வீட்டுக்கு வந்து சேர்றேன்".

"டேய் டேய்! ஒரு நிமிஷம்! முதலிலேயே ரூமிலே நுழைஞ்சதும் நீலாகிட்டே இப்படி இப்படிப் பண்ண போறேன்னு சொல்லிடட்டுமா, இல்லே காரியம் ஆக விட்டு அப்புறம் சொல்லிக்கறதா?"

"முதலிலே அவள்கிட்டே சொன்னா அவ்வளவுதான். உனக்கு வந்திருக்கிற கொஞ்ச நஞ்ச தைரியத்திலேயும் வெந்நீர் ஊற்றிடுவாள்".

டெலிவிஷனிலே ஒளியும் ஒலியும் ஓடிக்கொண்டிருந்தது.

"சவுண்டு கொஞ்சம் வைடி!" – ருக்மிணி சொன்னதும் நீலா பெரிசு பண்ணினாள்.

"ஏன் ஊரைக் கூட்டறே? சனியனே! இன்னும் கொஞ்சம் குறை! அந்த வாழைத்தண்டை வேணா உள்ளே வெச்சிண்டு நறுக்கிடு. நன்னாப் பொடியா மோர்க்கூட்டுக்கு நறுக்கு. சீக்

'வனமாலி'

பொருள்கள் தொலைந்து போகாமல் பாதுகாப்பது எப்படி?

நியூயார்க் நகரில் பென்சில்வேனியா ரயில் நிலையத்தில் பொது மக்கள் ஞாபக மறதியாக வைத்துவிட்டுப் போன பல பொருள்களை ஓரிடத்தில் வைத்திருந்தார்கள்.

என்னென்ன வகைப் பொருள்களை மக்கள் மறந்து போகிறார்கள் என்று ஒரு பட்டியல் போட்டார்கள். ஆச்சரியமாக இருந்தது. சுமார் 1000 சாவிகள், 500 மூக்குக்கண்ணாடிகள், 300 குடைகள், அரை டஜன் பல் செட்டுகள்.

கையில் கொண்டு வந்த பொருள்களை எவ்வளவு சுலபமாக மறந்து போகிறோம்!

மறக்காமல் இருப்பது எப்படி என்பது பற்றிப் பல ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. ஒரு பொருளை ஓர் இடத்தில் வைத்தால், மறுபடி வந்து மறக்காமல் எடுக்க என்ன செய்ய வேண்டும்?

இதோ சில குறிப்புகள் :

1. ஒரு பொருளை நாம் எந்த இடத்தில் வழக்கமாக உபயோகிக்கிறோமோ அங்கேயே வைப்பது நல்லது. சமையல் பாத்திரங்கள் என்றால் அவை சமையல் அறையில் தான் இருக்கும். அதுபோல் ஒவ்வொரு பொருளையும் அது மிகவும் பயன்படும் இடத்திலேயே வைத்துவிட்டால் தேடவேண்டாம். சோப்பு எப்போதும் குளியல் அறையில் தான் இருக்கும். தேடுவதில்லை. சிலர் மூக்குக் கண்ணாடியை சங்கிலிபோல் சேர்த்துக் கழுத்தில் தொங்க விட்டுக் கொள்கிறார்கள். இது நல்ல உதாரணம். சரி. பாதி படித்த பத்திரிகைகளை எங்கே வைப்பது? சில்லரை நாணயம், பென்சில் இவற்றைத் தேடாமல் இருப்பது எப்படி? ஒவ்வோர் அறையிலும் ஒரு பெட்டி வைத்து அதில் இதுபோன்ற பொருட்களைப் போடலாம். கண்ட இடத்தில் தேடுவதைவிட, பெட்டிக்குள் தேடுவது சுலபம்.

2. பழக்கப்படுத்திக் கொள்வது மிகவும் நல்லது. ஒவ்வொரு பொருளுக்கும் ஓர் இடம் என்று குறித்துக் கொள்வதுடன் அந்த இடத்தில் அதை வைக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

கிரம் ஆகணும்னு தடித்தடியா நறுக்கினியோ உன் தலையில தான் கொட்டுவேன். எங்கே நாணா இன்னும் காணோம்?"

"தெரியலேம்மா".

"உனக்கு என்ன இழவுதான் தெரியும்? பூஜை சாமானையெல்லாம் எடுத்து வெச்சயா? பூவுக்கு எறும்பு வந்து உன்னைத்தான் பிடுங்கும். ஆனால் நீதான் ஒரு மாடாச்சே! பாம்பு பிடுங்கினாக்கூடத் தெரியாது! சரி சரி. காரியத்தைப் பாரு".

நாணா ஸ்கூட்டரை வாசலில் நிறுத்திவிட்டு உள்ளே வந்தான். நீலா சமையல் அறையில் இருந்தாலும் அவளது ஓர் ஒர விளிம்பு அவன் கண்ணில் பட்டது. பாதத்தின் பளிச் சென்ற நிறம் கிளுகிளுக்கச் செய்தது. ராத்திரி ஒரு மணியை நினைத்துக் கொண்ட போது மனசு ஒரே ரம்யமாக விகசித்தது. கொஞ்சம் பட படப்பும் இருந்தது. பனியனுக்கும் மார்புக்கும் நடுவே பொசு பொசுவென்று ஒரு மீசைப் பொட்டலம் உறுத்தியது. கவனப் பிசகாகப் பனியனைக் கழற்றிவிடக் கூடாது என்று உஷாராக இருந்தான்.

ஒளியும் ஒலியும், காதலர்கள் புகைக்கு நடுவே தூணுக்குத் தூண் ஓடி ஆடி கம்பத்தாச்சி ஆடிக்கொண்டிருந்தனர்.

"உங்களைத்தானே! இன்னும் ரிலீஸே ஆகாத படம். இப்படி வந்து பாருங்களேன் அதற்குள்ளே என்ன முடங்கல்?"

கணவனை ருக்மிணி அழைத்தாள். வாயு உபத்திர வத்துக்கான மாத்திரையை பிளாஸ்டிக் கிண்ணத்தில் தேடிக் கொண்டிருந்தவர் அக்கறையோ நாட்டமோ இல்லாவிட்டாலும் மனைவியின் சொல்லை மதித்து அறையிலிருந்து வெளிவந்து சிறிது ஒளியும் ஒலியும் பார்த்துவிட்டு மாத்திரை தேட மறுபடி உள்ளே போய்விட்டார்.

நாணாவுக்கு ராத்திரி ஒரு மணி நிகழ்ச்சி நிரல் பற்றிய நினைவு இப்போதே சிறிது தெம்பு தந்தது.

"ஏன், நீலா எங்கே போய் விட்டாள்? இதைப் பார்த்துட்டு அப்புறம் ஒளிஞ்சுக்கறது சமையலுள்ளே?"

"ஆமண்டா. அவள் ஒளியும் ஒலியும் ஏன் பார்க்கலைன்னு தான் அடுத்தவாரம் எதிரொலியில் லெட்டர் படிக்கப் போறா? சரிசரி. நீ கையைக் காலை அலம்பிக் கொண்டு சாப்பிட வா. எங்கே சுற்றிட்டு வர்றே?நீ கூட இத்தனை தேசாலம்".

"வந்து ஒரு பிரண்டு... அரட்டைக்கு..." - மழுப்பிச் சிரித்தான்.

நீலா பரிமாறினால் அவனுக்குச் சந்தோஷமாக இருக்கும். ஆனால் நடந்தது கிடை

வீட்டைத் திறந்தவுடன் அந்தச் சாவியை எங்கே வைப்பது என்று தீர்மானித்து அங்கு வைத்தால் மறுபடி எடுப்பது சுலபம்.

3. அருகில் உள்ள பொருள்களுடன் தொடர்பு படுத்தி மனதில் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். உதாரணமாக உங்கள் ஸ்கூட்டரை மவுண்ட் ரோடில் நிறுத்துகிறீர்கள். சூப்பர் மார்க்கெட் போய்விட்டு வந்தால் வைத்த இடம் நினைவுக்கு வராது. ஸ்கூட்டரை வைக்கும் போதே மேலே என்ன போர்டு உள்ளது. எதிரே என்ன கடை உள்ளது என்று பார்த்து அதனுடன் இணைத்து நினைவு வைத்துக் கொண்டால் வசதி. மேலே 'சூப்பர் மேன்' படம் போட்ட போஸ்டர் இருந்தால் சூப்பர்மேன் உங்கள் ஸ்கூட்டரைத் தூக்கி, எல்.ஐ.சி.மேல் வீசுவது போல் கற்பனைப் படமாகக்கூட ஞாபகம் வைத்துக் கொள்ளலாம். கற்பனை எவ்வளவுக்கு எவ்வளவு அபத்தமாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு நினைவில் நிற்கும்.

4. மனதில் பின்னோக்கி நடப்பது பயன்தரும். பொருளை வைத்தது முதல் இப்போது வரை நடந்தவற்றை ரிவர்ஸ் கியரில் சிந்தனை



செய்யுங்கள். பல சமயம் வைத்த இடம் ஞாபகம் வந்துவிடும்.

ஒரு மனோதத்துவ நிபுணரின் ஆலோ சனையையும் பின்பற்றலாம். தூங்கப் போகும் சமயம். "இன்ன பொருளை எங்கே வைத்தேன் தேடுகிறேன், கண்டுபிடிக்க உதவ வேண்டும்" என்று மனதிடம் சொல்லுங்கள். காலை எழுந்தவுடன் விடை கிடைக்க வாய்ப்பு உண்டு

எல்லா முக்கியமான பொருளுக்கும் ஒரு டூப்ளிகேட் வைத்துக் கொள்வது மிக நல்லது.

ஆதாரம் : 'பொது அறிவுக் கதம்பம்' என்ற நூல்.

— சி. பன்னீர்செல்வன்

யாது. அவன் விக்கினால்கூடத் தானாக நீலா தண்ணீர் எடுத்துக் கொண்டு வரமாட் டாள், மாமியார் முகத்தைத் தான் பார்ப்பாள்.

"செவிட்டுப் பொணமே, விக்கிண்டு சாகிறானே, காதிலே விழவில்லை?" என்று மாமியார் அன்பாக அனுமதி தந்தால் அவள் கையால் தண்ணீர் கொண்டு வந்து கணவன் கிட்டே வைப்பாள்.

நாணாவுக்கு அவள் கையை, டம்ளர் எடுக்கிற சாக்கில் தொட வேண்டும் போல ஆசையாக இருக்கும். எப்போதாவது விரல் நுனி, துளி படும். என்ன ஒரு பரிதாபம் என்றால், ஒரு மூச்சு தனியாகப் போய் அழக் கூட அவளுக்குத் தைரிய மில்லை. இப்படியே அவள் உள்ளுக்குள்ளே பெருக்குகிற நீரெல்லாம் அப்படியே ரத்தத் தோடு கலந்துடுமா, இல்லே வியர்வையா வெளியிலே வந்து விடுகிறதா என்றெல்லாம் நாணாவும் யோசித்ததில்லை.

ராத்திரி பூஜை அறைக்கு வழக்கம் போலக் கல்லுத்தலை யணையைத் தூக்கிக் கொண்டு நீலா தூங்கப் புறப்பட்டாள்.

"ஏண்டி முண்டம், தீர்த்தச் செம்பை வெளியிலேயே விட்டுட்டியே, எடுத்துண்டு தொலை".

"தீர்த்தம் சாப்பிட்டுட்டேம்மா. வேண்டியிருக்காது".

"அதை எடுத்துக்கொண்டு போறதுக்கு ஒரு சோம்பல். அதற்கு ஒரு வியாக்கியானம். வாயைக் கிழிக்கணும், சனி யனுக்கு".

கதவைச் சாத்தி வெளிப் பக்கம் பூட்டுப் போட்டாள் வழக்கம்போல.

மறுபடியும் விடியற்காலை ஐந்து மணிக்குத்தான் விடுவிப் பாள். ராத்திரியிலே அசட்டுப் பிசட்டென்று பிள்ளையாண் டான் அவள்கிட்டே போய்ப் 'பேசி'விடப் போகிறான் என் பதில் ருக்மிணி ஜாக்கிரதை யாக இருந்ததற்கு அறிகுறிதான் பூஜை அறைச் சாவி எப் போதும் இடுப்பில் இருப்பது.

தண்டு சொல்லுவான்: "நான் போயிட்டுப் போயிட்டு வர்ரது ஜெயில் இல்லைடா. உன் பெண்டாட்டியை பூஜை ரூம்லே தினமும் அடைச்சி வைக்கி றாளே கிழட்டு முண்டை - அது தாண்டா அசல் ஜெயில். எனக்குன்னா வாய்விட்டுப் பேசச் சிநேகிதா எத்தனை பேரு உண்டு. பாட்டும், சீட்டும், கேலியும் கும்மாளமுமா மறுபடி ஒரு பெரிய திருட்டாப் பண் ணிட்டு எப்போ உள்ளே போவோம்னு இருக்கு. நம் மோடது வீடு இல்லே. நரகம். அதுக்கு நாயகன் நீ. ஆமாம், நீயேதான்".

'இதை மாற்றிக் காட்டறேன்' என்று கறுவியது நாணாவின் உள்ளம்.

செய்தி வாசித்து அடங்கி டி.வி. மௌனமான பிறகு டிரான்ஸிஸ்டரை ருக்மிணி போட்டுக் கொண்டு திரை இசைப் பாடல்களை அவர் களது பெட்ரூமில் கேட்பது வழக்கம். சில வேளை நிகழ்ச்சி முடிவதற்குள் அவள் குறட்டை கேட்கும். அருகிலுள்ள கணவர் பிச்சுமணி பொறுப் பாக டிரான்ஸிஸ்டரை அமர்த்தி விடுவார். "ஏன், முழிச்சுண்டு தான் இருக்கேன். நிறுத்திக்க எனக்குத் தெரியும்" என்று சிலவேளை மூடிய கண்ணோடு அதட்டல் போடுவாள்.



நாணா மனசு திடுக் திடுக் கென்று ஓசையிட்டது. மேக்கப் செய்து கொள்ள இடம் பிடிப் பதில் சிரமம் இருக்கவில்லை.

ருக்மிணி படுக்கையறையில் தாள் போட்டுக் கொண்டு விட்டதால் எழுந்து வரக்கூடிய அபாயம் இல்லை. ஆனாலும் எந்த அறையில் விளக்கு எரிந்தாலும், "அங்கே இன்னும் என்ன பண்ணியாகிறது? விளக்கை அணை" என்று குரல் கொடுப்பாள்.

விளக்கு இல்லாமலேயே மேக்கப் செய்து கொண்டான். ரேழியில் மாமூலாகப் படுக் கும் இடத்தில் அமர்ந்தான். அம்மா காதில் விழவேண்டும் என்பதற்காகத் தலையணையை ஓசைப்பட இரண்டு தட்டுத் தட்டிப் படுக்கையைச் சீர் செய்தான்.

கையகலச் சின்னக் கண்ணாடியில் இருட்டில் உற்று உற்றுப் பார்த்தபோது வாடகை மீசையும் டோபாவும் மசமச வென்று தெரிந்தன.

விளக்கைப் போட்டுக் கண்ணாடியில் பளிச்சென்று தன் மாறுவேடத்தைப் பார்த்துக் கொள்ள அவனால் இயல வில்லை. இந்த வேஷம் போதும். வேட்டியைக் களைந்து லுங்கி அணிந்தான். இரவு பன்னிரண்டு வரை விழித் திருந்துவிட்டுக் கதவை ஓசைப் படாமல் திறந்து கொண்டு வெளியேறியபோது, காம்ப வுண்டு ஒற்றைக் கதவை கிறீச்சென்று தள்ளிக் கொண்டு, தண்டு ஒரு மாதிரி பின்னல் நடையுடன் நுழைந்து கொண்டிருந்தான். வாடை கப்பென்று வீசியது.

அவனிடம் 'புறப்பட்டு விட்டேன்' என்று சொல்லலாமா என்று ஒரு கணம் தயங்கினான்.

அனாவசியப் பேச்சு சத்தம் அம்மாவை எழுப்பிவிடக்கூடும் என்ற அச்சம் தோன்றவே காரியத்தில் இறங்கினான்.

நீலாவுக்கும் அவனுக்கும் சம்பிரதாயத்துக்கு முதலிரவு என்று இரண்டு வருஷத்துக்கு முன் ஒரு தினம் விசேஷம் நடந்தது. அந்தப் பாவிப் புரோகிதர் நாள் நட்சத்திரம் கணக்குப் பார்த்து ஒண்ண ரைக்கு மேல் ஒண்ணு நாற்பத் தைந்துக்கு இந்த ஒரையில் அந்த ஓரையில் என்று துண்டுச் சீட்டில் ஏதோ எழுதிக் கொடுத்ததால் ஒரு மணிவரை மனைவியை அவன் தொட வில்லை.

அதற்கப்புறம்தான் அம்மாக் காரியைத் தேள் கொட்டி விட்டது. பருப்புத் தேங்காய்க் கூட்டில் வேண்டுமென்றே தேளைச் சம்பந்தி வீட்டார் பிரித்துப் போட்டிருக்கிறார்கள் என்று வன்மமும் விரோதமும் வளர்த்துக் கொண்டு - நீலா அவளுக்கு எதிரி ஆகிவிட்டாள். எதிரி என்றால் நிராயுத பாணியான சமதையில்லாத பரிதாபத்துக்குரிய எதிரி.

அறைக்குள்ளே கம்பி நீக்கிய வென்ட்டிலேட்டரில் நாணா புகுவதற்குக் கொஞ்சம் சிரமப்பட வேண்டியிருந்தது. மொட்டை மாடி ஜலதாரைத் தண்ணீர் வடிந்து பாசி பிடித்த பகுதியில் காலை உந்தினால் அது வழுக்கியது. மீசையும் டோப்பாவும் கழன்று விடுவது போலிருந்தது. லுங்கி கட்டியே பழக்கமில்லை. டர்ரென்று துணி கிழியவும் கிழிந்தது.

வென்ட்டிலேட்டரை எழும்பிப் பிடித்து உள்ளே நோக்கி னான். தங்கமுத்து மாதிரி தூங்கா விளக்கு அம்பாள் முன் மேல் அலமாரியில் எரிந்து கொண்டிருந்தது.

அறைக்கு மின் விசிறி கிடையாது. அதனால் நிதான மாக அது எரிய முடிந்தது.


ஓசை கேட்காதவாறு அறைக்கு உள்ளே இறங்க வேண்டும்.

நீலா எடுத்த எடுப்பில் கத்திக் கூப்பாடு போட்டு விட்டால் மொத்தத் திட்டமுமே பாழாகிவிடும்.

ஜாக்கிரதையாக இறங்க வேண்டும். நீலாவின் வாயில் துணியை அடைத்து அவள் மிரண்டு அரண்டு கையைக் காலை உதைத்துக் கொண்டு அங்கே இங்கே ஓடி ஓசை ஏற்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் தராமல் கையையும் காலையும் நன்றாகக் கட்டக் கயிறு தயார். பாவம் கொஞ்சம் வலிக்கும். பரவாயில்லை.

நிஜமான திருடன்தான் வந்து தன்னை பலாத்காரம் செய்கிறா னென்ற பயத்தில் அவள் இருதயம் நின்றுவிடாமல் இருக்க வேண்டும். அதற்கும் தகுந்த மாதிரி திட்டமிட்டு கொட்டை எழுத்துக் கடிதம் ஒன்று தயாரித்திருந்தான். வாயில் துணி அடைத்துக் கையைக் காலைக் கட்டியதும் கடிதத்தைக் காட்டிவிட வேண்டும்.

நீலா, பயப்படாதே. நான் நாணாதான். நாம கொஞ்ச நேரத்துக்குச் சந்தோஷமா இருக் கணும்னு திருடன் வேஷம் போட்டுண்டு வந்திருக்கேன். நாம சந்தோஷமா இருந்துட்டு அப்புறம் மறுபடி நான் திருடன் வேஷம் போட்டுக் கொண்டு விடுவேன். நீ அப்போதான் கத்தணும். அம்மா ஓடி வருவா. அலங்கோலமா இருக்கிற உன் புடைவையையும் நான் கிழிச்சு விட்ட ரவிக்கையையும் பார்த் துட்டு, 'ஐயோ, திருடன் பாழ் படுத்திட்டானே பிடிங்க அவனை'ன்னு கூக்குரல் போடு வாள். அப்போது பார்த்து



நான். "வந்தது திருடனில்லே இதோ நான்தான். நாணா, அவளுக்குத் தாலி கட்டின நாணா. எங்களைச் சேர வொட்டாமல் பிரிச்சு வெச்சி யந்தே இல்லையோ? அதற்குப் பாடம் இது' என்று சொல்லுவேன்.

அம்மாவுக்குத் தன் தப்பு புரியும். எவ்வளவு கொடுமைக் காரியாத் தான் இருந்திருந்தால் சொந்தப் பெண்டாட்டிகிட்டயே புருஷன் திருடனாட்டம் வந்து பழகிட்டுப் போகணும்னு மன சுலே உறைக்கும்... புரியறதாடி கண்ணு."

அதைப் படித்தபின் அவள் எவ்வளவு சந்தோஷப்படுவாள் என்பதை நினைக்க அவனுக்கு பூரிப்பாயிருந்தது.

அம்மாவின் சர்வாதிகார சகாப்தத்துக்கு முடிவு கட்ட இதோ இன்னும் கொஞ்சம் தம் பிடித்து வென்ட்டிலேட்ட ருக்குள் நுழைய வேண்டியது தான்.

விலாப்பக்கம் ஜன்னல் கதவு ஆணி அழுத்தமாகக் கீறி னதைச் சகித்துக் கொண்டு தன்னை இப்படி அப்படி வளைத்து உள்ளே இறங்கி னான்.

நீலா அசந்து தூங்கிய வாறிருந்தாள்.

மெல்லிசான கழுத்து செக்கச் சிவக்கப் பவளத்தில் செய்த உடுக்கையை நினைவூட் டியது. மேலாக்கு விலகி அவளது புஷ்டியான மார்பு விண்ணென்று திணித்தாற் போல் நல்ல வடிவிலிருந்தது. ஏற்கனவே குழந்தைத்தனமான அந்த முகம் தூங்கும்போது இன்னும் கள்ளங்கபட மற்றிருந்தது.

மெதுவாக எழுப்பி அவளோடு நீண்ட நேரம் கொஞ்ச வேண்டும் போல ஆசையாக இருந்தது. ஆனால் அம்மாதிரியான சூழ்நிலையில் அவன் இல்லை. திட்டத்தை உடனடியாக அமலாக்க வேண் டும்.

அவளருகே போனான். கையில் தயாராக இருந்த துணியை அவள் வாயில் அவசரமாகத் திணிக்கவும் அவள் மருண்டு விழித்து துடித்துக் கத்த முயன்று முடியாத நிலையில் அவள் கையைப் பிணைத்துக் காலை யும் பிணைத்து அவளை அணைத்தவாறு தயாராக இருந்த கடிதத்தைக் காட்டி னான். நம்பிக்கைப் படுவதற் காக மீசையையும் டோப்பாவை யும் கழற்றிவிட்டுச் சிரித்தான்.

நீலா வியப்பாலும் மகிழ்ச்சி யாலும் தடுமாறிப் போனாள். "ஐயோ... அம்மாவுக்குத் தெரிஞ்சா கொன்னே கொன்னுடுவாள்... என்ன இப்படி அசட்டுக் காரியம் பண்ணிட்டீங்களே!"

கால் மணிப் பொழுது அவர்களுடைய வாழ்க்கையில் இரண்டு வருடமாகக் காணாத இன்பத்தையெல்லாம் தந்தது.

மறுபடியும் மீசையையும் டோப்பாவையும் மாட்டிக் கொண்டான். "அதையும் இதை யும் உருட்டிக் கலாட்டா பண்ணுகிறேன்... நீ திருடன், திருடன்னு... சத்தம் போடு. கொஞ்சம் நல்லா நடி! புரி கிறதா?"

ருக்மணியும் பிச்சுமணியும் விதிர்க்க வியர்க்க ஓடிவந் தார்கள்.

"ஐயோ அம்மா! திருடன், திருடன்... ஓடிவாங்களேன்... ஐயையோ! ஐயையோ!"- நீலா கூடுமானவரை உரக்கக் கத்தி னாள்.

"பிச்சுமணி, டேய், நாணா... தண்டு... ஓடிவாங்கடா! திருடன் திருடன்!" என்று குரல் கொடுத் தார்.

அரைப் புன்னகையுடன் தண்டு கையில் பெரிய தடி யுடன் அமைதியாக வந்தான். "திருடனா? நம்ம வீட்டிலே என்னைத் தவிர இன் னொருத்தனா? அவ்வளவு துணிச்சல் எந்தப் பயலுக்கு... அவனை..."

பூஜை அறையின் பூட்டைத் திறக்க வேண்டாம். போலீ சுக்குச் சொல்லி அவர்கள் வந்த பிறகு திறப்பதுதான் நல்லது என்றார் பிச்சுமணி.

"அவங்க வர்ரதுக்குள்ளே உள்ள எல்லாம் முடிஞ் சிருக்கும்".

"திருடண்டா! எதையாவது வெச்சுண்டு குத்திக் கித்திப் பிட்டானானால்!"

"நான் ஆயிரம் கேடியைப் பார்த்தவன்" என்ற தண்டு சாவியை வாங்கிப் பூட்டைத் திறந்து கதவைக் காலால் எட்டி உதைக்க அது மல்லாக்கத் திறந்து கொள்ள, திருடனின் ஒரு கைப்பிடியில் நீலாவின் கழுத்தும், இன்னொரு கையில் பளபளக்கும் பிச்சுவாவும்.

"யாராவது பக்கத்திலே வந்தீங்கன்னா" - சொல்லு வதற்குள் நாணாவுக்கு வியர்த் தது. தொண்டையைக் கட்டி யது.

குரலை வைத்து அம்மா தன்னை அடையாளம் தெரிந்து கொண்டு விட்டாளோ என்ற பயம் நடுக்கத்தைக் கொடுத் தது.

"அம்மா! நான்தான் நாணா... திருடனில்லே" என்று மீசையைப் பிய்க்கத்தான் நினைத்தான். ஆனால் தைரியம் வரவில்லை.

அங்கிருந்து ஓடிவிடுவது தான் ஒரே வழி என்று அழுத்தமாகத் தோன்றிவிட்டது. கைப்பிடியிலிருந்த நீலாவை உந்திக் கீழே தள்ளிவிட்டு கத்தியைக் காட்டியபடியே ஓட முயன்ற அவனைத் தண்டு ஒரு பாய்ச்சல் பாய்ந்து அமுக்க முயன்றான்.

● பாரதியார் 1906இல் 'இந்தியா' என்னும் வார இதழை வெளியிட்டார். தமிழ் இதழ்களில் முதன் முதலாக அரசியல் கருத்துப்படங்களை (கார்ட்டூன்) முதல் பக்கத்தில் தாங்கிவந்த இதழ் இதுதான்.

● ரோமானிய அரசர்கள் பலரின் பெயரில் ஜூலியஸ் சீசர், அகஸ்டஸ் சீசர் என்று "சீசர்" என்ற வார்த்தை சேர்ந்து வருவதைக் காணலாம். சீசர் என்ற பெயர் எப்படி ஏற்பட்டது தெரியுமா? சிசேரியன் அறுவை சிகிச்சை என்று இப்போது அழைக்கப்படும் வார்த்தையின் பொருளில் இருந்தே சீசர் உண்டானது. சீசர் என்ற வார்த்தைக்கு 'வெட்டுதல்' என்று பொருள்.

– க.சு.மணியன்.

எந்த விஷயம் முக்கியமாகத் தெரிய வேண்டுமோ அதைச் செய்யாமல் ஓடுகிறானே... கோழை!

நாணா, தண்டுவின் பிடியிலிருந்து நழுவி ஓடிவிட்டான்.

ஐந்து நிமிடம் கழித்து வேடத்தைக் களைந்துவிட்டு, "வயிற்று வலி தாங்கலை... ஒரு சோடா எங்காவது சாப்பிட்டு வரலாம்னு போனேன். என்ன இங்கே அமர்க்களம்? ஏன் இத்தனை விளக்கு எரியுது? நீலாவுக்கு என்னாச்சு? பூஜை ரூம் ஏன் இப்படி அலங்கோலமா இருக்கு?" என்று படபடப்புடன் விசாரித்தான்.

ருக்மிணி தலையில் கைவைத்தபடி இடிந்து போயிருந்தாள். எரிமலையாய்க் கனன்றாள். "குடி முழுகிப் போச்சுடா! மானம் போச்சு! இந்தச் சனியனை முதலில் வீட்டை விட்டுத் துரத்து... அங்கே ஏண்டி நிற்கிறே?"

ஆத்திரம் தாங்காதவளாக மருமகளின் தலைமுடியை இழுத்துப் பம்பரமாகச் சுழற்றி நெட்டி அறை வாசற்படிக்கு வெளியே தள்ளினாள்.

"ஐயோ! அம்மா, நான் ஒரு தப்பும் பண்ணலியே" - நீலா கதறினாள்.

அவள் பார்வை கெஞ்சியது. கணவனைப் பார்த்து 'நடந்த உண்மையைச் சொல்லிடுங்க அம்மாகிட்டே, இல்லாவிட்டால் என்னை வீட்டை விட்டே துரத்திடுவாங்க' என்று அவள் பார்வை கெஞ்சியது.

நாணாவுக்குத் தைரியம் வரவில்லை. "என்னம்மா நடந்தது? எதுக்கு அவளைப் போட்டுக் காட்டுத்தனமாக அடிக்கிறே?"

"கொஞ்சுவாங்கடா. பொணம் மாதிரி தூங்கிக் கொண்டிருந்திருக்கிறா. உள்ளே திருடன் வந்து இவளை என்ன பண்ணணுமோ அந்த அக்கிரமமெல்லாம் பண்ணிட்டான். இந்த எச்சில் இலையை இனிமேலும் வெச்சுச் சீராட்டணுமா? டேய் தண்டு! இப்பவே கிடைக்கிற பஸ்ஸிலே ஏற்றி இந்தக் கழுதையை இவள் அப்பன் வீட்டுக்கு அனுப்பிட்டு அப்புறம் தான் நீ வரணும்".

நீலாவின் கண்கள் கெஞ்சிக் கொண்டிருந்தன. புருஷனைப் பார்த்தது. 'நடந்ததைச் சொல்லி என்னைக் காப்பாற்றுங்க!'

அவனுக்குத் தைரியம் வரவில்லை.

விழுந்து கிடந்தவளைத் தரதரவென்று ருக்மிணி இழுத்தபோது அவள் கையைத் தட்டிவிட்டான் தண்டு.

"இப்ப என்ன ஆயிடுத்துன்னு ஊரைக் கூட்டறே?"

"இன்னும் என்னடா ஆகணும்? ஐயோ!"

"திருடன் வந்தான். மன்னியைக் கெடுத்துட்டான். அந்தத் திருடன் இப்போ அகப்படலை ஓடிட்டான்".

"எச்சிக் கலையைத் துரத்தி அடிக்காம என்னடா பண்ணச் சொல்றே? கிணத்துலே விழுந்து சாகட்டும். நாணா இனிமேல் அவளைத் தொட மாட்டான்".

"இத்தனை நாள் ரொம்பத் தொட்டானாக்கும்! இப்போ சொல்றேன். இனிமேலும் அவன் தொடவேண்டாம். அவளை நான் வெச்சுக் காப்பாற்றுகிறேன். திருடன் கெடுத்துட்டான்னு நாணா தள்ளி வெச்சிட்டான்னா நானே அவளைக் கல்யாணம் பண்ணிக்கவும் தயார்".

"நீ ஒரு பொம்பிளைப் பொறுக்கி. ராஸ்கல். ஜெயிலுக்குப் போனவன். மூடுடா வாயை!" ருக்மிணி சீறினாள்.

எல்லோரும் பிரமித்து நிற்கத் தண்டு போய்விட்டான். மருமகளைத் தொலைத்து முழுக ருக்மிணி பாத்ரூம் போய்விட்டாள்.

நாணா நீலாவிடம், "நீலா... என்னென்னவோ திட்டம் பண்ணினேன். கடைசியிலே தைரியம் வரலே. என்னை மன்னிச்சுடு".

நீலா பதில் பேசவில்லை. அழுவில்லை.

மறுநாள் அவள் உடம்பு கயிற்றில் தொங்கியது.

"திருடன் கெடுத்துட்டான்! அவள் வேறு என்னதான் பண்ணுவாள்? போதாக்குறைக்கு உன் தம்பிக்காரன் வேறு நான் இருக்கேன், கல்யாணம் பண்ணிக்கிறேன் அது இதுன்னு உளறினானா... மானம் தாங்கலை மகராசி போயிட்டாள்".

ருக்மிணியம்மாள் முதல் தடவையாக மருமகளுக்கு மகராசிப் பட்டத்தைத் தந்தாள். ●

		கேது	
	கிரக நிலை		செவ் (வ)
சுக் சனி			
சூரி	புத ராகு		குரு

உங்கள் ராசிபலன்

15-12-1992 முதல் 13-1-1993 வரை

பாலஜோசியர்

கிரக மாறுதல்

22-12-1992 முதல் மிதுன - செவ்வாய் (வக்ரீ), 29-12-1992 முதல் தனுசு - புதன், 29-12-1992 முதல் கும்ப - சுக்கிரன்

கிரக பாதசாரம்

சூரியன் - மூலம் 1, சந்திரன - மகம் 3, செவ்வாய் - புனர்பூசம் 4, புதன் - அனுஷம் 2, குரு - ஹஸ்தம் 3, சுக்கிரன் - திருவோணம் 2, சனி - திருவோணம் 4, ராகு - கேட்டை 4, கேது - மிருகசீரிஷம் 2.

மேஷம் : (அசுவினி, பரணி, கிருத்திகை 1 ஆம் பாதம் முடிய)

முக்கியமான கிரகங்கள் அனுகூலமான நிலையில் சஞ்சரிக்காததால் உங்கள் தேக ஆரோக்கியம் சீராக இராது. அலைச்சலும், உழைப்பும் அதிகரிக்கும். எண்ணங்கள் ஈடேறத் தடைகளும், குறுக்கீடுகளும் உண்டாகும். பணநடமாட்டம் குறைந்து, செலவுகள் அதிகரிக்கும். சிக்கன நடவடிக்கை அவசியம் தேவை. மக்கள்நலம் ஒருநாள் போல் மறுநாளிராது. நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திரச் சொத்துகள் விஷயத்தில் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்களில் அதிகம் லாபத்தை எதிர்பார்க்க இயலாது. 2இல் கேதுவும், 8இல் ராகுவும் சஞ்சரிப்பதால் பேச்சில் நிதானம் அவசியம் தேவை. அதன் மூலம் குடும்பத்திலும், வெளிவட்டாரத்திலும் உங்கள் மதிப்பைக் காத்துக் கொள்ள முடியும்.

நூதன நட்பு வேண்டாம். பயணத்தின்போது பாதுகாப்புத் தேவை. 22 ஆம் தேதி முதல் பொறியியல் துறையாளர்களுக்கு ஓரளவு வளர்ச்சி தெரியவரும். தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் உழைப்பு வீண் போகாது. 29 ஆம் தேதி முதல் எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்களைச் சேர்ந்தவர்கள் வெளிச்சம் காண்பார்கள். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றிநடை போடுவார்கள். கணவன், மனைவியரிடையே இருந்துவந்த சலசலப்புகள் குறைவடையும். புதிய ஆடை, அணிமணிகள், அலங்காரப்பொருட்கள் ஆகியவற்றின் சேர்க்கைக்கு இடம் உண்டு. டிசம்பர் 15,16,19,20,26, 27,28,30,31 ஜனவரி 3,5,6,8,10,12,13 தேதிகள் சிறப்பானவை. கீழ்த்திசை நலம் தரும். 1 ஆம் எண் அதிர்ஷ்டமானது. தனுசு, மகர ராசிக்காரர்கள் அளவோடு உதவுவார்கள்.

ரிஷபம் : (கிருத்திகை 2 ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிஷம் 2 ஆம் பாதம் முடிய)

குரு, சுக்கிர பலம் காரணமாகவும், 3இல் உள்ள செவ்வாயின் அனுகூலமான நிலை காரணமாகவும் உங்கள் மதிப்பும், அந்தஸ்தும் உயரும். பொறியியல் துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பார்கள். பெரிய மனிதர்களது சேர்க்கையால் நலம் பெறச் சந்தர்ப்பம் கனிந்து வரும். மனத்தில் தெளிவு பிறக்கும். இரசாயனம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்பான பாதையைக் காண்பார்கள். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் சாதனை படைப்பார்கள். புனிதப் பயணம் மேற்கொள்ளவும், சாதுக்கள், மகான்கள் ஆகியோரது ஆசிகளைப் பெறவும், தெய்வ தரிசனம் கிடைக்கப் பெறவும் வாய்ப்புண்டு.

தரும காரியங்களில் ஈடுபடச் சந்தர்ப்பம் கூடிவரும். வெளிநாட்டுத் தொடர்பு மூலமாக ஓர் எண்ணம் ஈடேறும். தொலைதூரப் பயணம் நலம் தரும். ஜன்மத்தில் கேதுவும், 8 இல் சூரியனும் சஞ்சரிப்பதால் உடல்நலனில் கவனம் செலுத்தி வருவது நல்லது. அரசு விவகாரங்களில் விழிப்புடன் ஈடுபடுவது அவசியமாகும். நிலபுலங்கள் சம்பந்தப்பட்ட இனங்களில் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. பெற்றோர் நலம் கவனிக்கப்பட வேண்டிவரும். மருத்துவர்கள், நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் தங்கள் கடமைகளைச் சரிவர ஆற்றிவந்தால் சோதனைகளுக்கு ஆட்படாமல் தப்பலாம். 29 ஆம் தேதி முதல் எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்களைச் சேர்ந்தவர்கள் வெளிச்சம் காண்பார்கள். குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் அவ்வப்போது ஏற்படுமாகையால் பக்குவத்துடன் சமாளிப்பது நல்லது. டிசம்பர் 15,18,20,22,27,28,30,31 ஜனவரி 3,5,6,8,9,12,13 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அதிர்ஷ்டமானவை. கன்னி, மகர ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மிதுனம் :(மிருகசீரிஷம் 3 ஆம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3 ஆம் பாதம் முடிய)

உங்கள் முன்னேற்றத்திற்குக் குறுக்கீடாக எதிர்ப்புகள் என்பவை இருக்கவே செய்யும் என்றாலும் அவற்றையும் கடந்து ஓரளவு வெற்றி வாய்ப்பைப் பெற 6 இல் உள்ள கிரகங்கள் உங்களுக்கு உதவ முன்வருவார்கள். வியாபாரிகள், கணிதத்துறையாளர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் வளர்ச்சி பெறச் சந்தர்ப்பம் சாதகமாக அமையும். 2 இல் செவ்வாய், 8 இல் சனி ஆகியோர் உலவுவதால் சிறு விபத்துக்கு ஆட்பட நேரும். விழிப்புடன் எதிலும் ஈடுபடுவது நல்லது. பேச்சில் சூடான வார்த்தைகளை உதிர்க்கலாகாது. பெரியவர்களின் மனம் புண்படும்படியான செயல்களில் ஈடுபடவேண்டாம். தீயவர்களின் தொடர்பை விட்டு விலகுவதன் மூலமாகவும், நல்லவர்களின் நட்புறவை வளர்த்துக் கொள்வதன் மூலமாகவும் சங்கடங்களுக்கு ஆட்படாமல் தப்ப முடியும்.

கணவன், மனைவியரிடையே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் தோன்றும். பக்குவத்துடன் சமாளிப்பது நல்லது. கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. தொழிலாளர்கள், விவசாயிகள், உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் விரும்பத்தகாத இட மாற்றத்தையோ, நிலை மாற்றத்தையோ பெற வேண்டிவரும். பொருளாதாரநிலையில் விசேடமான வளர்ச்சிக்கு இடமிராது. சிக்கனம் அவசியம் தேவை. கொடுக்கல் - வாங்கல், ஸ்பெகுலேஷன் ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் அதிகம் லாபத்தைப் பெறமுடியாமல் போகும். 22 ஆம் தேதி முதல் செவ்வாய் வக்கிர கதியில் உங்கள் ஜன்ம ராசியை அடைவதால் தேக ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. 29 ஆம் தேதி முதல் கலைத்துறையினருக்கும், மாதர்களுக்கும் வெளிச்சமான பாதை புலப்படும். உங்கள் ஜனன கால ஜாதகப்படி தற்சமயம் யோக பலம் உள்ள தசை, புத்தி, அந்தரங்கள் நடைபெறுமானால் சோதனைகள் என்பவை குறைவடையும். தெய்வ வழிபாட்டில் தொடர்ந்து ஈடுபட்டுவருவது நல்லது. டிசம்பர் 15,18,20,22,24,30 ஜனவரி 3,5,6,8,9,12,13 தேதிகள் ஓரளவு சிறப்பானவை. தென்மேற்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. கும்ப, மீன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 4,5,6 எண்கள் நலம் தரும்.

கடகம் : (புனர்பூசம் 4 ஆம் பாதம் முதல், பூசம், ஆயில்யம் முடிய)

6 இல் உள்ள சூரியன் உங்களது நிர்வாகத் திறமையை வெளிப்படுத்துவார். அரசாங்கப்பணியாளர்களும், அரசியல்வாதிகளும் தங்கள் நோக்கம் நிறைவேறப் பெறுவார்கள். கேது பலம் காரணமாக ஞான மார்க்கத்திலும், பக்தி மார்க்கத்திலும் ஈடுபாடு கொண்டுள்ளவர்கள் மனத்தெளிவு பெறுவார்கள். நூதன நண்பர்களால் ஓரளவு நலம் பெறமுடியும். ஏனைய கிரகங்கள் அனுகூலமான நிலையில் சஞ்சரிக்காததால் உடல் நலனில் கவனம் செலுத்தி வருவது நல்லது. கணவன், மனைவியரிடையே கருத்து ஒற்றுமை இராது. கூட்டாகத் தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களிடம் பக்குவத்தோடு பழகுவது அவசியமாகும். இயந்திரப்பணியாளர்கள், இஞ்சினீயர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோர் தங்கள் கடமைகளைக் கண்ணும் கருத்துமாக ஆற்றிவந்தால் சங்கடங்களுக்கு ஆட்படாமல் தப்பலாம்.

பொருளாதார நிலை சீராக இராது. செலவுகளைச் சமாளிக்கக் கடன்படவும் நேரும். சிக்கன நடவடிக்கை அவசியம் தேவை. 22 ஆம் தேதி முதல் செவ்வாய் விரயம் புகுவதால் மக்களாலும், உடன்பிறந்தவர்களாலும், சிறுசிறு தொல்லைகளுக்கு ஆட்படவேண்டிவரும். செய்துவரும் தொழிலில் முன்னேற்றம் காணமுடியாமல் ஓரிரு தடைகள் உண்டாகும். 29 ஆம் தேதி முதல் எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்களைச் சேர்ந்தவர்களும், நிறுவன, நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்களும் உற்சாகம் கூடப்பெறுவார்கள். வியாபாரிகள் வெளிச்சமான பாதையைக் காண்பார்கள். கலைத்துறையினருக்கு வரவேற்பு கூடும். மாதர்கள், சமூக நலப் பணியாளர்கள் ஆகியோர் தங்கள் எண்ணம் ஈடேறப் பெறுவார்கள். தொழிலாளர்களுக்கு உழைப்பிற்குரிய பயன் கிடைத்துவரும். டிசம்பர் 15,18,20,26, 27,31 ஜனவரி 3,5,6,8,9,12,13 தேதிகள் சிறப்பானவை. கீழ்த்திசையும், வடமேற்குத் திசையும் நலம் தரும். 1,7 எண்கள் அதிர்ஷ்டமானவை. தனுசு, ரிஷப ராசிக்காரர்கள் உதவுவார்கள்.

சிம்மம் :(மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம் முடிய)

குருவும், சனியும் அனுகூலமான நிலையில் சஞ்சரிப்பதால் உங்கள் பேச்சுத்திறமை கூடும். குடும்பத்தில் அமைதி நிலைத்திருக்கும். பண நடமாட்டம் திருப்திகரமாக இருந்துவரும். கடன் தொல்லைகள் குறைவடையும். கொடுக்கல் - வாங்கல் இனங்கள் சீராக நடந்துவரும். ஸ்பெகுலேஷன் துறைகள் மூலமாக ஓரளவு ஆதாயம் கிடைத்துவரும். நண்பர்கள் நலம் புரிய முன்வருவார்கள். மக்கள் நலம் சீராக இருந்து வரும். மக்களால் ஓரிரு எண்ணங்கள் நிறைவேறவும் வாய்ப்புண்டாகும். வியாபாரிகள், நவீன விஞ்ஞானத்துறைகளைச் சேர்ந்தவர்கள், கணிதத்துறையாளர்கள், மாணவர்கள் ஆகியோர் செழிப்பான பாதையைக் காண்பார்கள். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். தொழிலாளர்களும், விவசாயிகளும் தங்கள் கோரிக்கை ஈடேறப் பெறுவார்கள்.

அலுவலகங்களில் பணியாற்றுபவர்களுக்கு உற்சாகமான சூழ்நிலை உதயமாகும். சுக்கிர பலம் குறைவாக இருப்பதால் மாதர்கள், சமூக நலப் பணியாளர்கள், கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் விழிப்புடன் இருப்பது நல்லது. எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் வரவேற்பு கூடும். 22 ஆம் தேதி முதல் பொறியியல்

துறைகளைச் சேர்ந்தவர்கள் இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வருவார்கள். 29 ஆம் தேதியிலிருந்து அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடும். நிலபுலங்களால் அளவோடு ஆதாயம் கிடைத்துவரும். நண்பர்கள், உற்றார், உறவினர்களால் அனுகூலம் பெறச் சந்தர்ப்பம் கூடிவரும். 4 இல் உள்ள ராகு அலைச் சலை அதிகப்படுத்துவார். நூதனமானவர்களிடம் விழிப்புடன் பழகுவது நல்லது. டிசம்பர் 15,18,20,22,24,26,27,28 ஜனவரி 3,5,6,8,9,12,13 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, மேற்குத் திசைகள் அனுகூலமானவை. 3,7,8 எண்கள் நலம் தரும். கன்னி, தனுசு, மகர ராசிக்காரர்கள் உதவுவார்கள்.

கன்னி: (உத்திரம் 2 ஆம் பாதம் முதல், ஹஸ்தம், சித்திரை 2 ஆம் பாதம் முடிய)

3 இல் உள்ள ராகுவும், 11 இல் உள்ள செவ்வாயும் உங்கள் ஆற்றலை வெளிப்படுத்துவார்கள். எதிர்ப்புகளின் பிடியிலிருந்து விடுபடுவீர்கள். வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூலமான போக்குத் தென்படும். நூதன நண்பர்கள் உதவ முன்வருவார்கள். பயணம் பயன் தரும். நல்ல தகவல் ஒன்று வந்துசேரும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற ' துறைகளைச் சேர்ந்தவர்கள் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். மக்களால் பெற்றோரும், பெற்றோரால் மக்களும் நலம்பெற வாய்ப்பு உண்டாகும். கணவன், மனைவியரிடையே களிப்புறவு கூடும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் தொழிலில் முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பார்கள். புனிதப்பணிகளில் ஈடுபடுவதற்குரிய வாய்ப்புகள் கூடிவரும். தெய்வ தரிசனம், சாதுதரிசனம் ஆகியவை கிடைப்பதற்குச் சந்தர்ப்பம் கனிந்துவரும்.

29 ஆம் தேதி முதல் வியாபாரிகள் இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வருவார்கள். கணிதம், விஞ்ஞானம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்குச் செழிப்புண்டாகும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் லாபம் தரும். 29 ஆம் தேதி முதல் சுக்கிர பலம் குறைவதால் பெண்களுக்குச் சோதனைகள் உண்டாகும். சமூகநலப் பணியாளர்கள் விழிப்புடன் இருப்பது நல்லது. சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் அகலக்கால் வைக்க வேண்டாம். நூதன முயற்சிகளில் ஈடுபடலாகாது. குடும்பத்தில் சலசலப்புகள் உண்டாகும். தந்தை நலம் கவனிக்கப்பட வேண்டிவரும். தொலைதூரப் பயணத்தை ஒத்திப்போடுவது நல்லது. டிசம்பர் 15,18,20,26,27,28,30,31 ஜனவரி 5,6,8,9,12,13 தேதிகள் சிறப்பானவை. தென்மேற்கு, தெற்குத் திசைகள் நலம் தரும். விருச்சிக, மகர ராசிக்காரர்கள் உதவுவார்கள். 4,9 எண்கள் அனுகூலமானவை.

→

கத்தரித்து ஒட்டியது!

● ஒரு சமயம் அக்பரும், அவருடைய ராணியும் மாம்பழம் சாப்பிட ஆரம்பித்தார்கள். ராணி, தான் சாப்பிட்ட பழங்களின் தோல் களையும், கொட்டைகளையும் தனக்கு முன்னால் போட்டாள். அக்பரும், தான் சாப்பிட்ட பழங் களின் தோல்களையும், கொட்டை களையும் ராணிக்கு முன்னாலேயே போட்டார். இதனால் அவர்கள் பழங்கள் சாப்பிட, சாப்பிட ராணி யின் முன்னால் ஒரு பெரிய குவியல் உயர்ந்து கொண்டே போயிற்று.

அந்த சமயம், அக்பரைப் பார்ப்ப தற்காக பீர்பல் உள்ளே நுழைந்தார்.

உடனே அக்பர், அவரைப் பார்த்து, "ராணியைப் பார்த்தாயா! எல்லாப் பழங்களையும் தானே சாப்பிட்டு விட்டு, தோல்களையும், கொட்டைகளையும் தன் முன்னால் போட்டுக் கொண்டிருக்கிறாள்!" என்றார்.

அதற்கு பீர்பல், "ராணி தேவலையே! பழங்களை மட்டும் சாப்பிட்டுவிட்டு, தோல்களையும், கொட்டைகளையும் முன்னால் எறிந் திருக்கிறார். ஆனால் தாங்களோ, அவற்றையும் அல்லவா சாப்பிட்டு விட்டீர்கள்!" என்றார். ●

● சர்ச்சில் எழுபத்தைந்து வய தாக இருந்தபோது, "சாவைக் கண்டு உங்களுக்குப் பயம் உண்டா!" என்று ஒருவர் அவரைக் கேட்டார். அதற்குச் சர்ச்சில், "கடவுளைச் சந்திக்க நான் தயாராகத்தான் இருக்கிறேன். ஆனால் கடவுள் என்னைச் சந்திக்கத் தயாராக இருக்கிறாரா என்பதுதான் சந் தேகம்" என்று பதில் சொன்னார்.

உதவிக்கரம் நீட்டுவார்கள். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். வாழ்க்கைத்துணைவி அல்லது துணைவரால் அனுகூலம் உண்டாகும்.

குடும்பநலம் சீராக இருந்துவரும். நற்பணி களுக்காக ஓரிரு செலவுகளை மேற்கொள்ள நேர லாம். 22 ஆம் தேதி முதல் மக்கள் நலனில் கவனம் செலுத்துவது நல்லது. 29 ஆம் தேதியிலிருந்து எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்களைச் சேர்ந்த வர்கள் சுபிட்சம் காண்பார்கள். நிறுவன நிர்வாகத் துறையினருக்கு வெற்றி வாய்ப்புகள் கூடும். ஓரிரு அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடிவரும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்புப் பெறுவார்கள். கணவன், மனைவியரிடையே களிப்புறவு கூடும். புதிய ஆடை, அணிமணிகள், அலங்காரப்பொருட்களின் சேர்க்கை நிகழும். இனிய சுபாவம் காரணமாக மற்றை யோரிடம் அன்புடன் பழகி, அவர்களால் நலம் பெறுவீர்கள். பெற்றோரால் அனுகூலம் உண் டாகும். டிசம்பர் 15,22,24,26,27,28,30,31 ஜனவரி 3,5,6,8,9,12 தேதிகள் சிறப்பானவை. வடக்கும், தென்மேற்கும், கிழக்கும் அனுகூலமான திசைக ளாகும். விருச்சிக, தனுசு ராசிக்காரர்கள் உதவு வார்கள். 1,4,5 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மீனம் : (பூரட்டாதி 4 ஆம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

குரு, சனி ஆகியோரது பலம் காரணமாக உங்கள் தோற்றப்பொலிவும், செயல்திறமையும் வெளிப் படும் நேரமிது. நல்லவர்கள் நண்பர்களாவார்கள். நிர்வாகத்திறமை வெளிப்படும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் ஆக்கம் தரும். தெய்வப் பணிகளில் ஈடுபடக்கூடிய சந்தர்ப்பம் கனிந்துவரும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மிகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். அரசியல்வாதிகளுக்கும், அரசுப் பணியாளர்களுக்கும் செழிப்பான பாதை புலப் படும். கூட்டுத் தொழில் லாபம் தரும். கணவன், மனைவியரிடையே களிப்புறவு கூடும். தொழி லாளர்கள், விவசாயிகள், உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் தங்கள் எண்ணம் நிறைவேறப் பெறு வார்கள். கறுப்புநிறப் பொருட்கள் லாபம் தரும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண் பார்கள்.

பொதுநலப்பணியாளர்கள் வரவேற்பு கூடப் பெறுவார்கள். 22 ஆம் தேதி முதல் செவ்வாய் 4 ஆமிடம் புகுவதால் பயணத்தின்போதும், இயந் திரங்களில் பணியாற்றும்போதும் பாதுகாப்பு அவசியம் தேவை. பெற்றோர் நலம் சீராகவே இருந்துவரும். மக்களால் ஓரிரு எண்ணங்கள் ஈடேறும். 29 ஆம் தேதி முதல் வியாபாரிகளுக்கு உற்சாகம் கூடும். மாணவர்கள் மந்தநிலை விலகப் பெறுவார்கள். சொந்தமாகத் தொழில் செய் பவர்கள் முன்னேற்றமான சூழ்நிலையைக் காண் பார்கள். நற்பணிகளுக்காக ஓரிரு செலவுகளை மேற்கொள்ள வேண்டிவரும். உங்கள் ஜனன கால ஜாதகப்படி தற்சமயம் யோக பலம் உள்ள தசை, புத்தி, அந்தரங்கள் நடைபெறுமானால் சுபபலன்கள் மேலும் கூடும். உடன்பிறந்தவர்களால் சிறுசிறு தொல்லைகளுக்கு ஆட்பட நேரலாம். டிசம்பர் 15,18,22,24,26,27,28,30,31 ஜனவரி 3,5,6,8,9, 12,13 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, மேற்குத் திசைகள் அனுகூலமானவை. கன்னி, தனுசு, மகர, ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3,6,7,8 எண்கள் அனுகூலமானவை.

சென்னை - 2இல் உள்ள ஆர்.ஜே. ப்ராசஸ் ஆப்செட் அச்சகத்தில் அச்சிட்டவர் : ஆர். ஜனார்த்தனன், ஸ்ரீராம் டிரஸ்ட், சென்னை - 600 001 சார்பில் வெளியிட்டவர் : ஏ.வி.எஸ். ராஜா, ஆசிரியர் - விக்கிரமன், நிர்வாக அலுவலகம், த.பெ.எண் : 5043, 145, லிங்கிச் செட்டி தெரு, சென்னை - 600 001.